யோவான் எழுதின சுவிசேஷம்
வசனம் வசனமாக
(அதிகாரங்கள் 17–21)

வேத பாடசாலை
67, பராக்கா ரோடு
கீழ்ப்பாக்கம்
சென்னை – 600 010

The Gospel of John (Ch. 17-21)
Booklet - 28
Tamil

© IBL 2003

Cover Credit : Cynthia Kingston
Printed by :

For additional booklets write to:
India Bible Literature,
67, Beracah Road, Kilpauk,
Chennai - 600 010.

Ph: 26425166 Fax: 26428298
E-mail: ibi.maa@iblchennai.org

முகவுரை

யோவான் எழுதின சுவிசேஷத்துக்கு வசனம் வசனமாக விளக்கம் கொடுத்துள்ள ஆறு சிறு நூல்கள் அடங்கிய இத்தொடரின் கடைசிப் பகுதிக்கு உங்களை வரவேற்கிறேன்.

அப்போஸ்தலனாகிய யோவான் தான் இந்த நான்காம் சுவிசேஷத்தை எழுதின நோக்கத்தைக் கீழ்க்கண்டவாறு தெளிவு படுத்தினார்: ''இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத் தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது'' (20:30, 31).

யோவானுடைய சுவிசேஷத்தில் பரிசுத்தங்களுக்கெல்லாம் பரிசுத்தமாக விளங்கிய பதினேழாம் அதிகாரத்தில் நாம் நம்முடைய பாடத்தைத் துவங்குகிறோம். இந்தப் பாடத்தில், யோவான், கிறிஸ்துவாகிய இயேசுவை நாம் விசுவாசித்து, அவர் நாமத்தில் ஜீவனைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளை அழகாகக் கூறியுள்ளார்.

அத்தியாயம் ஒன்று

கர்த்தரின் ஜெபம்

(17:1–5)

பதினேழாம் அதிகாரத்தில் ''கர்த்தரின் ஜெபம்'' என்று அழைக்கப் படும் ஜெபத்தை நாம் பார்க்கிறோம். இயேசு தமது சீஷர்களுக்குக் கற்றுத் தந்த ஜெபத்தை ''கர்த்தரின் ஜெபம்'' என்று அநேகர் அழைக்கின்றனர் (மத்தேயு 6:9–13). அந்த ஜெபம் உண்மையிலேயே ''சீடர்களின் ஜெபம்'' என்றுதான் அழைக்கப்பட வேண்டும். தன் சீடர்களுக்கு ஜெபிக்கக் கற்றுத்தந்த விதத்தில் அவர் ஜெபிக்கவில்லை. உதாரணமாக, பாவங்களுக்கான மன்னிப்பை வேண்டி அவர் ஜெபிக்கவில்லை. நாம் இப்பொழுது கர்த்தர் ஜெபித்த ஜெபத்தைக் காணப் போகிறோம் – அந்த ஜெபத்தை நாம் ''கர்த்தரின் ஜெபம்'' என்று அழைக்க வேண்டும்.

''கர்த்தரின் ஜெபம்'' என்று நாம் அழைக்க வேண்டிய இன்னொரு ஜெபம் உண்டு. அது மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகிய மூன்று சுவிசேஷங்களிலும் காணப்படுகிறது. சிலுவையைச் சந்திக்கும் முன்பு, இயேசுவின் வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழும்படி பின்வரும் ஜெபத்தை அவர் ஏறெடுத்தார்: ''பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக்கடவது'' (லூக்கா 22:42).

யோவான் பதினேழாம் அதிகாரத்தில் காணப்படும் இந்த ஜெபத்தை ''பிரதான ஆசாரியனாக இயேசுவின் ஜெபம்'' என்று அழைக்கலாம். பதினொரு சீடர்களுடன் மேலறையில் இருந்தவராய், தம் சீடர்களுக்காகவும் சிலுவையில் மரிக்குமுன் தாம் சந்திக்க வேண்டிய நேரங்களுக்காகவும் அவர் ஜெபிக்கும்போது, எல்லாப் போதனைகளின் மீதும் அவர் ஆசீர்வாதத்தைக் கூறுகிறார்.

அவருடைய ஜெபம் இப்படியாகத் துவங்குகிறது: ''பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும்

அவர் நித்திய ஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங்கொடுத்தபடியே, உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்.

''ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன். பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியைகளைச் செய்துமுடித்தேன்.

''பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்'' (1–5).

''இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து...'' என்று யோவான் எழுதுகிறார். இங்கு மேலறையில் இயேசு தாம் அளித்த போதனைகளைக் குறிப்பிடுகிறார்.

ஜெபத்தின்மீதான ஒரு கண்ணோட்டத்துடன் இயேசுவின் நீண்ட ஜெபத்தைப் பற்றிய நமது படிப்பை இப்பொழுது நான் ஆரம்பிக்க விரும்புகிறேன். ஜெபம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட வேண்டும். நான் மேலே குறிப்பிட்ட ஐந்து வசனங்கள் ஜெபத்தின் முதல் பிரிவாகும். வசனங்கள் ஆறிலிருந்து பத்தொன்பது வரை ஜெபத்தின் இரண்டாவது பகுதியாகும். இந்தச் சிறந்த ஜெபத்தின் மூன்றாம் பகுதி இருபதாம் வசனத்தில் ஆரம்பித்து இருபத்தியாறாம் வசனத்தில் நிறைவுபெறுகிறது.

''சீடர்களின் ஜெபத்தில்'' தேவனைத் தமது பிதாவாக அழைத்தபின்பு பிதாவிடம் அவர் கூறிய முதல் வார்த்தைகள் ''வேளை வந்தது'' என்பதாகும். இந்தச் சொற்றொடரை யோவான் சுவிசேஷம் முழுவதிலும் இயேசு பயன்படுத்துகிறார். அந்த வேளை என்பது நிமிடத்தைக் குறிப்பதல்ல. நமது இரட்சிப்புக்காகச் சிலுவையில் அவர் மரிக்கப்போகும் நேரத்தை அது குறிக்கிறது.

இந்த ஜெபத்தின் முதல் வசனங்களில் (நித்திய) ஜீவன் பிதாவையும், அவரால் அனுப்பப்பட்ட குமாரனையும் அறிவதற்காகத்தான் என இயேசு நமக்குக் கூறுகிறார்.

இயேசு, தமது சொந்த வாழ்க்கையையும், கிரியையும் பிதாவின் முன்பாகச் சமர்ப்பிக்கிறார். அவர் ஜெபிப்பதை நாம் கேட்கும்போது, தேவனை எவ்வாறு நாம் மகிமைப்படுத்த முடியும் என்பதை அவர் நமக்குக் கூறுகிறார். பிதா அவரிடம் ஒப்படைத்த பணிகளை அவரது முப்பத்து மூன்று வருட வாழ்க்கையில் செய்து முடித்ததின்மூலம் பிதாவை

அவர் மகிமைப்படுத்தினார். அதே வகையில் நாம் தேவனை மகிமைப்படுத்துகிறோம். இயேசு இந்தப் பூமியில் தமது வாழ்க்கையையும் கிரியையும் குறித்துக் கரிசனை கொண்டிருந்ததுபோல, நீங்களும் நானும் இந்தப் பூமியில் நமது வாழ்க்கையையும் பணிகளையும் குறித்துக் கரிசனைகொள்ள வேண்டும்.

நல்ல கிரியைகளினால் நாம் இரட்சிக்கப்படவில்லை என்ற உண்மையை அப்போஸ்தலனாகிய பவுல் வலியுறுத்தும்போது, நாம் நற்கிரியைகளைச் செய்யும்படியாக இரட்சிக்கப்பட்டோம் என்பதையும், நமது கர்த்தரும் இரட்சகருமானவருக்காக அந்த நற்கிரியைகளை நாம் செய்ய வேண்டுமென தேவன் ஆயத்தம்பண்ணியிருக்கிறார் என்ற உண்மையையும் அவர் வலியுறுத்துகிறார் (எபேசியர் 2:8–10).

அதாவது, தேவன் நம்மை இரட்சிக்கும்போது நமது இரட்சிப்புக்கான ஒரு நோக்கமும் உண்டு என்பதாகும். உண்மையாகவே, நித்திய வாழ்விலும் (பரலோகத்திலும்) ஒரு நோக்கம் உண்டு. ஆனால், நம்மை இரட்சித்த அந்த நேரத்திலிருந்து பரம வீட்டுக்கு நம்மை அழைத்துக்கொள்ளும் வரை நமது இரட்சிப்புக்கு ஒரு நோக்கம் உண்டு. அதற்காகவே, அவர் நம்மைத் தெரிந்தெடுத்து, நம்மை இரட்சித்து, நம்மை அழைக்கிறார் (யோவான் 15:16; எபேசியர் 2:8–10). இயேசு, தாம் செய்ய வேண்டுமென்று பிதா விரும்பிய வேலைக்காக ஜெபித்ததுபோல, நாமும் அவருக்காக எந்த வேலையைச் செய்ய வேண்டுமென கர்த்தர் நம்மைத் தெரிந்தெடுத்தாரோ அதைக் குறித்து ஜெபித்துக்கொண்டிருக்க வேண்டும்.

ஜெபத்தின் இந்த முதல் பகுதியிலுள்ள அவரது இறுதியான விண்ணப்பம் படைப்பைப் பற்றியும், இயேசுகிறிஸ்துவின் ஆள்தத்துவத்தைக் குறித்தும் நமக்குச் சொல்லுகிறது. ஆதியாகமத்தின் முதல் அதிகாரத்தில் காணப்படும் படைப்புகளின் விவரம், எபிரெய மொழியில் சிருஷ்டிகரைப் பற்றிக் குறிப்பிடும்போது பன்மையில் பயன்படுத்தப்படுகிறது. ''நமது சாயலாக, நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக...'' என நாம் வாசிக்கிறோம். மேலறையில் நடந்த சம்பாஷணையைப் படித்ததிலிருந்து தேவன் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியாக மூன்று ஆள்தத்துவத்தில் நமக்கு வெளிப்படுகிறார் என்பது தெளிவாகிறது.

''பிதாவே, உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்'' என இயேசு ஜெபிப்பதை நாம் கேட்கும்போது உலகம் உண்டாவதற்கு முன்பே இயேசு இருந்தார்

என்பதையும் அற்புதமான படைப்பின் கிரியையில் பங்கேற்றார் என்பதையும் நாம் அறிகிறோம் (யோவான் 1:3). படைப்பின் ஆரம்ப நிலைகளில் ஆவியானவர் அசைவாடிக் கொண்டிருந்தார் என நமக்குச் சொல்லப்பட்டதிலிருந்து தேவன் உலகத்தைச் சிருஷ்டித்தபோது, அற்புதமான படைப்பில் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஒன்றுசேர்ந்து பூரண இசைவுடன் படைப்பின் வேலையைச் செய்தார்கள் என்பதை நாம் கற்பனைசெய்துகொள்ள முடியும்.

மேலும் இயேசுவின் இந்த விண்ணப்பத்திலிருந்து, அவர் பெத்லகேமில் பிறந்ததிலிருந்துதான் அவர் இந்த உலகில் தமது வாழ்வை ஆரம்பிக்கவில்லை என்பதை அறிகிறோம். அறிஞர்கள் இதனை pre-incarnate-existence (இயேசுவாக அவதாரம் எடுக்குமுன்பே அவர் இருந்தார் என்பது) என அழைக்கின்றனர். இதன் அர்த்தம் என்னவென்றால், நித்தியமான வார்த்தை மாம்சமாவதற்கு முன்பே அவர் உயிர்வாழ்ந்து, நமக்குள் வாசம்பண்ணினார் என்பதாகும் (யோவான் 1:1, 14). உண்மையிலேயே இயேசு ஐந்து வேறுபட்ட வடிவங்களில் இருந்தார். அவர் மாம்சமாகி, பெத்லகேமில் பிறக்கு முன்பே இருந்தார். அவர் சரீரத்தில் முப்பத்துமூன்று வருடங்கள் வாழ்ந்தார். உயிர்த்தெழுந்த பின்பு நாற்பது நாட்கள் மகிமையான உயிர்த்தெழுந்த சரீரத்துடன் இயேசு வாழ்ந்தார்.

''மறுரூப மலை'' என்று நாம் அழைக்குமிடத்தில் இயேசுவுடன் மூன்று அப்போஸ்தலர்கள் இருந்தனர். இந்த மூன்று அப்போஸ்தலர்கள் முன்பாக இயேசு மறுரூபமானார் என்று மத்தேயு எழுதுகிறார். ''அவர் முகம் சூரியனைப் போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப் போல வெண்மையாயிற்று.'' அவர் மோசேயோடும் எலியாவோடும் பேசினதோடல்லாமல், முற்றிலுமாக அவர் மாறியிருந்தார். ''மறுரூபமாகுதல்'' என்று மத்தேயு இங்கே பயன்படுத்தும் வார்த்தை உண்மையிலேயே ஒரு கூட்டுப் புழு பட்டாம் பூச்சியாக உருமாறும் செயலை விவரிக்க நாம் பயன்படுத்தும் ''உருமாற்றம்'' (metamorphosis) என்ற வார்த்தை ஆகும் (17:2). இயேசு இருந்த பல்வேறு வடிவங்களைக் குறித்து நாம் பரிசீலிக்கும்போது அவரது மறுரூபமாகுதலையும் நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

யோவானும் மற்ற அப்போஸ்தலர்களும் உயிர்த்தெழுந்த சரீரத்துடனிருந்த இயேசுவைப் பார்த்து உணர்ந்த உண்மையைத் தனது முதல் அதிகாரத்தில் நிரூபித்த பின்பு, ''இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை. ஆகிலும்... அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போம்'' என எழுதுகிறார் (1 யோவான் 3:1, 2). இது ''இப்பொழுது அவர் எந்த வடிவில் இருக்கிறார்?'' என்று

கேட்கும்படி நம்மைத் தூண்டுகிறது. பெந்தெகொஸ்தே நாளில் தனது பிரசங்கத்தில், தேவனுடைய வலது பாரிசத்தில் கிறிஸ்து உட்கார்ந்திருக்கிறார் என பேதுரு நமக்குச் சொல்லுகிறார் (அப். 2:33). இன்று கிறிஸ்து நமது இருதயத்திற்குள் வசிக்கிறார் என்பதே நமது ஒரே நம்பிக்கையென பவுல் எழுதுகிறார் (கொலோ. 1:27).

இந்த ஜெபத்தின் ஆரம்ப பத்தியிலுள்ள கடைசி விண்ணப்பம் என்னவென்றால், இயேசுவுடன் மூன்று வருடங்கள் வாழ்ந்த அப்போஸ்தலர்கள் கேட்ட கேள்வியை நாமும் கேட்கும்படியாகச் செய்யக்கூடிய ஆழமான ஒரு விண்ணப்பமாகும். அந்தக் கேள்வி ''இந்த மனிதர் இயேசு யார்?'' (மாற்கு 4:41) என்பதாகும்.

ஜெபத்தின் இரண்டாவது பிரிவில் (6–19) அவர் அதிகமாக யாரிடம் தன் போதனைகளையெல்லாம் முதலீடு செய்தாரோ அந்த பதினொரு மனிதர்களுக்காகவும் ஜெபித்தார். அவர் அவர்களைத் தெரிந்தெடுத்து, மூன்று வருடங்கள் அவர்களுக்குப் போதித்து, அவர்களைப் பயிற்றுவித்தார். அவர் இப்பொழுது அவர்களைத் தம்முடைய பிரதிநிதிகளாக நியமித்து, இந்த உலகைச் சந்திக்க அவர்களுக்கு வல்லமையளித்தார். மக்களிடம் அவர் மூன்று வருடமாகச் செய்த ஊழியம் முழுவதும் அவர்கள் இயேசுவுடன் தொடர்ந்து இருந்தனர். நியாயமில்லாத சில விசாரணைகளையும் சிலுவையையும் அவர் சந்திக்கும் முன்பு, அவர்களுக்காக அவர் கடைசியாகச் செய்தது அவர்களுக்காக ஜெபித்ததுதான்.

அப்போஸ்தலர்களுடன் தமது கடைசி விருந்தின்போது இயேசு அவர்களுக்குக் கொடுத்த புதிய கட்டளையின் சாராம்சம் என்னவென்றால், இந்த உலகில் வித்தியாசமான புதிய ஆவிக்குரிய ஒரு கூட்ட மக்களை (a unique new spiritual community) அவர்கள் ஏற்படுத்த வேண்டும் என்ற அவரது பாரமாகும். அவர்கள் ஒன்றாயிருக்க வேண்டும் என்ற விண்ணப்பத்தை இயேசு திரும்பத் திரும்பச் சொல்லுவதைக் கவனியுங்கள். அவர்களுக்காக ஐந்து முறை அவர் ஜெபிக்கும்போதும், அவர்கள் மூலமாக விசுவாசிக்கப் போகிறவர்களுக்காக ஜெபிக்கும்போதும் அவர் பிதாவிலும் பிதா அவரிலும் ஒன்றாயிருந்ததுபோல அவர்களும் ஒன்றாயிருக்க வேண்டும் என இயேசு ஜெபித்தார்.

மேலறையில் செய்த போதனையின் சாராம்சமானது ''நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறார். நான் செய்பவைகளும் சொல்லுபவைகள் அனைத்தும், நான் பிதாவிலும், அவர் என்னிலும் இருக்கிறார்'' என்ற உண்மையின் வெளிப்பாடாகும். இந்த ஜெபத்தின் இரண்டாவது மற்றும் மூன்றாவது பிரிவுகளில் அவரது சீடர்கள்

அவருடனும், ஒருவரோடொருவருடனும் ஒரே சிந்தையாயிருக்க வேண்டும் என்றார்.

ஜெபத்தின் இந்த இரண்டாம் பகுதியில், அவர் ஜெபிப்பதைக் கவனியுங்கள்: ''நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள்.

''நீர் எனக்குத் தந்தவைகளெல்லாம் உம்மாலே உண்டாயின வென்று இப்பொழுது அறிந்திருக்கிறார்கள். நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள்'' (6–8).

பதினாறாம் அதிகாரத்தில், அவரில் அவர்கள் இன்னும் நம்பிக்கை கொள்ளவில்லை என்ற எண்ணத்தை அவர் தருகிறார். ஆனால், அவர்களுக்காக அவர் ஜெபிக்கும்போது, அவருடைய வார்த்தையை அவர்கள் ஏற்றுக்கொண்டனர் என்றும், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தனர் என்றும், அதனை நம்பினர் என்றும் சொல்லுகிறார். ஒருவேளை, பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் வல்லமையால் அவர்களை நிரப்பும்போது எப்படியிருக்கப் போகிறார்களோ அப்படி அவர்களை அவர் பார்க்கலாம்.

அவருடைய வார்த்தையை நம்பி, ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படிவதினால் இந்த மனிதர்களை உலகம் வெறுக்கிறது. அவர் பிதாவிடம் திரும்பிப் போகிறார். அவர்கள் உலகத்தில் இருக்கையில் பிதா அவர்களைப் பாதுகாப்பார் என இயேசு ஜெபிக்கிறார். அவர்கள் உலகத்தில் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் உலகத்தாரல்ல! அவர்களோடு அவர் இருந்தபோது, அவர்களைப் பாதுகாத்தார். ஆனால் இப்பொழுது தீமையிலிருந்து அவர்களைக் காக்கும்படி பிதாவிடம் அவர் கேட்கிறார். சீடர்களின் ஜெபத்தில் ''தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்'' என்று தினமும் வேண்டிக்கொள்ளும்படி அவர் அவர்களுக்குக் கற்றுத் தருகிறார் (மத். 6:13). தீமையான ஒன்றின் சக்தியை, உலகத்தை வென்றவரின் மேல் வைக்கும் விசுவாசத்தின்மூலம் மேற்கொள்ள முடியும் என இயேசு தொடர்ந்து வெளிப்படுத்தினார் (16:33; 1 யோவான் 4:4; 5:4).

கொடுப்பதை இயேசு வலியுறுத்துகிறார்

பிதா தமக்கென்று கொடுத்தவர்கள் இவர்கள் என இந்த மனிதர்களை இயேசு விவரிக்கிறார். பிதா குமாரனுக்குக் கொடுக்கிறார்

என்பதைக் குறித்துக் கொள்ளவும். குமாரன் இந்த மனிதர்களுக்குக் கொடுக்கிறார். அது மட்டுமல்லாது, பிதா குமாரனிடம் கொடுத்து, குமாரன் அவர்களிடம் கொடுத்த அனைத்தையும் இந்த உலகத்திற்கு அப்போஸ்தலர்கள் கொடுப்பார்கள் என குமாரன் ஜெபிக்கிறார். இந்தப் பகுதியில், புதிய ஏற்பாட்டின் வார்த்தையான ''ஐக்கியம்'' என்பதின் ஆழமான விளக்கத்தைக் கவனியுங்கள். இந்த வார்த்தையின் எழுத்துபூர்வமான அர்த்தம் என்னவென்றால் ''பங்குதாரர்'' என்பதே.

சம பங்குடைய ஒரு வியாபாரத்தில், உன்னுடையது யாவும் உன் பங்குதாரருக்குச் சொந்தமாகும். அவனுக்கென்று உள்ளதெல்லாம் உன்னுடையதாகும். இந்தச் செயல்பாட்டை, பிதாவோடு அவருக்குள்ள உறவிலும், இந்த மனிதர்களுடன் அவர் வைத்திருக்கும் உறவிலும் இயேசு நடைமுறைப்படுத்துகிறார். ''என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள்.'' ''உம்முடையவைகள் என்னுடையவைகள்'' என கிறிஸ்துவிடம் நாம் சொல்வதுதான் இந்த விளக்கத்திலுள்ள தெய்வீக ஆசீர்வாதமாகும். ஜெபத்தில் அவரிடம் ''என்னுடையவைகள் யாவும் உம்முடைய வைகள்'' எனச் சொல்வதே சவாலாகும்.

உலகத்திற்குள், ஆனால் உலகத்திற்காக அல்ல

பிதா அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமல், உலகத்தில் அவர்கள் சந்திக்கும் தீமையிலிருந்தும் ஆபத்திலிருந்தும் அவர்களைக் காக்க வேண்டுமென அவர் ஜெபிக்கிறார். அவரால் தெரிந்தெடுக்கப்பட்ட மெழுகுவர்த்தி பொருத்திவைக்கும் தண்டிலுள்ள மெழுகுவர்த்திகள்போல, பூமியிலுள்ள ஒவ்வொரு ஜாதியிலும் சீடர்களை ஏற்படுத்தும் வேலைக்காக உலகத்திற்குள் அவர்களை அனுப்புகிறார்.

அவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகவும், சத்தியத்தின்மூலம் பிதாவிடம் பிரித்தெடுக்கப்பட்டவர்களாகவும் இருக்கும்படி அவர் ஜெபிக்கும் போது அவர் நமக்கு இன்னொரு தெய்வீகமான பொருளைத் தருகிறார். ஒவ்வொரு போதகரும் அல்லது ஆவிக்குரிய தலைவரும், எவர்களுக்காக பரிசுத்த ஆவியானவர் தங்களை மேய்ப்பராக ஏற்படுத்தினாரோ, அவர்களுக்காக ஜெபிக்கும்போது பின்வரும் ஜெபத்தைச் சவாலாக ஏற்று ஜெபிக்க வேண்டும்: ''அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்ட வர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்'' (17:19).

தேவனுடைய வார்த்தையை எவ்வாறு அணுகுவது என்பதற்கான விளக்கத்தை அவர் இந்தப் பகுதியில் கொடுக்கிறார். சத்தியத்தின்படி

அவர்களைப் பரிசுத்தப்படுத்துமாறு பிதாவை அவர் கேட்கிறார். பின்பு, ‘‘உம்முடைய வசனமே சத்தியம்’’ என்ற அறிவிப்பைக் கொடுக்கிறார் (வச. 17). இயேசுவைப் பொருத்தவரையில் வேதாகமமே சத்தியமாகும். சத்தியத்திற்காக நாம் வேதாகமத்தை அணுக வேண்டும். அநேகர் ‘‘அது என்ன?’’ என்ற கேள்வியுடன் வேதாகமத்தைப் படிக்கின்றனர். வேறு வார்த்தைகளில் விளக்க வேண்டுமானால், ‘‘நான் படிப்பதின் இலக்கிய பூர்வமான வடிவம் என்ன? அது சரித்திரமா, கவிதையா, பிரசங்கமா, உவமையா, புராணக்கதையா அல்லது நல்லொழுக்கத்தைப் போதிக்கும் கட்டுக்கதையா?’’ என்ற எண்ணத்துடன் அவர்கள் படிக்கலாம்.

இந்தச் சுவிசேஷத்தின் ஆரம்பத்தில், இயேசுவின் போதனையில் நாம் கண்ட சத்தியத்தை நாம் வாழ்க்கையில் செயல்படுத்தப் போகிறோம் என்ற அர்ப்பணிப்புடன் அவரது போதனையை நாம் அணுக வேண்டும். சத்தியத்தை நாம் வாழ்க்கையில் பயன்படுத்தும்போது, இயேசுவின் போதனைகள் தேவனுடைய வார்த்தையென நாம் நிரூபிக்கிறோம். தெரிந்து கொள்ளுதல் எப்பொழுதும் செயல்படுத்துதலுக்கு வழிநடத்தாது என்பதை இயேசு உண்மையாகவே கற்றுத்தந்தார். அவர் கற்றுத்தந்ததும், என்னுடைய அனுபவமும் என்னவென்றால், வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்ற தீர்மானத்திற்கு செயல்கள்தான் வழிநடத்துகிறது என்பதாகும்.

அவரது சபைக்காக இயேசு ஜெபிக்கிறார்

ஜெபத்தின் மூன்றாவது பகுதியில் (20–26) இந்தப் பதினொரு சீடர்களால் விசுவாசிக்கப் போகிற மக்களுக்காக இயேசு ஜெபிக்கிறார். அதன் அர்த்தம் என்னவென்றால், இந்தப் பதினொரு மனிதர்களின் சாட்சியின் மூலம் கிறிஸ்து எழுப்பிக்கொண்டிருக்கும் திருச்சபையில் இருபது நூற்றாண்டுகளுக்கு மேல் மக்கள் நம்பிக்கை வைத்து, அதன் ஒரு பகுதியாக மாறியதின் காரணமாக அவர் உனக்காகவும் எனக்காகவும் ஜெபிக்கிறார் என்பதாகும்.

இந்த ஜெபத்தின் இறுதிப் பகுதியில், அவர் உனக்காகவும் எனக்காகவும் இப்படியாக ஜெபிக்கிறார்: ‘‘நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

‘‘அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறது போல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை

நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும் நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்’’ (20–23).

அவருடைய ஜெபத்தின் இந்த மூன்றாம் பகுதியைப் பரிசீலிக்கும் போது, பிதாவும் அவரும் ஒன்றாயிருப்பதின்மூலம் நாமும் ஒன்றாயிருப்பதை அவர் விரும்புவதை மாதிரியாகக் காட்டுகிறார். இந்தச் சுவிசேஷத்தின் பத்தாவது அதிகாரத்தில், ‘‘அவரும் பிதாவும் ஒன்று’’ (10:30) என்பதை அவர் நமக்குக் கூறுகிறார். அவர்களின் ஒற்றுமை, நாம் பிதாவிலும், நமது இரட்சகரிலும் மற்றும் ஒருவருக்கொருவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்பதற்கு மாதிரியாக இருக்கிறது.

இந்த ஒருமைப்பாட்டைப் பற்றிய ஆரம்ப விவரித்தலும் செயல்பாடும் இயேசுவின் கிரியை மற்றும் அவரின் வார்த்தைகளின் வல்லமையைக் காட்டுகிறது. அது அவரும் பிதாவும் ஒன்று என்ற அற்புதமான உண்மையை எடுத்துரைக்கிறது. திராட்சச் செடியும் அதன் கொடிகளும் என்ற உதாரணத்தின் மூலம் அவர் இதைச் சீடர்களுக்குக் கூறினார். ‘‘நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும்...’’ (வச. 21). ஒற்றுமையைப் பற்றி இந்த வகையில் இயேசு விவரித்ததோடல்லாமல் அந்த ஒற்றுமையை அப்போஸ்தலர்களுக்கும், அதை நம்பி திருச்சபையின் வரலாறு முழுவதும் அவரது சபையின் பகுதியாக மாறியவர்களுக்கும் கொடுக்கும்படி பிதாவிடம் இயேசு கேட்கிறார்.

‘‘பிதாவே, உலகத் தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்’’ (வச. 24).

இந்த வசனத்தில், அவருடைய மகிமையைக் காணும்படியாக அந்தப் பதினொரு மனிதர்களும் தம்முடன் இருக்க வேண்டுமெனத் தாம் விரும்புவதை இயேசு அறிவிக்கிறார். திருச்சபையில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து தமக்கென்று சீடர்களை உருவாக்குபவர்களுடன் தாம் இருப்பதாக இயேசு வாக்குப்பண்ணுகிறார் (மத். 28:18–20).

உலகம் அதைத் தெரிந்துகொண்டு விசுவாசிக்கலாம்

மேலறையில், இந்த மனிதர்களிடம், இயேசு தாம் கூறிய ஒற்றுமையை அவர்கள் அனுபவபூர்வமாக உணரும்போது, தாம் செய்ததைவிட மகத்தான காரியங்களைச் செய்வார்கள் என்று இயேசு

கூறினார். இந்த மனிதர்களுக்குப் பயிற்சிகொடுக்க மூன்று வருடங்களை அவர் ஏன் செலவழித்தார் என்பதை நாம் இப்பொழுது உணருகிறோம். இந்த ஒருமைப்பாட்டை அவர்கள் அனுபவித்து, இந்த வேலைகளைச் செய்ய வேண்டுமென அவர் விரும்பினார். ஏனென்றால், பிதா அவரை இந்த உலகத்திற்கு அனுப்பினார் என்பதும், அவரது ஒரே குமாரனாகிய இயேசுவை அவர் நேசிப்பதுபோல் அவர்களையும் பிதா நேசிக்கிறார் என்பதுமான இரண்டு விசேஷித்த சத்தியங்களை உலகம் நம்ப வேண்டுமென்ற காரணத்தினால்தான்.

பல வகையில் இயேசுவின் இந்த ஜெபத்தின் நோக்கத்தைப் புரிந்து கொள்வதற்கான முக்கியமான தடயம் கடைசி இரண்டு வசனங்களில் காணப்படுகிறது: ''நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்; நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள்.

''நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும் படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; இன்னமும் தெரியப்படுத்து வேன்'' (17:25, 26).

இயேசு இந்த ஜெபத்தை ஜெபிக்கும்போது அவரது ஜெபத்தின் நோக்கம் இந்த உலகமாகும். இந்த உலகத்திற்காக அவர் ஜெபிக்கவில்லை என்று பிதாவிடம் அவர் கூறினாலும் இந்த ஜெபத்தில் உலகைப் பற்றிப் பத்தொன்பது முறை அவர் குறிப்பிடுகிறார். அவர் உலகத்திற்காகப் பாரம் கொண்டிருந்தது அவரது ஜெபத்திலுள்ள பின்வரும் வார்த்தைகளில் காணப்படுகிறது: ''நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை!'' உலகம் அறியவில்லையென்பதால் உலகத்திற்காக அவர் ஜெபிக்க வில்லையென அறிவிக்கிறார்.

அப்போஸ்தலர்கள் அறிந்ததினால் அவர்களுக்காக அவர் ஜெபித்தார். மூன்று வருடங்களாக அவர் மாதிரியாக இருந்து, பிரசங்கித்த இரண்டு உண்மைகளை அவர்கள் அறிந்துகொள்ளுமாறு ஜெபித்தார்: முதலாவது உண்மை, உலகத்தின் இரட்சிப்புக்காக தேவன் தமது ஒரேபேறான குமாரனை இந்த உலகத்தில் அனுப்பினார் என்பதாகும். இரண்டாவது உண்மை, தேவன் தமது ஒரேபேறான குமாரனை நேசித்ததுபோலவே இந்த உலகத்திலுள்ள மக்களையும் நேசிக்கிறார் என்ற அதிசயமான சத்தியமாகும்.

இந்தச் சுவிசேஷத்தின் மூன்றாவது அதிகாரத்தில் சுவிசேஷத்தின் இந்த இரண்டு உண்மைகளும் நமக்காகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன: ''தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன்

எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்'' (3:16).

இயேசு தமது சொந்த வாழ்க்கைக்காகவும் ஊழியத்துக்காகவும் ஜெபித்தபோது இந்த முதல் ஐந்து வசனங்களில் அவர் இந்த அப்போஸ்தலர்களுக்காக உண்மையிலேயே ஜெபித்தார். ஏனென்றால், இந்த மனிதர்கள் அவரது முக்கியமான பணியை நிறைவேற்ற வேண்டியிருந்ததால், அவர்களுக்காக ஜெபித்தார். அவர் இந்த ஜெபத்தை ஜெபித்து ஐந்து நூற்றாண்டுகள் கடந்த பின் ரோமாபுரி மக்கள் அனைவரும் அப்போஸ்தலர்களால் அறிவிக்கப்பட்ட விசுவாசத்தினால் நிறையப்பட்டனர். இந்த அப்போஸ்தலர்கள் தம் பிரசங்கத்தினால் நற்செய்தியை உலகுக்கு அறிவிக்க வேண்டுமென்ற இயேசுவின் திட்டத்தைப் பிதா வல்லமையாக ஆசீர்வதித்தபோது இந்த உன்னதமான ஜெபம் பதிலளிக்கப்பட்டது.

அத்தியாயம் இரண்டு

இயேசு கைதுசெய்யப்படுகிறார்

(18:1–27)

இந்த நான்காவது சுவிசேஷத்தின் இறுதி அத்தியாயங்களை நாம் நெருங்கும்போது, நான்கு சுவிசேஷங்களிலும் காணப்படும் இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைப் பற்றிய முழுமையான விவரங்களைக் குறித்துக் காண்கிறோம்.

யோவான் தனது கடைசி நான்கு அதிகாரங்களில், இயேசுகிறிஸ்து கைதுசெய்யப்படுதல், விசாரணைகள், அவர் சிலுவையில் அறையப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை விவரமாக எடுத்துக் கூறுகிறார்.

இந்தக் கடைசி நான்கு அதிகாரங்களின் துவக்கம் இயேசுவின் கைதைப் பற்றி விவரிக்கிறது. பதினெட்டாவது அதிகாரத்தை நாம் படிக்கத் துவங்கும் போது இப்படியாக நாம் படிக்கிறோம்: ''இயேசு இவைகளைச் சொன்ன பின்பு, தம்முடைய சீஷருடனேகூட கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போனார்; அங்கே ஒரு தோட்டம் இருந்தது. அதிலே அவரும் அவருடைய சீஷரும் பிரவேசித்தார்கள்.''

அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ் அந்த இடத்தை அறிந்திருந் தான். ஏனென்றால், இயேசு தம்முடைய சீஷர்களுடன் அடிக்கடி அந்த இடத்திற்குச் சென்றிருந்தார். ஆகவே, யூதாஸ் போர்ச்சேவகரின் கூட்டத்தோடும் பிரதான ஆசாரியர் பரிசேயர் ஆகியோரால் அனுப்பப்பட்ட சில அதிகாரிகளுடனும் அந்தத் தோட்டத்திற்கு வந்தான். அவர்கள் பந்தங்கள், தீவட்டிகள் மற்றும் ஆயுதங்களை ஏந்திவந்தனர்.

''இயேசு தமக்கு நேரிடப்போகிற எல்லாவற்றையும் அறிந்து, எதிர் கொண்டுபோய், அவர்களை நோக்கி: யாரைத் தேடுகிறீர்கள் என்றார். அவருக்கு அவர்கள் பிரதியுத்தரமாக: நசரேயனாகிய இயேசுவைத்

தேடுகிறோம் என்றார்கள். அதற்கு இயேசு: நான்தான் என்றார். அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவர்களுடனேகூட நின்றான். நான்தான் என்று அவர் அவர்களிடத்தில் சொன்னவுடனே அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள். அவர் மறுபடியும் அவர்களை நோக்கி: யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டார். அவர்கள்: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள்.இயேசு பிரதியுத்தரமாக: நான்தானென்று உங்களுக்குச் சொன்னேனே; என்னைத் தேடுகிறதுண்டானால் இவர்களைப் போக விடுங்கள் என்றார். நீர் எனக்குத் தந்தவர்களில் ஒருவனையும் நான் இழந்துபோக வில்லையென்று அவர் சொல்லிய வசனம் நிறைவேறத்தக்கதாக இப்படி நடந்தது.

''அப்பொழுது சீமோன் பேதுரு, தன்னிடத்திலிருந்த பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான்; அந்த வேலைக்காரனுக்கு மல்குஸ் என்று பெயர். அப்பொழுது இயேசு பேதுருவை நோக்கி: உன் பட்டயத்தை உறையிலே போடு; பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணா திருப்பேனோ என்றார்'' (18:1–11).

இந்த உலகிற்கு எதற்காக இயேசு வந்தாரோ அந்த வேளையையும் வேதத்திலுள்ளதையும் நிறைவேற்றினார் என்பதை யோவான் குறிப்பிடும் விதத்தைக் கவனிக்கவும். தேவனுடைய ராஜ்யத்தின் அமைப்பில் இந்தச் சம்பவங்களையும் நிகழ்ச்சிகளையும் வைக்கும்படியான விமரிசனத்தை யோவான் தொடர்ந்து புகுத்துகிறார். உதாரணமாக, தமக்கு நேரிடப் போவது அனைத்தையும் இயேசு அறிவார். அதுமட்டுமல்லாது, அவர் தமது அப்போஸ்தலர்களின் ஜீவனைக் காப்பாற்றும்போது வேதத்தில் சொல்லியிருப்பதை நிறைவேற்றுகிறார்.

பேதுருவை இயேசு கேட்கும் கேள்வியானது, அவர் பானம்பண்ணும் படியாக பிதாவானவர் திட்டமிட்ட பாத்திரத்தில் அவர் பானம்பண்ணப் போகிறார் என்ற பயங்கர உண்மையை வலியுறுத்துகிறது (வச. 11). மற்றச் சுவிசேஷங்களை எழுதியவர்கள், சிறப்பாக மத்தேயு இயேசுவைப் பற்றிய வாழ்க்கைச் சரித்திரத்திற்கு இந்த மாதிரியான விமரிசனத்தைச் சேர்க்கிறார்.

இயேசு மனிதனைவிட மேலானவர் என்ற உண்மையையும் யோவான் தொடர்ந்து வலியுறுத்துகிறார். இயேசு நான்தான் என்று அவர்களிடத்தில் சொன்னவுடனே, கைதுசெய்ய வந்தவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள் என்று யோவான் அறிவிக்கும்போது, அந்தக் குறிப்பு வெளிப்படுத்தப்படுகிறது (வச. 6).

இந்த வார்த்தைகள் யெகோவாவுக்குரிய வார்த்தைகள். நான் இருக்கிறவராகவே இருக்கிறேன், இருப்பேன் என்று வாசிக்கிறோ மல்லவா?

மேலேயுள்ள பகுதியிலுள்ள முக்கிய வார்த்தை என்னவென்றால், இயேசுவைக் கைதுசெய்ய வந்த போர்ச்சேவகர்களின் எண்ணிக்கையை விவரிக்க யோவான் பயன்படுத்தும் வார்த்தையாகும். இங்கு யோவான் பயன்படுத்தும் வார்த்தை ''கூட்டம்'' என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. அந்த வார்த்தை உண்மையிலேயே detachment/cohort என்பதைக் குறிக்கும். அதாவது இயேசுவானவரைக் கைது செய்ய அறுநூறு போர்ச்சேவகர்கள் வந்தார்கள் என்பது இதற்கு அர்த்தமாகும்.

ஒருவரைக் கைதுசெய்யும்போது அதிகமான போர்ச்சேவகர்களை அனுப்புவது ரோம இராணுவத்தின் வழக்கமாகும். இயேசுவைக் கைது செய்த போர்ச்சேவகர்கள் அநேக ஆயுதங்களைக் கொண்டு வந்திருக்கலாம். ஏனென்றால், தங்களுடன் இயேசுவின் சீடர்கள் சண்டை போடலாம் அல்லது கைதுசெய்வதைத் தடுக்க இயேசு அற்புதமான வல்லமையைப் பிரயோகிக்கலாம் என்றும் அவர்கள் பயந்திருந்தனர்.

இது, பேருவின் செயலைப் பிரசித்தமானதாக்கியது. பேதுரு உருவிய வாளைக் குறிக்க யோவான் பயன்படுத்திய வார்த்தை, ஒரு நீண்ட கத்தியைக் குறிப்பிட்டது. அந்த ஆயுதத்தை வைத்துப் பேதுரு என்ன செய்துகொண்டிருந்தான்? இயேசு ரோமாபுரியை முறியடித்து, பூமியில் அவரது ராஜ்யத்தை நிறுவப்போகிறார் என்ற மற்ற சில அப்போஸ்தலர்களின் முடிவுக்கு அவனும் வந்துவிட்டானா? (அப். 1:6).

கர்த்தரின் கைதுக்குப் பேதுரு செயல்பட்ட விதத்தைப் பல வழிகளில் விளக்க முடியும். அதில் ஒன்று, அறுநூறு ரோமப் போர்ச்சேவகர்களுக்கு எதிராக ஆயுதத்தை எடுத்தபோது, பேதுரு நம்ப முடியாத அளவு துணிச்சலைக் காட்டினான் என்பதாக இருக்கலாம். இன்னொன்று, நமது பகைவர்களை நாம் நேசிக்க வேண்டும் , தீமைக்கு எதிர்த்து நிற்கக் கூடாது (மத். 5:39, 44) என்று மலையில் இயேசு போதித்ததை வாழ்க்கையில் செயல்படுத்தும் அளவுக்குப் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பேதுருவுக்கு இல்லை எனக் கொள்ளலாம். அவன் தன்னுடைய ஆயுதத்தை உறையில் போடவேண்டுமென இயேசு பேதுருவிடம் சொன்ன வார்த்தைகள் மேலே சொன்ன இரண்டாவது விளக்கத்திற்கு ஆதரவாக உள்ளது.

யோவான் இப்படியாகத் தொடர்கிறார்; ''அப்பொழுது போர்ச் சேவகரும், ஆயிரம் போர்ச்சேவகருக்குத் தலைவனும், யூதருடைய ஊழியக்காரரும் இயேசுவைப் பிடித்து, அவரைக் கட்டி, முதலாவது அவரை அன்னா என்பவனிடத்திற்குக் கொண்டுபோனார்கள்; அவன்

அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவுக்கு மாமனாயிருந்தான். ஜனங்களுக்காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்குமென்று யூதருக்கு ஆலோசனை சொன்னவன் இந்தக் காய்பாவே.

''சீமோன் பேதுருவும் வேறொரு சீஷனும் இயேசுவுக்குப் பின்சென்றார்கள். அந்தச் சீஷன் பிரதான ஆசாரியனுக்கு அறிமுக மானவனாயிருந்தினால், இயேசுவுடனேகூடப் பிரதான ஆசாரிய னுடைய அரமனைக்குள் பிரவேசித்தான். பேதுரு வாசலருகே வெளியே நின்றான். அப்பொழுது பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமான வனாயிருந்த மற்றச் சீஷன் வெளியே வந்து, வாசல்காக்கிறவர்களுடனே பேசி, பேதுருவை உள்ளே அழைத்துக் கொண்டு போனான். அப்பொழுது வாசல்காக்கிற வேலைக்காரி பேதுருவை நோக்கி: நீயும் அந்த மனுஷனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றாள். அவன்: நான் அல்ல என்றான். குளிர்காலமானபடியினாலே ஊழியக்காரரும் சேவகரும் கரி நெருப்புண்டாக்கி, நின்று, குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள்; அவர்களுடனேகூடப் பேதுருவும் நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தான்'' (வச. 12–18).

இயேசு கைதுசெய்யப்பட்டபொழுது, இந்தப் பதினொரு அப்போஸ் தலர்களும் ஓடிவிட்டதினால், பேதுருவின் செயலுக்காக நாம் அவனைக் கடிந்துகொள்ளக்கூடாது.

அன்னாவின் முன்பு இயேசுவின் தோற்றத்தைக் குறித்து யோவான் நமக்குப் பின்வருமாறு விவரிக்கிறார்: ''பிரதான ஆசாரியன் இயேசு வினிடத்தில் அவருடைய சீஷரைக் குறித்தும் போதகத்தைக் குறித்தும் விசாரித்தான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் வெளியரங்க மாய் உலகத்துடனே பேசினேன்; ஜெபஆலயங்களிலேயும் யூதர்களெல் லாரும் கூடிவருகிற தேவாலயத்திலேயும் எப்பொழுதும் உபதேசித்தேன்; அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசவில்லை. நீர் என்னிடத்தில் விசாரிக்கவேண்டியதென்ன? நான் சொன்னவைகளைக் கேட்டவர் களிடத்தில் விசாரியும்; நான் பேசினவைகளை அவர்கள் அறிந்திருக் கிறார்களே என்றார்.

''இப்படி அவர் சொன்னபொழுது, சமீபத்தில் நின்ற சேவகரில் ஒருவன்: பிரதான ஆசாரியனுக்கு இப்படியா உத்தரவு சொல்லுகிறது என்று, இயேசுவை ஒரு அறை அறைந்தான். இயேசு அவனை நோக்கி: நான் தகாதவிதமாய்ப் பேசினதுண்டானால், தகாததை ஒப்புவி; நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில், என்னை ஏன் அடிக்கிறாய் என்றார். பின்பு அன்னா என்பவன் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத் திற்கு அவரைக் கண்டுண்டவராக அனுப்பினான்'' (வச. 19–24).

இயேசு கட்டுண்டவராக இந்த ரோமப் போர்ச்சேவகர்களால் நடத்தப்பட்ட விதம், ஒருவரைக் கைதுசெய்யும்போது கடைப்பிடிக்கப் படும் நிலையான ஒரு நடைமுறையாகும். அதில் வினோதமான செயல் என்னவென்றால், பிரதான ஆசாரியனாகிய காய்பாவிடம் அவரைக் கொண்டு செல்லுமுன்பு அன்னாவிடம் அவரைக் கொண்டுசென்றது தான். பிரதான ஆசாரியனல்லாத அன்னாவின் முன்பு இயேசு ஏன் நிறுத்தப்பட்டார்?

அன்னா மதத்தின் பெயரால் பல தவறுகளைச் செய்தவன். பண்டிகை மற்றும் பரிசுத்த நாட்களுக்காக எருசலேமுக்கு வரும் யூத யாத்திரிகர்களை ஏமாற்றும் மிக இழிவான செயல்களைச் செய்துவந்தான். அந்நாட்களில் பலியாகக் கொடுக்கப்பட வேண்டிய மிருகங்கள் ஆசாரியர்களால் பரிசோதிக்கப்பட்டு சுத்தமான மற்றும் சுத்தமில்லாத மிருகங்கள் என்று அறிவிக்கப்பட்டன.

4.5 ஹெக்டேருக்கு மேல் பரப்பளவு கொண்ட ஆலய வளாகத்தில், மிருகங்களைச் சாதாரண விலைக்கு மேல் 75 மடங்கு அதிகமாகப் பணம் கொடுத்து இந்த யாத்திரிகர்கள் பலியிடுவதற்கான மிருகங்களை அன்னாவிடம் வாங்க வேண்டியிருந்தது. அன்னாவுக்குச் சொந்தமான கடைகளில் இந்த யாத்திரிகர்கள் மிருகங்களை வாங்காவிட்டால், அவர்களின் மிருகங்கள் அசுத்தமானது என்று ஆசாரியர்கள் அறிவித்துவிடுவர். அந்த மிருகங்களை யூதர்கள் பலியாகச் செலுத்த அனுமதிக்கப்படுவதில்லை. இந்த ஆசாரியர்கள் அன்னாவினால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தனர் என்பது தெளிவாகிறது. நாற்பது வருடங்களுக்குப் பின்பு எருசலேமை ரோமர்கள் முழுமையாக அழித்தபோது, ஆலயப் பொக்கிஷத்தில் ஐந்து மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு இணையான பணத்தை அவர்கள் கண்டுபிடித்தனர்.

இது மிகவும் இழிவான லாபம் தரக்கூடிய மதசம்பந்தமான கொள்ளையாக மட்டுமல்லாது, வருடத்திற்கு அன்னாவிற்குப் பத்து இலட்சம் பணம் வருமானத்தை எளிதாகப் பெற்றுத் தந்தது. இயேசு ஏன் தம் நியாயமான வெறுப்புடன் கூடிய கோபத்தை வெளிப்படுத் தினாரென்றும், அந்த வளாகத்திலுள்ள மேஜைகளை உருட்டித் தள்ளி, அங்கிருந்த வியாபாரிகளைச் சாட்டையினால் விரட்டி அந்த இடத்தை ஏன் காலி செய்தார் என்பதையும் நாம் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். இந்த மனிதன் அன்னாவினால் உண்மையான பக்தியுள்ள யாத்திரிகர்கள் கொள்ளையிடப்படும் கொடுமையை நாம் புரிந்து கொண்டால், பின்வரும் இயேசுவின் வார்த்தைகளுக்கும் அர்த்தம் புரிந்துவிடும். ''என்னுடைய வீடு எல்லா ஜனங்களுக்கும் ஜெப வீடு என்னப்படும் என்று எழுதியிருக்கவில்லையா? நீங்களோ அதைக் கள்ளர்குகையாக்கினீர்கள்'' (மாற்கு 11:17).

அறிஞர்களால் கொடுக்கப்பட்ட இந்த விவரம், இயேசு கைது செய்யப்பட்டவுடனே ஏன் அன்னா அவரைத் தனக்கு முன்பாகக் கொண்டுவந்து நிறுத்தும்படி சொன்னான் என்பதைப் புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது. ஊழல் நிறைந்த வியாபார ஸ்தலமாக மாறிய ஆலயத்தை இயேசு சுத்தப்படுத்தியபோது அவர் இந்தக் கொடிய மனிதனாகிய அன்னாவை நேரடியாக எதிர்த்தார் என்ற கடினமான உண்மையை நாம் காண முடியும். அன்னாவின் முன்பு அவர் தோன்றியது ஒரு விசாரணையல்ல. அவருடைய மோசமான எதிரியை நேராக எதிர்த்துநிற்கும் ஒரு கட்டாயமாகும். எந்தப் பிரதிவாதியும் அவனையே குற்றப்படுத்தும் வகையிலான பதிலைத் தரக்கூடிய கேள்வி களைக் கேட்க முடியாது என்று யூதச் சட்டம் கூறுகிறது. இயேசுவை அன்னா கேள்விகள் கேட்கும்போது, அது ஒரு சட்டபூர்வமான விசாரணை அல்ல என நமக்கு அவன் உடனடியாகக் காட்டுகிறான். ''நீர் என்னிடத்தில் விசாரிக்க வேண்டியதென்ன?'' என்று இயேசு கேட்கும்போது அவர் ஏன் அப்படிக் கேட்டார் என்பது நமக்குப் புரிகிறது. அப்பொழுது சேவகரில் ஒருவன் இயேசுவைக் கன்னத்தில் அறைந்தான்.

யூத ஜனங்கள் தோற்கடிக்கப்பட்டு, ரோமர்களின் ஆளுகையின்கீழ் பாடுபட்டனர். மோசேயின் மூலமாகத் தேவன் கொடுத்த கட்டளைகளுடன் தங்களுடைய பல சட்டங்கள் மற்றும் கட்டுப்பாடு களையும் சேர்த்து, அது தொடர்பான மதச்சார்பான விசாரணைகளை மேற்கொள்ளும்படி, யூத மதத் தலைவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இருப்பினும், எவருக்கும் மரண தண்டனை வழங்கும் அதிகாரம் இந்த மதத் தலைவர்களுக்கு வழங்கப்படவில்லை. மதவிசாரணைக்கும் மேல், இயேசுவைச் சிலுவையிலறைய யூதர்கள் விரும்பினாலும், இயேசு ரோம விசாரணைக்கு உட்பட வேண்டியிருந்தது. இயேசுவைக் காய்பாவுக்கு முன்பு ஆஜராகும்படி அன்னா அனுப்பியபோது மதச்சார்பான விசாரணை ஆரம்பித்தது. மற்றச் சுவிசேஷங்கள் இயேசுவின் மதச்சார்பான விசாரணையைப் பற்றிக் கூறுகின்றன. ஆனால் இந்த விசாரணையைப் பற்றி யோவான் நமக்குக் கூறவில்லை. ஆனால், ரோம அதிபதியான பொந்தியு பிலாத்துவின் முன்பாக நடந்த இயேசுவின் விசாரணை விவரங்களை ஆழமாக அறிவிக்கிறார்.

பேதுரு மூன்று முறை மறுதலித்த விவரத்தை யோவான் இப்படி யாகக் கூறுகிறார்: ''சீமோன் பேதுரு நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தான். அப்பொழுது சிலர் அவனை நோக்கி: நீயும் அவனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றார்கள். அவன்: நான் அல்ல என்று மறுதலித்தான். பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரரில் பேதுரு காதற வெட்டினவனுக்கு இனத்தானாகிய ஒருவன் அவனை நோக்கி: நான் உன்னை அவனுடனேகூடத் தோட்டத்திலே

காணவில்லையா என்றான். அப்பொழுது பேதுரு மறுபடியும் மறுதலித்தான்; உடனே சேவல் கூவிற்று'' (18:25–27).

இயேசுவின் கைதையும், விசாரணையையும் அறிவிப்பதிலேயே யோவான் முக்கியத்துவம் தந்ததினால், அந்தச் சம்பவம் நடந்தபோது, பேதுரு இருளுக்குள் சென்று துக்கத்துடன் அழுததைப் பற்றி நமக்கு அவர் சொல்லவில்லை. அன்னாவிற்கு முன்பாக நடந்த கொடுமைகளுக்குப் பின்பு இயேசுவை அழைத்துவந்த விதத்தையும், பேதுருவை அவர் பார்த்ததையும் குறித்த உருக்கமான விவரங்களை லூக்கா எழுதுகிறார். இயேசு, தலையில் முட்கிரீடத்துடனும், தம்மை நிந்தித்ததற்கான தெளிவான அடையாளங்களை முகத்தில் கொண்டவராய் பார்த்த பார்வையைப் பேதுரு சந்தித்த வேளையில் சேவல் கூவிற்று. அவன் வெளியே ஓடிப்போய், மனங்கசந்து அழுதான் (லூக்கா 22:60–62).

பெந்தெகொஸ்தே நாளில் பெரிய பிரசங்கத்தைச் செய்ய பரிசுத்த ஆவியானவர் பேதுருவை ஏன் வல்லமையாகப் பயன்படுத்தினார்? பேதுரு மனங்கசந்து அழுது, ஏதோ ஒன்றைக் கற்றுக்கொண்டதினால், அது அவனைப் பரிசுத்த ஆவியானவரின் வாகனமாகவும் ஊக்கமளிக்கும் வல்லமையின் வழியாகவும் மாற்றியுள்ளது என நான் நம்புகிறேன். ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், பேதுரு கற்றுக்கொண்டதை 'உடைக்கப்பட்ட நிலை' என அழைக்க முடியும். பூமிக்கு உப்பாகவும் உலகத்திற்கு ஒளியாகவும் நம்மை மாற்றும் முதல் நோக்கத்தை அவர் கற்றுத் தந்தபோது இயேசு இதே கருத்தை வெளிப்படுத்தினார்: ''ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கிய வான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது'' (மத். 5:3).

''எளிமை'' என்ற வார்த்தை ஆவியில் ''உடைந்தவர்கள்'' என மொழிபெயர்க்கப்படக் கூடுமென அறிஞர்கள் நம்மிடம் கூறுகின்றனர். பேதுரு ஆவியில் உடைக்கப்பட்டான். பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு பெரிதாகப் பயன்படுத்தப்பட்டதற்குக் காரணம், அவன் மூன்று முறை கர்த்தரை மறுதலித்த பிறகு இருளில் சென்று மனங்கசந்து அழுது ஆவியில் உடைக்கப்பட்டதினால்தான். பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரினால் பயன்படுத்தும் பாத்திரமாயிருக்கவும் புதிய ஏற்பாட்டுத் திருச்சபையை வழிநடத்தவும் பேதுரு தெரிந்தெடுக் கப்பட்டவனாவான். ஏனென்றால் கலிலேயாவில் மலையுச்சியில் இயேசு கற்றுத்தந்த முதல் இரண்டு சத்தியங்களை அவன் கற்றும் அனுபவித்துமிருக்கிறான்.

''என்னால் முடியாது, ஆனால் அவரால் முடியும்'' என்ற இந்த அறிக்கையிடுதலுடன் முதல் இரண்டு நோக்கங்களை நான் விவரிக்கிறேன். அந்த இருளிலே பேதுரு அழுதுகொண்டிருந்தபோது

''என்னால் முடியாது, ஆனால் அவரால் முடியும்'' என்று அறிக்கையிட அவன் கற்றுக்கொண்டதினால், இயேசுகிறிஸ்துவின் திருச்சபையின் முதல் தலைமுறையின் தலைவனாக தேவன் பேதுருவை வல்லமையாகப் பயன்படுத்தினார் என நான் நம்புகிறேன். தேவன் ஆசீர்வதிப்பதின் முதல் நோக்கத்தை அவன் கற்றுக்கொள்ளும் வேளையில் இரண்டாவது நோக்கத்தை அவன் அனுபவித்தது தெளிவாகிறது. இந்தச் சுவிசேஷத்தின் கடைசி அதிகாரத்தில் பேதுருவைக் குறித்து அதிகமாக நாம் பார்ப்போம்.

அத்தியாயம் மூன்று

இயேசுவிடம் ரோமத் தேசாதிபதியின் விசாரணை

(18:28–19:16)

ரோம தேசாதிபதியின் முன்பு இயேசுவின் விசாரணை இப்படியாக ஆரம்பித்தது என யோவான் எழுதுகிறார்; ''அவர்கள் காய்பாவினிடத்திலிருந்து இயேசுவைத் தேசாதிபதியின் அரமனைக்குக் கொண்டு போனார்கள்; அப்பொழுது விடியற்காலமாயிருந்தது. தீட்டுப்படாமல் பஸ்காவைப் புசிக்கத்தக்கதாக, அவர்கள் தேசாதிபதியின் அரமனைக்குள் பிரவேசியாதிருந்தார்கள். ஆதலால் பிலாத்து அவர்களிடத்தில் வெளியே வந்து: இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ்சாட்டுகிறீர்கள் என்றான்.

''அவர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: இவன் குற்றவாளியாயிராவிட்டால், இவனை உம்மிடத்தில் ஒப்புக்கொடுக்க மாட்டோம் என்றார்கள். அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இவனை நீங்களே கொண்டு போய், உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி நியாயந்தீருங்கள் என்றான். அதற்கு யூதர்கள்: ஒருவனையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை, என்றார்கள். தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப் போகிறாரென்பதைக் குறித்து இயேசு குறிப்பாய்ச் சொல்லியிருந்த வார்த்தை நிறைவேறத்தக்கதாக இப்படிச் சொன்னார்கள்'' (வச. 28–32).

ரோமத் தேசாதிபதியின் முன்பான இயேசுவின் விசாரணையை எழுதும் முன்பாக, இந்த ரோமத் தேசாதிபதியின் பெயர் பொந்தியு பிலாத்து என்று நாம் தெரிந்துகொள்வது முக்கியமானது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்து, யூதச் சரித்திரத்தை எழுதிய யூத வரலாற்றாசிரியர் ஜோசிபஸ் என்பவர், கி. பி. 26இல் யூதேயாவின் தேசாதிபதியாகப் பிலாத்து பதவியேற்று, பத்து வருடங்கள் தேசாதிபதியாக இருந்தான் எனக் கூறுகிறார். இந்த யூதத் தலைவர்களுடன்

கேடான ஒரு ஆரம்பத்திற்கு அவன் ஆயத்தமானான். ஏனென்றால், செசரியாவிலுள்ள (பாலஸ்தீனத்திலுள்ளது) தன் தலைமையிடத்திலிருந்து எருசலேமுக்கு அவன் முதலில் வந்தபோது, அவனுக்குப் பாதுகாப்பாக வந்த போர்ச்சேவகர்கள் பேரரசர் தைபீரியஸ் ஜூலியஸ் சீசர் அகஸ்டசின் வெண்கல உருவம் பதித்த கொடிகளைப் பறக்கவிட்டவாறு வந்தனர்.

ரோமப் பேரரசரையே கடவுளாக அந்த மக்கள் நினைத்திருந்தனர். யூதர்கள் பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டு செல்லப்பட்ட பின்பு, இனி ஒருபோதும் விக்கிரகாராதனை செய்பவர்களாக இருப்பதில்லையெனத் தீர்மானித்திருந்தனர். எனவே, ரோம மக்கள் ஆராதிக்கும் பேரரசரின் உருவத்தை எதிர்த்ததோடல்லாமல், தொடர்ந்து கொடிகளிலிருந்து அந்த உருவத்தை அகற்ற வேண்டுமென பிலாத்துவிடம் பிரதிநிதிகள் குழுவை அனுப்பிவைத்தனர். ஒரு ரோம தேசாதிபதியாக, இந்த மதத் தலைவர்களைச் சமாதானப்படுத்தும்படியான எதையும் பிலாத்து செய்ய முயற்சிக்கவில்லை.

இந்தக் காரியத்தைக் குறித்த எதிர்ப்பு உச்சநிலையை அடைந்தபோது, இதைக் குறித்துப் பேசும்படியாக, தலைவர்களை ஒரு அரங்கத்திற்கு அழைத்தான். இந்தத் தலைவர்களையெல்லாம் அங்கே படுகொலை செய்வது அவனுடைய திட்டமாயிருந்தது. மதத் தலைவர்கள் தங்கள் எதிர்ப்பில் தீவிரமாயிருந்ததினால், அவர்களில் அநேகர் முழங்காலில் நின்று, தலை குனிந்து, ''எங்களுடைய பரிசுத்த பட்டணத்தில் இந்த விக்கிரகங்களைப் பார்ப்பதைக் காட்டிலும், உன்னுடைய வாளுக்கு எங்கள் தலையைக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறோம்'' என்றனர்.

ஆனால் பிலாத்து தனது எண்ணத்தை மாற்றிக்கொண்டது எதனால் என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. இந்த யூதர்களுக்கு அது ஒரு வெற்றியாகும். எனினும், ஒரு ரோம தேசாதிபதிக்குரிய அதிகமான கர்வமும், பெருமையும் அவனிடம் இருந்ததால், அன்றுமுதல் அவர்களின் உறவில் பகைமை இருந்ததை நம்மால் கணிக்க முடியும்.

இதுபோலவே இன்னொரு சம்பவமும் யூதர்களைப் பாதித்தது. எருசலேமிலுள்ள குறைவான தண்ணீர் விநியோகத்தை மேம்படுத்த பிலாத்து ஒரு வாய்க்காலைக் கட்டியபோது ஆலயப் பணத்தை எடுத்ததினால் அவர்கள் உறவு மேலும் கசப்பாயிற்று. அந்த வாய்க்காலுக்கான செலவை ஈடுசெய்ய அவன் ஆலயப் பொக்கிஷத்திலிருந்து பணத்தைத் திருடினான். யூதரின் பொக்கிஷத்திலிருந்து பிலாத்து அதிகமான பணத்தை எடுத்த பின்பும், இயேசுவின் விசாரணை நடந்து முடிந்து நாற்பது வருடங்களுக்குப் பின்பு ரோமர்கள் எருசலேமை

அழித்தபோது, ஆலயப் பொக்கிஷத்தில் ஐம்பது இலட்சம் டாலர்களுக்கு ஈடான பணத்தை அவர்கள் கண்டனர்.

ஒருமுறை தெருக்களில் குழப்பம் ஏற்பட்டபோது பிலாத்து தன் போர்ச் சேவகர்களை மறைத்துவைத்த ஆயுதங்களுடன் சாதாரண உடை அணிந்தவர்களாய் கூட்டத்திற்குள் ஊடுருவச் செய்தான். அவனிடமிருந்து சைகை வந்ததும் நூற்றுக்கணக்கான யூத மக்களைப் போர்ச்சேவகர்கள் கொன்று போட்டனர். இந்தச் சம்பவம் பிலாத்துவுக்கு எதிராக ஒரு வெறுப்பை யூதத் தலைவர்களிடம் ஏற்படுத்தியது.

பிலாத்து வேண்டுமென்றே, தனது போர்ச்சேவகர்களைப் பேரரசரின் உருவம் பதித்த பொன்னாலான கேடயத்துடன் ஏரோதுவின் அரண்மனையில் இருக்க வைத்தபோது, மூன்றாவது சம்பவம் நிகழ்ந்தது. இதினிமித்தம் அங்கு கூச்சலும் ஆர்ப்பாட்டமும் எழுந்ததினால், அந்த உருவங்களைக் கேடயத்திலிருந்து எடுத்துவிடும்படி, பேரரசரே பிலாத்துவுக்குக் கட்டளையிட்டார்.

இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, இறுதியாக நடந்த சம்பவம் பிலாத்துவின் அரசியல் வாழ்க்கையை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்ததாக ஜோசிபஸ் எழுதுகிறார். கி. பி. 36இல் சமாரியாவில் ஒரு புரட்சி ஏற்பட்டது. அதனைப் பிலாத்து கொடூரமான முறையில் கையாண்டதால், சீரியாவிலுள்ள முக்கியமான ரோம அதிகாரி பேரரசருக்கு அதனை அறிவித்தார். அவர் பிலாத்துவை அந்த இடத்திலிருந்து மாற்றினார்.

பிலாத்து ரோமாபுரிக்குப் போகும் வழியில் பேரரசர் தைபீரியஸ் மரணமடைந்தான். அவனுக்குப் பின்பு கலிகுலா (Caligula) பதவியேற்றான்.அவன் புத்திசுயாதீனமில்லாதவனாகயிருந்தான். பிலாத்து ரோமுக்கு வந்தபோது அவனுடைய விதி எப்படியிருந்திருக்கும் என்று நம்மால் கற்பனை செய்ய முடியும். அந்த நேரத்தில் வரலாற்றிலிருந்தே அவன் மறைந்துபோனான். பிலாத்துவுக்கும் இந்த யூதர்களுக்குமிடையே இருந்த விரோதத்தை நாம் புரிந்துகொள்ள உதவும்படி இந்த வரலாற்றுப் பாடத்தை நான் பகிர்ந்துகொண்டேன். இந்த மதத் தலைவர்களைப் பிலாத்துவும், பிலாத்துவை அவர்களும் வெறுத்தார்கள்.

ரோமத் தேசாதிபதியின் முன்பான இயேசுவின் விசாரணை, பிலாத்து அரண்மனையை விட்டு வெளியே வந்து யூத மக்களிடம் பேசினபோது ஆரம்பமானது. அவனுடைய அரண்மனைக்குள் யூதர்கள் பிரவேசிக்க மாட்டார்கள். ஏனென்றால், அது அவர்களை அசுத்தப் படுத்தி, பஸ்கா பண்டிகையை அனுசரிக்க முடியாமல் அவர்களைத்

தடுக்கிறது. தேவனுடைய குமாரனை மரணத்திற்கு அவர்கள் ஒப்புக்கொடுக்கும் இந்த நேரத்தில்கூட, சடங்குகளோடுகூடிய வகையில் பரிசுத்தப்படுத்தப்பட்டிருக்க வேண்டுமென்பதில் இந்த யூத மதத் தலைவர்கள் கரிசனையுடன் இருந்தனர்.

பிலாத்து வெளியே வந்து இந்த மனிதன்மேல் என்ன குற்றஞ்சாட்டு கிறீர்கள் என்று யூதர்களைக் கேட்டான். ''இயேசு ஒரு குற்றவாளியாக இல்லாதிருந்தால் இந்த விசாரணையை நடத்தும்படி நாங்கள் கேட்டிருக்க மாட்டோம்'' என அவர்கள் பதிலளித்தனர். அதற்குப் பிலாத்து இயேசுவை அவர்களே கொண்டுபோய் நியாயந்தீர்த்துக்கொள்ளும்படி சொன்னான். இந்த மனிதனை மரணத்துக்குள்ளாக்கத் தங்களுக்கு அதிகாரமில்லையெனவும், இயேசு மரணமடைய வேண்டுமென அவர்கள் விரும்புவதாகவும் அவர்கள் பதிலளித்தனர். இது விசாரணை அல்ல, கொலைகாரக் கும்பலின் செயல் என்பது பின்னர் பிலாத்துவுக்குப் புரிந்தது.

மேசியாவாகிய இயேசுவின் மரணத்தைக்குறித்து வேத வசனங்களின் மூலம் தீர்க்கதரிசனமாகக் கொடுக்கப்பட்டது நிறைவேறும்படி எல்லாம் நடக்கிறது என யோவான் தனது விமரிசனத்தை இடையில் எழுதுகிறார் (வச. 29–32).

பின்பு பிலாத்து அரண்மனைக்குத் திரும்பி, இயேசுவைத் தனக்கு முன்பாகக் கொண்டுவரும்படி கூறுகிறான். அவர்களிடையில் ஒரு ஆழமான சம்பாஷணை நடக்கிறது. அதில் அவர் யூதர்களின் ராஜாவா என்று பிலாத்து இயேசுவிடம் கேட்கிறான். அதற்கு இயேசு 'தன்னுடைய ராஜ்யம் இவ்வுலகத்துக்குரியதல்ல' எனப் பதிலளிக்கிறார். இந்த உரையாடலில், இந்த உலகில் தமது ஊழியத்தைப் பற்றி ஆழமாக அறிவிக்கிறார். ''... சத்தியத்தைக் குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்'' (18:37).

அதற்குப் பிலாத்து ''சத்தியமாவது என்ன?'' என்ற கேள்வியைக் கேட்டான். அதற்கான பதிலுக்காக அவன் காத்திராமல், வெளியே வந்து இயேசுவுக்கு எதிராகக் குற்றப்படுத்த எந்தக் காரணங்களையும் தான் காணவில்லையென்று யூதர்களிடம் கூறினான். இது ஒருவேளை அவன் இயேசுவிடம் ஈர்க்கப்பட்டதினால் இருக்கலாம், அல்லது அவன் யூதர்களை வெறுத்தபடியால் அவர்கள் விரும்பிய எதையும் செய்யக்கூடாது என்ற எண்ணத்தினால் இருக்கலாம்.

இந்தச் சுவிசேஷத்தின் பதினெட்டாவது அதிகாரத்தில் ''இயேசு யார்?'' என்ற கேள்விக்கு நாம் பதிலளிக்கும்போது, அவர் உண்மையுள்ள

சாட்சி மட்டுமல்லாது, சத்தியத்திற்காகச் சாட்சி கொடுக்க வந்த ஒருவர் என்பதே நமது பதிலாகும். சத்தியமாகவே இருக்கும் ஒருவருடைய முகத்தைப் பார்த்து அந்தக் கேள்வியைக் கேட்டு, பதிலுக்காகப் பிலாத்து காத்திருக்காதது துக்ககரமான ஒன்றாயில்லையா?

பஸ்கா பண்டிகையின்போது ஒரு கைதியை விடுதலைசெய்வது வழக்கமானதாக இருந்ததால் இயேசுவை விடுதலை செய்கிறேன் என்று அவன் கூறினான். பரபாஸ் என்ற கைதி விடுதலைசெய்யப்பட வேண்டு மென அவர்கள் சத்தமிட்டனர் (வச. 33–40).

பின்பு அவரை ஒரு சாதாரண குற்றவாளிபோலக் கொடூரமாக அடிக்கும்படி ஒப்புக்கொடுத்தான். குற்றவாளியின் சரீரம் கிழிந்துபோகும் படியாக உலோகம் அல்லது எலும்பின் கூரிய நுனிகளைக் கொண்ட அநேக தோல்வார்களினால் செய்யப்பட்ட சாட்டையினால் ஒரு கைதியை அடிப்பது ரோமரின் நடைமுறை வழக்கமாகும். சாட்டையினால் அடித்த பின்பு சிவப்பு நிற (ராஜரிக) அங்கியை இயேசுவுக்கு உடுத்துவித்தனர். அவரது கண்களைக் கட்டி, பரிகசித்து, போர்வீரர்கள் கையினால் அடித்து, முள்கிரீடத்தை அவருடைய சிரசில் வைத்தனர். பிலாத்து இயேசுவை யூதர்களுக்கு முன்னால் கொண்டுசென்று, ''இவரைத் தண்டிப்பதற்கு ஒரு குற்றமும் இல்லை என்பதை நீங்கள் அறியும்படிக்கு, உங்களிடத்தில் இவரை வெளியே கொண்டுவந்துள்ளேன்'' என்று கூறினான். இயேசு முட்கிரீடமும் சிவப்பு அங்கியும் அணிந்தவராக வெளியே வந்தபோது, பிலாத்து அவர்களை நோக்கி ''இதோ இந்த மனிதன்'' (19:5) என்றான்.

இந்த யூதர்களிடம் பிலாத்து அதிகக் கோபம்கொண்டிருந்தான் என்றும் இயேசுவுக்கும், யூதத் தலைவர்களுக்காகவும் அவன் செய்த எல்லாவற்றையும் ஒரு அலட்சியத்துடனும் கேலியுடனும் செய்தான் என்றும் நான் தனிப்பட்ட முறையில் நம்புகிறேன். பின்வருபவற்றை நாம் படிக்கும் போது ஆச்சரியப்படக் கூடாது: ''பிரதான ஆசாரியரும் சேவகரும் அவரைக் கண்டபோது சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்கள். அதற்குப் பிலாத்து: நீங்களே இவனைக் கொண்டுபோய்ச் சிலுவையில் அறையுங்கள், நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்றான். யூதர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: எங்களுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு, இவன் தன்னை தேவனுடைய குமாரனென்று சொன்னபடியினால், அந்த நியாயப்பிரமாணத்தின்படியே, இவன் சாக வேண்டும் என்றார்கள்'' (19:6–7).

பிலாத்து பிறகு அரண்மனைக்குத் திரும்பி, இயேசு தன்னிடம் பேச மாட்டார் என்பதைக் கண்டுகொண்டான். இயேசுவைச் சிலுவையில்

அறையவும் அல்லது விடுதலைபண்ணவும் அதிகாரம் படைத்த ஒருவருடன் அவர் பேசாததைக் கண்டு தனது ஆச்சரியத்தைப் பிலாத்து வெளிப்படுத்தியபோது, அந்த அதிகாரம் அவனுக்குக் கொடுக்கப் படாதிருந்தால் அவனுக்குத் தம்மீது எந்தவித அதிகாரமுமில்லை என்பதைப் பிலாத்துவுக்கு இயேசு அறிவிக்கிறார் (வச. 9–11). தேவனுக்குத்தான் பொறுப்பும் அதிகாரமும் உண்டு என்பதை வலியுறுத்தத்தான் இந்தச் சுவிசேஷத்தை எழுதியவர் இதை நினைப்பூட்டுகிறார்.

அந்த நேரம் முதல் இயேசுவை விடுதலைபண்ண பிலாத்து விரும்பினான் என நாம் படிக்கிறோம். இருப்பினும், பின்பு யூத மக்கள், இயேசுவை விடுதலைபண்ணும் எவரும் இராயனுடைய நண்பனில்லை யென அறிவித்தபோது, பிலாத்துவுக்கு அது மிகுந்த கஷ்டத்தைக் கொடுத்தது (வச. 12). ''இராயனின் நண்பர்கள்'' என்று அழைக்கப்படும் ஒரு கூட்டம் ரோம அரசியலில் இருந்தது. இந்த யூதத் தலைவர்கள் தொடர்ந்து பிலாத்துவைப் பற்றிப் புகார் சொல்லிவந்ததினால், யூதேயாவின் தேசாதிபதியாக அவனுடைய அரசியல் வாழ்க்கை நன்றாகயில்லை. பிலாத்துவுக்கு விருப்பமில்லாத ஒரு புலன் விசாரணைக்குத் தூண்டுவதற்கான அதிகாரம் அவர்களுக்கு இருந்தது. அவன் இராயனின் நண்பனில்லை என்ற குற்றச்சாட்டு ரோமர்களின் காதுகளை எட்டுவதை அவன் விரும்பவில்லை.

இயேசு தன்னை இராஜா என்று சொல்லிக்கொள்கிறார் என்று அவர்கள் பிலாத்துவிடம் கூறியபோது, அவர்களும் அவன்மேல் பாரத்தைச் சுமத்தினர். ஒரு ராஜாவாகத் தன்னைக் கூறிக்கொள்ளும் எவனும் இராயனுக்கு விரோதமானவனே. ரோமப் பேரரசில் அந்தக் குற்றத்துக்கு மரண தண்டனைதான். இந்த ஆசாரியர்களும் மற்றும் ஆவிக்குரிய தலைவர்களும் ''இராயனைத் தவிர எங்களுக்கு வேறே ராஜாயில்லை'' என்று அறிவித்த போது அது என்னை உண்மையிலேயே வியப்படையச் செய்தது (வச. 14–15). ரோமர்கள் முதலில் வரி விதித்தபோது யூத மதத் தலைவர்கள் அதை எதிர்த்தனர். ஏனென்றால், தேவன்தான் அவர்களின் ராஜாவென்றும், உலகத்தின் ராஜாவுக்கு ஒருபோதும் வரிசெலுத்துவதில்லையெனக் கூறினர். இயேசு அவர்களுடன் இருந்த எபிரெய வரலாற்றின் அந்தக் காலத்தில் அவர்கள் தேவனிடமிருந்து எத்தனை தொலைவில் இருந்தனர் என்பதை இயேசுவின் மேலிருந்த அவர்களின் வெறுப்பும், அவர்களின் மோசமான ஆவிக்குரிய தோற்றமும் வெளிப்படுத்துகிறது.

பிலாத்து இயேசுவைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு திரும்பவும் வெளியே வருகிறான். அவன் நியாயாசனத்தின்மேல் அமர்ந்தான் என

நாம் படிக்கிறோம். விஸ்தாரமான சில படிகளின் உச்சியில் கட்டப்பட்டதுதான் நியாயாசனமாகும். இது தீர்ப்பு அறிவிக்கப்படும் ஒரு அரியாசனமாகும். ‘‘இயேசுவை வெளியே அழைத்துவந்து ... உட்கார்ந்தான்’’ என்று நாம் படிக்கும்போது, ‘‘உட்கார்ந்தான்’’ என்பதற்குரிய கிரேக்க வார்த்தை ‘‘அவரை அவன் உட்கார வைத்தான்’’ என்று மொழிபெயர்க்கப்பட வேண்டும். யூதர்களின் ராஜா என்று இயேசு உரிமைகொண்டாடினார். இயேசுவை அலட்சியப்படுத்துவதைக் காண்பிக்கவும், அவரைத் தொடர்ந்து பரிகசிக்கவும் அந்த அரியாசனத்தின்மேல் இயேசுவை அமர்த்தி ‘‘இதோ, உங்கள் ராஜா’’ என்றான் (வச. 14).

‘‘இவரை விடுதலைபண்ணும் எவரும் இராயனுக்கு நண்பனல்ல’’ என்றும் ‘‘இராயனைத் தவிர எங்களுக்கு வேறே ராஜா இல்லை’’ (வச. 15) என்றும் யூதர்கள் சொல்லும்போது, பிலாத்து தனது கைகளைக் கழுவி, சிலுவையிலறையும்படி இயேசுவை அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான் (மத். 27:24).

நமது அடிப்படையான மூன்று கேள்விகளுக்கு, ரோமத் தேசாதிபதியின் முன்பு நடந்த இயேசுவின் விசாரணை சில பதில்களை நமக்குத் தருகிறது. இயேசு யார்? அவர்தான் சத்தியம், சத்தியத்திற்குச் சாட்சி கொடுக்க வந்த ஒருவர்தான் இயேசு. அவர் யூதர்களின் ராஜா மற்றும் உலகத்திலுள்ள எல்லாவற்றையும் நியாயந்தீர்க்கப் போகிறவர். அந்த நியாயாசனத்தில் இயேசுவை அமர்த்தி இயேசுவைப் பிலாத்து கேலிசெய் வதை நான் படித்தபோது ஒருநாளில் இயேசுவினால் பிலாத்து நியாயந்தீர்க்கப்படுவான் என்ற எண்ணம் என் உள்ளத்தில் வந்தது (5:22–24). அப்பொழுது இயேசுவை அவன் பரிகசிக்க முடியாது. ஏனென்றால், உலகனைத்திற்கும் நீதிபதியான அவரின் முகத்தை அவன் பார்த்துக்கொண்டிருப்பான் — அவர் ராஜாதிராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமானவர் (ரோமர் 14:11; 1 தீமோ. 6:13–16).

விசுவாசம் என்றால் என்ன? இந்தக் கேள்விக்குப் பிலாத்துவிடம் மாறான பதிலை நாம் காண்கிறோம். ரோமப் பிரமாணங்களின் அடிப்படையில் இயேசுவின் வாழ்க்கையை நியாயந்தீர்த்து மூன்று முறை ‘‘நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்’’ என்று அறிக்கையிட்ட ஒரு மனிதன்தான் பிலாத்து. இயேசுவைக் குறித்து நினைக்க அவனுடைய சூழ்நிலைகளினால் தள்ளப்பட்டிருந்தபோதும் பிலாத்துவைத் தவிர வேறு எவரும் இயேசுவை அதிக கவனத்துடன் இதுவரை எண்ணிப் பார்க்கவில்லை.

ஆனால், சட்டபூர்வமாகவும், உணர்ச்சிபூர்வமாகவும் இயேசுவைக் குறித்த சத்தியத்தை அவன் கண்டிருந்தபோதும் பிலாத்து நம்பவில்லை.

அவன் செய்ததெல்லாம் சத்தியத்தின் முகத்திற்கு நேராகப் பார்த்து ‘‘சத்தியமாவது என்ன?’’ என்று கேள்விகேட்டதுதான் (18:38). பதிலுக்குக் காத்திருக்காதவனாய், எது விசுவாசம் இல்லை என்பதற்கான வேதனையான ஒரு உதாரணமாய் பிலாத்து இருந்தான்.

என்னுடன் சேர்ந்து இந்த யோவானின் சுவிசேஷத்தைப் படிக்கும்போது, நீங்கள் பிலாத்துவை விரும்புகிறீர்களா? சத்தியத்தின் முகத்தை நேராய்ப் பார்த்து ‘‘சத்தியமாவது என்ன?’’ என்று கேட்கிறீர்களா? இயேசுவைப் பற்றி நினைக்கும் எல்லா நேரத்திலும் சத்தியத்தின் முகத்தைப் பார்க்கிறேன் என்பதை நான் புரிந்துகொள்ளும் முன்பு அநேக வருடங்கள் சத்தியத்தைத் தேடுபவனாக நான் இருந்தேன். இறையியல், வேதாந்தம், மனோதத்துவம் ஆகியவற்றில் சத்தியத்தைத் தேடும் வேளையில் நான் பல வருடங்களாகக் கிறிஸ்தவத்தைப் பின்பற்றும் ஒரு கிறிஸ்தவனாயிருந்தேன்.

உலகம் முழுவதும் சத்தியத்தைத் தேடுகிறது. சத்தியம் இயேசு கிறிஸ்துவில் காணப்படும். அவர்தான் சத்தியத்தின் வடிவமாக இருந்தார், இருக்கிறார். உலகம் கண்டிராத சத்தியத்திற்கு அவர் மிகப்பெரிய சாட்சி யாகும். அவரது வாழ்க்கையும் போதனைகளும் உலகம் இதுவரை கண்டிராத கேட்டிராத, அதிக ஆழமான சத்தியமாகும். ‘‘நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்’’ (14:6) என்று சொன்னவர், அவரது ஆசாரியத்துவ ஜெபத்தில் ‘‘உம்முடைய வசனமே சத்தியம்’’ (17:17) என நமக்குச் சொல்லுகிறார். கிறிஸ்துவும் அவருடைய ஆழமான போதனைகளும் இந்தச் சுவிசேஷத்தில் சித்திரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது சத்தியத்தைக் குறித்த உங்கள் தேடல் ஒரு முடிவுக்கு வரட்டும். அப்பொழுது விசுவாசத்தினால் கிறிஸ்துவை நீங்கள் சந்திக்கும்போது உண்மையான சத்தியம் முகத்திற்கு முன்பு இருப்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

சத்தியத்தைப் பற்றிய நமது தேடல் கிறிஸ்துவில் துவங்கி முடியும்போது, ‘‘வாழ்க்கை என்றால் என்ன?’’ என்ற கேள்விக்கு இன்னொரு பதிலை நாம் கண்டுகொள்கிறோம் என்பது எனது அனுபவமாயிருக்கிறது. வாழ்க்கையென்பது சத்தியமாக இருக்கும் ஒருவருடன் உறவுகொண்டிருப்பதாகும். வேத வசனங்களின் பரிசுத்தமான பக்கத்தைக் கடந்து சென்று வாழ்க்கை இயேசு கிறிஸ்து என்ற ஜீவனுள்ள வார்த்தையுடன் ஐக்கியம் கொள்கிறது. முக்கியமாக சத்தியத்தைத் தேடும் ஒருவருக்கு வாழ்க்கை என்பது சத்தியத்தைக் கண்டுகொள்ளுதலும் அறிந்துகொள்ளுதலுமாகும். வாழ்க்கை என்பது இருண்ட அறையில் இல்லாத ஒரு கறுப்புப் படுக்கையை இனி நாம் ஒருபோதும் தேடக் கூடாது என்பதை அறிந்துகொள்ளுதலாகும்.

அத்தியாயம் நான்கு

அவருடைய வேளை வந்தது

(19:16–42)

யோவான் சுவிசேஷம் முழுவதும், அதன் ஆசிரியர், இயேசுவின் வாழ்க்கை மற்றும் ஊழியத்தில் அந்த ஒரு மணி நேரத்தைக் குறிப்பிடுகிறார். இந்த நேரம் அறுபது நிமிட நேரம் எனக் குறிப்பிடும் விதத்தில் அவர் அதைச் சொல்லவில்லை. இந்த உலகிற்கு இயேசு எதற்காக வந்தாரோ அந்த நேரத்தை அவர் விவரிக்கிறார். பன்னிரெண்டாவது அதிகாரத்தில் ஏறக்குறைய இயேசுவின் இந்த வாழ்க்கை வரலாற்றின் பாதி வழியில் இயேசு பிதாவிடம் ஜெபிக்கும்போது தன் வேளை வந்தது எனக் கூறுவதாக யோவான் குறிப்பிடுகிறார் (12:23). பதினேழாவது அதிகாரத்திலுள்ள அற்புதமான அவருடைய ஜெபத்தில் இதே வார்த்தைகளைக் கூறி பிதாவிடம் ஜெபிப்பதாக யோவான் குறிப்பிடுகிறார்: ''... பிதாவே, வேளை வந்தது... உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்'' (17:2).

அந்த நேரம் சிலுவையில் அவர் மரணமடையும் நேரமாகும். அவர் சிலுவையில் மரணமடைந்தது அவர் இந்த உலகத்திற்கு வந்ததின் முக்கிய நோக்கமாகும் (8:14–21). சிலுவையில் இயேசு மரணமடைந்ததை முதல் மூன்று சுவிசேஷங்களின் ஆசிரியர்கள் பதிவுசெய்தபோது, ''அவர்கள் அவரைச் சிலுவையிலறைந்தனர்'' என்ற மூன்று வார்த்தைகளை மட்டும் பயன்படுத்துகின்றனர்.

அந்த மூன்று வார்த்தைகளை நாம் தனிப்பட்ட முறையில் வலியுறுத்திக் கூற வேண்டுமென நான் சொல்லுகிறேன். ''அவர்கள் அவரைச் சிலுவையிலறைந்தனர்'' என்ற வாக்கியத்தின் முதல் வார்த்தை, இயேசு கிறிஸ்துவை யார் கொலைசெய்தது என்ற பிரச்சினையை எழுப்பியது. அவர்கள் ரோமர்களா? யூதர்களா? நமது இரட்சிப்புக்காகத் தேவன் தமது ஒரேபேறான குமாரனைப் பலியாகக் கொடுத்தார் என்பதே என் பதிலாகும் (ஏசாயா 53:10; 2 கொரி. 5:21).

இந்த மூன்று வார்த்தைகளில் முக்கியமானது ''அவர்'' என்ற வார்த்தையாகும். ரோமர்கள் தாங்கள் வெற்றிகொண்ட நூற்றுக் கணக்கான, ஆயிரக்கணக்கான மக்களைச் சிலுவையில் அறைந்து கொன்றார்கள். சில வேளைகளில் தங்களால் விதிக்கப்பட்ட வரிகளைச் செலுத்த மறுத்தவர்களையும், எதிர்ப்புத் தெரிவித்த கிராமங்கள் அல்லது பட்டணங்களைச் சேர்ந்த எல்லாரையும் சிலுவையில் அறைந்து கொன்றிருக்கிறார்கள். திருச்சபையின் வரலாற்றின் முதல் முந்நூறு ஆண்டுகளில் பல்லாயிரம் கிறிஸ்தவர்கள் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறார்கள். விசுவாசிகள் சிலுவையில் அறையப்பட்டபின்பு, அவர்கள்மீது உருகிய மெழுகை ஊற்றித் தனது தோட்டத்தில் நடக்கும் விருந்துகளுக்கு அவர்கள் வெளிச்சம் கொடுக்கும்படி நீரோ மன்னன் அவர்களைக் கொளுத்தியிருக்கிறான்.

சிலுவையில் அறையப்பட்ட இவர்களனைவரின் மரணம் நமது பாவங்களுக்குப் பரிகாரமாகவோ அல்லது நமது இரட்சிப்பை நிறைவேற்றுவதாகவோ இருக்கவில்லை. இயேசு சிலுவையில் மரித்த போது அவர் தேவ அவதாரமாக இருந்தார். அதுதான் விசுவாசிக்கும் அனைவரின் இரட்சிப்புக்காகத் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பலியாக அவரது மரணத்தை மாற்றியது. பொதுவாக உலகத்திலுள்ளவர்களின் பாவங்களையும் குறிப்பாக நமது பாவங்களையும் போக்கவே மரித்த தேவ ஆட்டுக்குட்டியானவர் அவர் (எபே. 5:2; எபி. 7:26–28; 10:10; 1 யோவான் 2:2; 4:10). ரோமப் பேரரசின் தலைநகரில் அநேக மக்களை அவர்கள் சிலுவையில் அறையவில்லை. ஏனென்றால், ரோமக் குடியுரிமையைப் பெற்றவர்களைச் சிலுவையிலறைய முடியாது. சிலுவை மரணம் ராஜ்யத்தின் வெளியேதான் அதிகமாக நடந்தது. இந்தக் கொடிய தண்டனை அதிகமாக அடிமைகளுக்காகவும், வெறிபிடித்த யூதர்களைப் போன்று அரசை எதிர்ப்பவர்களுக்காகவுமே ஒதுக்கப்பட்டிருந்தது.

சிலுவை மரணம் அதிகமாக இகழப்பட்ட, வெறுக்கப்பட்ட குற்றவாளிகளுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்தது. அது ஒரு நபர் அதிக வேதனையுடன் மரணமடையும் ஒரு முறையாக மட்டுமல்லாது அதிக அவமானத்திற்குரிய வழியாகவும் இருந்தது. குற்றவாளிகள் நிர்வாணமாகச் சிலுவையிலறையப்பட்டு, ஒரு வாரம் அல்லது அதற்கும் அதிகமாக அவர்களின் கறைபடிந்த சரீரத்தைக் கழுகுகள் தின்னும் வரை சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும்படி விடப்படுவார்கள். சிலுவையிலிருந்து எடுக்கப்பட்டதும் அவர்களின் உடல்கள் அபூர்வமாகப் புதைக்கப்படும். அவர்கள் கழுகுகளுக்காகவும் கொடிய மிருகங்களுக்காகவும் விடப்படுவார்கள். இது மிகவும் கொடியதும் அவமரியாதைக்குரியதுமான மரணமாகும்.

வேதாகமத்தில், பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி ஏசாயாவும், புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்களும் ''அவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்தபோது'' என்ன நடந்தது என்பதற்கான இறையியல் அர்த்தத்தை நமக்குக் கூறுகின்றனர். இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தை உணர்த்தும் தீர்க்கதரிசனமாக விவரிக்கப்பட்ட எனக்குப் பிடித்தமான பழைய ஏற்பாட்டு வசனங்கள் ஏசாயா ஐம்பத்துமூன்றாம் அதிகாரத்தில் உள்ளன: ''நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்... கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்த நாளாயிருப்பார். கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும். அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்'' (5, 6, 10–11).

இயேசு சிலுவையில் மரித்தபோது என்ன நிகழ்ந்தது என்பதின் முக்கியத்துவத்தை தானியேல் தீர்க்கதரிசி இரத்தினச் சுருக்கமாக நமக்குத் தருகிறார். தானியேலைப் பொருத்தவரையில், இயேசு சிலுவையில் மரித்த போது, அவர் மீறுதலைச் சரிக்கட்டி, நித்திய நீதியை வருவித்து, தரிசனத்தையும் தீர்க்கதரிசனத்தையும் நிறைவேற்றினார். மட்டுமல்லாது, மகா பரிசுத்தமுள்ளவர் விசேஷித்த வகையில் அபிஷேகம்பண்ணப் பட்டார் (தானி. 9:24).

புதிய ஏற்பாட்டு நிருபங்களில், புதிய ஏற்பாட்டுச் சபையின் இரண்டு பெரிய அப்போஸ்தலர்கள் சிலுவையில் கிறிஸ்துவின் மரணத்தின் அர்த்தத்தை அழகான வெளிப்பாடுகளோடு நமக்குத் தருகின்றனர். பேதுரு பின்வருவனவற்றை எழுதும்போது, ஏசாயாவிலிருந்து மேலே நான் குறிப்பிட்ட அதிகாரத்தை இங்கு பயன்படுத்துகிறார்: ''நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக் கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணிப்புமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்'' (1 பேதுரு 2:24, 25).

2 கொரிந்தியர் ஐந்தாம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளபடி, இயேசு சிலுவையில் மரிக்கும்போது, தேவன் கிறிஸ்துவில் இருந்து, உலகத்தாரைத் தம்மோடு ஒப்புரவாக்கி, அவர்களுடைய மீறுதல்களை இனி ஒருபோதும் எண்ணாமல், ஒப்புரவாக்குதலின் உபதேசத்தையும் ஊழியத்தையும் அவர் நம்மிடம் ஒப்படைத்தார் (18, 19).

இதற்கு, இயேசு சிலுவையில் தொங்கியபோது, உலகம் முழுவதும் தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டது என்று அர்த்தமாகும். நமது இரட்சிப்புக்காகச் சிலுவையில் அவரது பணியை இயேசு முடித்தபோது அந்த நிமிடத்திலிருந்து நம்முடைய பாவங்களுக்காகத் தேவன் நம்மைத் தண்டிப்பதில்லை. ஏனென்றால், அவைகளுக்காக அவர் தமது ஒரே பேறான குமாரனைத் தண்டித்துவிட்டார் (வச. 19). நாம் அனைவரும் தனிப்பட்ட முறையில் அவருடைய தியாகத்தை ஏற்றுக்கொண்டு அவரை நமது கர்த்தரும் இரட்சகருமாக அறிக்கையிட வேண்டும்.

இதுதான் முழு உலகத்திற்கும் நாம் சொல்ல வேண்டிய நற்செய்தியின் சாராம்சமாகும். உலகில் இழந்துபோன மக்களுடன் நாம் பகிர்ந்துகொள்ள வேண்டிய நற்செய்தி, அவர்களின் பாவங்களினால் அவர்கள் நரகத்திற்குப் போகிறார்கள் என்பதல்ல! இழந்துபோன மக்களிடம் நாம் சொல்ல வேண்டிய நற்செய்தி என்னவென்றால், அவர்கள் நரகத்துக்குச் செல்லவேண்டியதில்லையென்பதாகும் (16:15). அவர்கள் பாவங்களை அறிக்கையிட்டு விசுவாசித்தால் இரட்சிக்கப் படுவார்கள். ஏனென்றால், அவர்களின் பாவங்களுக்காகத் தேவன் அவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதில்லை (ரோமர் 10:9, 11). உங்களுக்காகவும் எனக்காகவும் சிலுவையில் இயேசு நரகத்துக்குச் சென்று திரும்பியபோது, தேவன் நமது ஒரே பேறான குமாரனை எல்லாருடைய பாவங்களுக்காகவும் தண்டித்துவிட்டார்.

2 கொரிந்தியர் ஐந்தாவது அதிகாரம் கீழ்க்கண்ட வார்த்தைகளுடன் முடிகிறது: ''நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.'' நாம் இதை அலட்சியப் படுத்தினால் பின்வரும் வார்த்தைகள் நமக்குச் சவாலாக அமைகிறது: ''தேவனானவர் எங்களைக் கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்குகாக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங் கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்'' (5:20–21).

கொரிந்தியருக்கு எழுதின முதல் நிருபத்திலேயே, சுவிசேஷம் என்றால் என்ன (15:3–4), உலகத்திலுள்ள அனைவருக்கும் அதை அறிவிக்கும் பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது (மாற்கு 16:15) என்பது குறித்துப் பவுல் தெளிவாகக் கூறுகிறார். இந்த நிருபத்தை

அவர் ஆரம்பிக்கும்போது, கொரிந்து பட்டணத்திற்குத் தான் வந்தபோது, இயேசு கிறிஸ்துவையும் அவரது சிலுவை மரணத்தைப் பற்றியுமே யல்லாமல் வேறு எதைப் பற்றியும் பிரசங்கிப்பதில்லையென்ற தீர்மானத்துடன் இருந்ததாக அவர் அறிவிக்கிறார் (2:1–2). ஒருவேளை கொரிந்து பட்டணத்திற்குப் பயணப்படுமுன்பு அத்தேனே பட்டணத்தில் செய்ததுபோல கிரேக்க வேதாந்திகளையும் கவிஞர்களையும் குறிப் பிட்டுப் பேசமாட்டேன் என்ற அர்த்தத்தில் அவர் சொல்லியிருக்கலாம் (அப். 17, 18).

யோவான் இயேசுவின் வாழ்க்கை வரலாற்றில் காணப்படும் இயேசுவின் சிலுவை மரணத்தின் முழு விவரத்தையும் நமக்குத் தருகிறார். இயேசுவின் வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் அதிமுக்கியமான நேரத்தைப் பற்றிய ஆர்வமூட்டும் யோவானின் கூற்றைப்பற்றிய எனது தொகுப்புரையை நான் இப்பொழுது ஆரம்பிக்கிறேன்.

பத்தொன்பதாம் அதிகாரத்தின் பதினேழாம் வசனத்தின் ஆரம்பத்தில் நாம் இப்படியாகப் படிக்கிறோம்; ''... அவர்கள் இயேசுவைப் பிடித்துக் கொண்டுபோனார்கள். அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப் போனார். அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்; அவரோடே கூட வேறிரண்டுபேரை இரண்டு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாகச் சிலுவையில் அறைந்தார்கள்.'' இதுதான் போர்ச் சேவகர்கள் செய்ததாகும்.

''பிலாத்து ஒரு மேல்விலாசத்தை எழுதி, சிலுவையின்மேல் போடு வித்தான். அதில் நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா என்று எழுதியிருந்தது. இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் நகரத்திற்குச் சமீபமாயிருந்தபடியினால், யூதரில் அநேகர் அந்த மேல்விலாசத்தை வாசித்தார்கள்; அது எபிரெயு கிரேக்கு லத்தீன் பாஷைகளில் எழுதியிருந்தது. அப்பொழுது யூதருடைய பிரதான ஆசாரியர் பிலாத்துவை நோக்கி: யூதருடைய ராஜா என்று நீர் எழுதாமல், தான் யூதருடைய ராஜா என்று அவன் சொன்னதாக எழுதும் என்றார்கள். பிலாத்து பிரதியுத்தரமாக: நான் எழுதினது எழுதினதே என்றான்'' (16–22).

லத்தீன் மொழி ரோமர்களுக்குரியது. கிரேக்க மொழி அந்நாளில் பொது மொழியாக இருந்தது. அராமைக் மொழி யூதருக்குரியது. அந்த மூன்று மொழிகளும் புராதன எபிரெயம், லத்தீன், மற்றும் கிரேக்கு என்று ஏன் இல்லையென அநேகர் ஆச்சரியப்படுகிறார்கள். இந்தக் கேள்விக்கான பதில், யூதர்கள் சிறைப்பட்டிருந்தபோது, அவர்கள்

அராமைக் மொழியைப் பேசக் கற்றுக்கொண்டனர். என்னோடு சேர்ந்து பழைய ஏற்பாட்டை நீங்கள் ஆராய்ந்தால், சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த யூதர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு எபிரெய பாஷையைக் கற்றுத் தராததினால் நெகேமியா சோர்ந்து போனதை நீங்கள் நினைவுகூரலாம் (நெகே. 13:23–25).

ரோமிலுள்ள ஒரு கைதி சிலுவையிலறையப்பட்டால், அந்த ஊர்வலத்தை நடத்திச் செல்லும் ரோம அதிகாரி அந்தக் கைதி ஏன் சிலுவை யிலறைப்படுகிறான் என்ற காரணத்தைச் சொல்லும் அடையாளத்தைச் சுமந்து செல்வான். அந்தக் கைதி சிலுவையிலறையப்படும்போது, அந்த அடையாளம் சிலுவையின்மீது அறையப்படும். அந்தக் காரணங்கள் உண்மையல்ல என்று கூட்டத்திலுள்ள யாராவது நிரூபிக்கக் கூடுமானால், அவர்கள் முன்வந்து எதிர்ப்புத் தெரிவித்தால், இன்னொரு விசாரணை நடைபெறுமென ரோம நீதிபதி கட்டளையிட்டிருந்தான். ஒரு கைதியின் குற்றமற்ற தன்மையை அவர்களால் நிரூபிக்கக் கூடாவிட்டால், அவர்கள் சிலுவையிலறையப்படக் கூடும் என்பதால் இப்படிப்பட்ட காரியத்தை மக்கள் எளிதாகச் செய்ய மாட்டார்கள்.

''போர்ச்சேவகர் இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின்பு, அவருடைய வஸ்திரங்களை எடுத்து, ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொரு பங்காக நாலு பங்காக்கினார்கள்; அங்கியையும் எடுத்தார்கள், அந்த அங்கி, தையலில்லாமல் மேலே தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதாயிருந்தது. அவர்கள்: இதை நாம் கிழியாமல், யாருக்கு வருமோ என்று இதைக் குறித்துச் சீட்டுப் போடுவோம் என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்மேல் சீட்டுப் போட்டார்கள் என்கிற வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாகப் போர்ச்சேவகர் இப்படிச் செய்தார்கள்'' (19:23–24).

24ஆம் வசனத்தில் தனது தனிப்பட்ட விமரிசனத்தைச் சேர்க்கும்படி, இப்படியாக யோவான் தொடருகிறார்: ''என் வஸ்திரங்களைத் தங்களுக் குள்ளே பங்கிட்டு, என் உடையின்மேல் சீட்டுப் போட்டார்கள் என்கிற வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாகப் போர்ச்சேவகர் இப்படிச் செய்தார்கள்'' (சங். 22:18). ரோமச் சிலுவை மரணத்தின்படி அவர் நிர்வாணமாகச் சிலுவையில் அறையப்பட்டார். அதனால்தான் அவமானத்தை எண்ணாமல் சிலுவையைச் சகித்தார் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது (எபி. 12:2).

அடுத்து, இந்த அப்போஸ்தலனால் மட்டும் சொல்லப்பட்ட ஒரு குறிப்பு நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது: ''இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா

மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பான சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ, உன் மகன் என்றார். பின்பு அந்தச் சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்'' (19:25–27).

''அப்பொழுது எல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்'' என்று நமக்குச் சொல்லப்பட்டிருந்தாலும் (மாற்கு 14:50), இந்த நான்கு பெண்மணிகளும் யோவானும் சிலுவையண்டையில் நின்றிருந்தனர் என்பதைப் படிக்கும்போது அது நம்மை ஈர்க்கிறது, அவருடைய தாயின் சகோதரி என்று குறிப்பிடப்படுவது, செபதேயுவின் மனைவியும், யாக்கோபு யோவான் என்பவர்களின் தாயுமானவள்.

யோவான் பின்வருமாறு தொடர்கிறார்: ''அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக: தாகமாயிருக்கிறேன் என்றார். காடி நிறைந்த பாத்திரம் அங்கே வைக்கப்பட்டிருந்தது; அவர்கள் கடற்காளானைக் காடியிலே தோய்த்து, ஈசோப்புத் தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக்கொடுத்தார்கள். இயேசு காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார்'' (28–30).

''முடிந்தது'' என்ற இயேசுவின் வார்த்தை வெற்றி முழக்கமாக இருந்தது என மற்றச் சுவிசேஷங்களின் ஆசிரியர்கள் நமக்குச் சொல்லுகின்றனர். அவர் ஜீவனை விட்டபோது, ''மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்'' என அவர்கள் எழுதுகின்றனர் (மத். 27:46; மாற்கு 15:37; லூக்கா 23:46). யோவான் எழுதிய கிரேக்க மொழியில் இதற்கு ''டெட்லிஸ்டாய்'' (Tetelestai) என்ற ஒரேயொரு வார்த்தைதான். இதற்கு அர்த்தம் ''முடிந்தது'' அல்லது ''நிறைவேறியது'' என்பதாகும்.

ஒரு கைதியின் தண்டனை நிறைவேறியதும் அந்தக் கைதியைப் பற்றிய ஆவணத்தின்மீது இந்த ''டெட்லிஸ்டாய்'' என்ற வார்த்தையை ரோமர்கள் எழுதினார்கள். இந்த வார்த்தைக்கு அர்த்தம் என்ன வென்றால், ஒரு கடன் கொடுத்துத் தீர்ந்ததும் ''முழுவதும் செலுத்தப் பட்டது'' என்று எழுதுவதற்குச் சமமானதாகும். ஒரு கைதி சிலுவை யிலறையப்பட்டதும், இந்த வார்த்தையையே அடையாளமாக எழுதி, சிலுவையின்மேல் அவர்கள் என்ன காரணத்திற்காகச் சிலுவையி லறையப்பட்டார்கள் என்பதை அறிவிக்கும் அடையாளமுள்ள இடத்தில் ஆணியால் அடித்துவைப்பார்கள். அந்தக் கைதி இறக்குமுன்பும் இறந்த பின்பும் அந்தக் காலம் வரை, ''டெட்லிஸ்டாய்'' என்று எழுதப்பட்ட அந்த வார்த்தை ரோமர்களால் வெற்றிகொள்ளப்பட்டு அடக்கியாளப்படும்

மக்களின் வாழ்க்கையில் ரோமப் பேரரசரின் நீதியையும் பயங்கரத்தையும் உண்டுபண்ணும். சிலுவையிலிருந்து மொழிந்த அவருடைய வெற்றியின் முழக்கத்துக்கு இயேசு இந்த வார்த்தையைத் தெரிந்தெடுத்தது எத்தனை பொருத்தமானதாக இருக்கிறது!

அவர் என்ன செய்ய வேண்டுமென பிதா இயேசுவிடம் எதிர்பார்த் தாரோ அந்தப் பணியைக் குறித்தே அவர் கரிசனைப்பட்டார் என்பதை நமக்குக் காட்டும் இயேசுவின் கூற்றுகளை இந்தச் சுவிசேஷம் முழுவதும் யோவான் பதிவுசெய்திருப்பதை நினைவுகூரவும். ''பகற்காலமிருக்கு மட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும்; ஒருவனும் கிரியைசெய்யக்கூடாத இராக்காலம் வருகிறது'' (9:4). ''நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜன மாயிருக்கிறது'' (4:34). அவருடைய முக்கியத்துவம் வாய்ந்த ஜெபத்தில் ''பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்'' என ஜெபித்தார் (17:4). அவர் தமது வாழ்க்கையின் இறுதியில், அதாவது அவருடைய முக்கியமான பணியில் — சிலுவையில் அவரது பாடுகளின்போது ''டெட்லிஸ்டாய்'' – ''முடிந்தது'' எனச் சத்தமிட்டார் (19:30).

இது அழகான வார்த்தையாகும். ஏனென்றால் சிலுவையில் நமக்காக அவர் எதை முடித்தாரோ, அதனுடன் நாம் எதையும் சேர்க்க வேண்டிய அவசியமில்லை என அர்த்தப்படுத்துகிறது. கிறிஸ்துவின் இந்தச் செய்கையின் மூலம் தேவனிடம் நமக்கு மன்னிப்பும், ஒப்புரவாகுதலும் பெற்றுத் தந்தார் என்பது நிச்சயம். நான் உங்களை ஒரு கேள்வி கேட்கட்டுமா? சிலுவையில் கிறிஸ்துவின் முடிக்கப்பட்ட பணி என்று இறையியல் வல்லுநர்கள் குறிப்பிடுவதுடன் எதையாவது நாம் சேர்ப்பது தேவையாயிருக்கிறது அல்லது சேர்க்க முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா? எனது கேள்விக்கான சரியான பதில் என்னவென்றால், அவர் நம்மை இரட்சிக்கத் தேவையான எல்லாவற்றையும் சிலுவையில் தெளிவாக முடித்து அல்லது நிறைவேற்றிவிட்டதால், நாம் செய்ய வேண்டுமென அவர் விரும்புவதெல்லாம், தேவனிலும் அவரிலும் நம்பிக்கைகொள்ள வேண்டுமென்பதாகும். சிலுவையில் கிறிஸ்துவின் முடிக்கப்பட்ட பணியுடன் எதையும் நாம் சேர்க்க முடியாது. ஏனென்றால் அது ஏற்கெனவே முடிக்கப்பட்டுவிட்டது.

எபிரெயருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் தெளிவாகச் சொல்லப்பட் டுள்ளது: ''... பாவிகளுக்காகவும் நாடோறும் பலியிட வேண்டுவ தில்லை... பலியிட்டதினாலே இதை ஒரேதரம் செய்துமுடித்தார்'' (எபி. 7:27; 10:12). ''டெட்லிஸ்டாய்'' என்று கிறிஸ்து அறிவித்து, தேவன்

அதில் திருப்தியடைந்துவிட்டார் என்றால், சிலுவையில் நமக்காக நமது இரட்சகர் செய்துமுடித்ததுடன் எதையும் சேர்க்க முயற்சிப்பது அறியாமையும், முட்டாள்தனமும் அல்லது வெளிப்படையான நன்றிகெட்ட தன்மையுமாகும். உண்மையான விசுவாசத்தை எது உறுதிப்படுத்துகிறது என நாம் அறிந்திருக்கிறோமோ அதற்குக் கீழ்ப்படிவதை வேதவசனங்கள் போதிக்கும்போது சிலுவையில் கிறிஸ்து முடித்த பணியுடன் எதையும் நாம் சேர்க்கக்கூடும் என அவைகள் நமக்கு ஆலோசனை தரவில்லை.

''தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார்'' (19:30) என யோவான் எழுதும்போது, ஒரு தலையணையின்மீது தலையைச் சாய்ப்பது போல் அவர் தன் தலையைப் பின்புறம் சாய்த்தார் என கிரேக்க வார்த்தைகள் குறிப்பாகச் சொல்வது ஆர்வமூட்டுவதாக உள்ளது. சிலுவை மரணத்தின் சரீரப்பிரகாரமான விவரங்களை நீங்கள் ஆராய்ச்சி செய்தால், யோவான் ஒரு அற்புதத்தை விவரிக்கிறான் என நீங்கள் உணர்ந்துகொள்வீர்கள். குற்றவாளியின் கரங்களைச் சிலுவையில் ஆணியால் அறையும்போது அவர்கள் மரிக்கும் வேளையில் அவர்கள் தலை கீழே சாயும். ஆனால், ஆவியை அவர் ஒப்புக்கொடுத்ததுபோல் அவர் தமது தலையைப் பின்புறம் சாய்த்தார் என யோவான் நமக்குச் சொல்கிறார்.

இயேசுவின் உயிர் அவரைவிட்டு எடுக்கப்படவில்லை என்பதை இந்த வழியிலும் யோவான் வெளிப்படுத்துகிறார். பத்தாவது அதிகாரத்தில் தமது சொந்த ஜீவனைப் பற்றி இயேசு குறிப்பிடுவதை யோவான் எவ்வாறு சுட்டிக்காட்டுகிறார் என்பதை நினைவுகூரவும். ''நானே அதைக் கொடுக்கிறேன். அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார்'' (வச. 18). அவர் தமது ஜீவனைத் தாமாகவே முன்வந்து ஒப்புக்கொடுத்தார். இயேசு பிதாவின் சித்தத்திற்குட்பட்டு அதற்குக் கீழ்ப்படிந்தவராய் தமது தலையைப் பின்புறம் சாய்த்து தமது ஆவியைத் தாமாகவே முன்வந்து ஒப்புக்கொடுத்தார் என்று எழுதும்போது யோவான் அதே குறிப்பை ஏற்படுத்துகிறார்.

31ஆம் வசனத்தில் இந்த நிகழ்ச்சி இப்படியாகத் தொடர்கிறது: ''அந்த நாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளாயிருந்தபடியினால், உடல்கள் அந்த ஓய்வுநாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு, யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய காலெலும்புகளை

முறிக்கும்படிக்கும், உடல்களை எடுத்துப்போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக்கொண்டார்கள்.''

சிலுவை மரணத்தின் பயங்கரத்தைப் பரிசீலனை செய்தால், சிலுவையிலறையப்பட்ட ஒரு குற்றவாளி மரணமடையும்போது, சரீரத்தின் எடையைத் தாங்கும் கரங்களிலும் கால்களிலும் ஏற்படும் வேதனை நீங்கள் கற்பனைசெய்யக் கூடாத அளவு அதிக வேதனையானதாகும். விரிக்கப்பட்ட கரங்களிலிருந்து தொங்கும் சரீரத்தின் எடையுடன் நுரையீரல்கள் நாசமாகி, சுவாசிப்பது கஷ்டமாகிவிடும். சுவாசிக்கவும், கைகளிலும் தோள்களிலும் உள்ள வலியைப் போக்கவும், பாதங்களால் எடையைத் தாங்க முடியாமலும் குற்றவாளி போராடுவான்.

மரணமடைவதற்கு முன்பாக ஐந்து நாட்கள் அல்லது ஒரு வாரத்திற்கு இந்த வகையில் ஒரு குற்றவாளி சிலுவையில் வேதனைப் படுவதின் பயங்கரத்தைக் கற்பனை செய்து பார்க்க முடியுமா? குற்றவாளிகளின் கால்களை இவர்கள் முறித்தால், பயங்கரமான வழியில் மரணமடைவதை அது எவ்வாறு துரிதப்படுத்தும் என்பதை நீங்கள் காண முடியும். அவர்கள் தங்கள் உடலின் கீழ்ப் பாகத்திலிருந்து எந்த உதவியையும் பெற முடியாது. ஒரு பெரிய மரத்திலான சம்மட்டியைப் பயன்படுத்தி, அவர்கள் கால்களை முறிப்பார்கள்.

நாம் இவ்வாறு வாசிக்கிறோம்: ''அந்தப்படி போர்ச்சேவகர் வந்து, அவருடனேகூடச் சிலுவையில் அறையப்பட்ட முந்தினவனுடைய காலெலும்புகளையும் மற்றவனுடைய காலெலும்புகளையும் முறித்தார்கள். அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை. ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது. அதைக் கண்டவன் சாட்சி கொடுக்கிறான், அவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது; நீங்கள் விசுவாசிக்கும்படி, தான் சொல்லுகிறது மெய்யென்று அவன் அறிந்திருக்கிறான்'' (32–35).

இந்தச் சம்பவம் வேதவசனங்களில் சொல்லியவற்றை நிறைவேற்றியுள்ளது என யோவான் மறுபடியும் தனது விமரிசனத்தைச் சேர்க்கிறார். ''அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேத வாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது'' (வச. 36). இது பஸ்கா பண்டிகைக்கான ஆட்டுக்குட்டியைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது (யாத். 12:46). யோவான்ஸ்நானன் இயேசுவை ''இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி'' என்று

அறிமுகப்படுத்துவதை நினைவுகூரவும். தன்னுடைய கர்த்தரின் சிலுவை மரணத்தின் துயரச் சம்பவத்துக்கு இந்த வகையில் அர்த்தம் கொடுக்கிறார்.

அவரது விலாவிலே குத்தியபோது ''உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது'' என்பதில் சில இறையியல் வல்லுநர்கள் பெரிய முக்கியத் துவத்தைக் கண்டனர். அந்த இரத்தம் நமது இரட்சிப்பின் அடையாளத்தைக் குறிப்பதாக அவர்கள் நம்பினர். அந்தப் பரிசுத்த இரத்தம் உலகின் பாவங்களுக்காகவும், குறிப்பாக நமது பாவங்களுக்காகவும் சிந்தப்பட்டதாகும். அந்தப் பரிசுத்த இரத்தத்தில் நாம் வைக்கும் விசுவாசத்தைக் குறிக்கும்படி தண்ணீர் உள்ளது என அவர்கள் நம்பினர் (மத். 28:18–30), புதிய ஏற்பாட்டின் இறுதியில் காணப்படும் யோவானின் சிறிய நிருபத்தில் அவர் இதைக் குறித்து விவரமாகக் கூறுகிறார் (1 யோவான் 5:6).

பத்தொன்பதாம் அதிகாரத்தின் கடைசியில் அரிமத்தியா ஊரானான யோசேப்பு மற்றும் நிக்கொதேமுவைக் குறித்து நாம் பார்க்கிறோம். யூத அதிகாரியான நிக்கொதேமு என்ற மனுஷன் இரவில் இயேசுவைக் காண வந்தான் என்று மூன்றாம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். அரிமத்தியா ஊரானான யோசேப்பும் நிக்கொதேமுவும் யூத ஆலோசனைச் சங்கத்தின் உறுப்பினர்கள் மட்டுமல்ல, அவர்கள் இயேசுவின் இரகசிய விசுவாசிகளுமாவர். ஏனென்றால், தாங்கள் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருப்பதை வெளிப்படையாக அறிவித்தால் அதினால் பிரபுக்களின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்று அவர்கள் பயந்தார்கள்.

இந்த முடிவான பத்தியிலுள்ள மாறுபாடான உண்மை என்னவென்றால், தேவதூஷணம் செய்த பாவத்திற்காக இயேசுவைக் குற்றவாளியென முடிவு செய்து சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்த சனகரீம் சங்கத்தின் முன்பாக நடந்த மதசம்பந்தமான விசாரணை யின்போது இந்த இரண்டு மனிதர்களும் இயேசுவுக்காய்ப் பேசியிருக்க லாம் என்பதுதான். இயேசு மரிப்பதை அவர்கள் பார்த்தபோது, அவர்களால் தொடர்ந்து இரகசிய சீடர்களாய் இருக்க முடியவில்லை.

இந்த மனிதர்கள் தாங்கள் அவருடைய சீடராக இருக்கப் போவதை வெளிப்படையாக அறிக்கையிட்டார்கள். விசுவாசத்திற்கு அவர்களைக் கொண்டுசென்றது இயேசுவின் வாழ்க்கையல்ல. அவரது மரணம்தான் நிக்கொதேமுவையும் யோசேப்பையும் வெளிப்படையாக இயேசுவின் சீடர்கள் என்று அறிவிக்கச் செய்தது. இயேசு ''நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்வேன்'' என்று சொல்லியிருக்கிறார் (12:32).

நிக்கொதேமு யூத வரலாற்றாசிரியனாகிய ஜோசிபசின் சகோதரன் என்றும், இயேசுவின்மேல் அவன் தான் வைத்திருந்த விசுவாசத்தை வெளிப்படையாகத் தெரிவித்ததினால், அவன் அதிகக் கீர்த்திவாய்ந்த அதிகாரி என்ற நிலையிலிருந்து எருசலேமின் அதிக நிந்தைக்குரிய அதிகாரியாகத் தள்ளப்பட்டான் என்றும் அறிஞர்கள் நமக்குச் சொல்லுகின்றனர். இயேசவில் தான் வைத்த விசுவாசத்தை அவன் பகிரங்கமாகக் கூறியதால் அவன் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டான். அவன் தன்னுடைய குடும்பத்தைப் போஷிக்கும்படியாக, மற்றவர்களால் ஒதுக்கப்பட்ட உணவைச் சேகரிப்பதை மக்கள் கண்டனர் என்ற குறிப்பு அவனைப் பற்றி வரலாற்றில் கடைசியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

இறுதிப் பத்தியில் நாம் இப்படியாக வாசிக்கிறோம்: ''அரிமத்தியா ஊரானும் ... யோசேப்பு இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டு போகும்படி பிலாத்துவினிடத்தில் உத்தரவு கேட்டான்'' (வச. 38). நான் ஏற்கெனவே சொன்னதுபோல், சிலுவையில் மரித்த குற்றவாளிகளை ரோமர்கள் அடக்கம் செய்யாமல் கழுகுகளும் காட்டு மிருகங்களும் தின்னும்படி அவர்கள் உடல்களை அப்படியே விட்டுவிடுவார்கள். ரோமர்களால் சிலுவையில் அறையப்பட்ட ஒரு கைதியுடன் உனக்குப் பந்தம் இருப்பதைக் கண்டால், அது உன்னுடைய சிலுவை மரணத்துக்கும் வழிநடத்தும். லாசருவின் கல்லறைத் துணிகளிலிருந்து நாம் கற்றுக்கொண்டபடி, ஒரு மரித்த உடலைத் துணியினால் முழுவதும் சுற்றி, பயங்கரமான நாற்றத்தைத் தாங்கிக்கொள்ள அதற்குள் வாசனைத் திரவியங்களை வைத்துச் சுற்றுவது அவர்களின் பாரம்பரியமாகும். இயேசுவின் உடலைத் தரும்படி பிலாத்துவிடம் அவன் கேட்டபோது, அரிமத்தியா ஊரானான யோசேப்பு ஒரு ராஜாவை அடக்கம்செய்யப் போதுமான வாசனைத் திரவியங்களுடன் ஒருவேளை வந்திருப்பான்.

இந்த வகையில் இந்தப் பயங்கரமான பத்தொன்பதாம் அதிகாரம் முடிகிறது. நீங்கள் இந்த அதிகாரத்தைப் படிக்கும்போது, சிலுவை மரணத்தின் அச்சமூட்டும் சரீரப்பிரகாரமான விவரங்கள் அதிக முக்கியமில்லையென்பதை நினைவுகூருங்கள். நாம் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும்படியாகச் சிலுவையில் இயேசு அனுபவித்த ஆவிக்குரிய பாடுகள்தான் முக்கியமானதாகும். நமது இரட்சிப்பை நிறைவேற்ற நமது பாவங்கள் அனைத்தும் அவர்மீது சுமத்தப்பட்டபோது இயேசுவின் ஆத்துமாவில் ஏற்பட்ட வேதனைதான் அது என ஏசாயா ஐம்பத்துமூன்றாம் அதிகாரத்தில் அவர் நமக்குச் சொல்லுகிறார்.

பாவமறியாத அவரைத் தேவன் நமக்காகப் பாவமாக்கினார் எனப் பவுல் நமக்குச் சொல்லுகிறார் (2 கொரி. 5:21). இந்தச் சத்தியம், இயேசு வினால் குறிப்பிடப்பட்ட இருபத்தியிரண்டாம் சங்கீதத்தின் ''என்

தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்'' என்ற வசனத்திற்கு அடுத்ததாக வைக்கப்பட வேண்டும் (சங். 22:1; மாற்கு 15:24).

அப்பொழுது வாழ்கின்ற, வாழ்ந்த அல்லது வாழப் போகிற ஒவ்வொரு பாவியின் பாவங்களும் இயேசுவின்மீது சுமத்தப்படும் போது, பரிசுத்தமுள்ள தேவனால் அந்தப் பாவத்தைக் காண முடியாததினால், அந்த நேரத்தில் பிதாவோடு இயேசு கொண்டிருந்த சரியான தொடர்பு முறிந்துபோனது என்பதுதான் பழைமையைப் பற்றிக்கொள்ளும் சில வேதாகம பண்டிதர்களின் தீர்மானமாகும். அதனால்தான் அவர் பிதாவிடம் ''என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்'' எனக் கதறினார். பிதாவோடு அவருக்குள்ள தொடர்பு முறிந்ததினால்தான் அவரது ஆத்துமாவில் வேதனை ஏற்பட்டது, அதனால் நமது இரட்சிப்பு நிறைவேறியது. சிலுவை மரணத்தின்போது சரீரத்தில் அவர் பட்ட பாடுகளின் விவரங்களைக் குறித்து சுவிசேஷங்களை எழுதிய ஆசிரியர்கள் வலியுறுத்தவில்லை. ஏனென்றால், அவர் சிலுவையில் மரிக்கும்போது இயேசு தமது ஆவியில் பட்ட பாடுகள்தான் நம்மை இரட்சித்தது.

இயேசுவின்மீது நமது பாவங்கள் சுமத்தப்பட்டதை ஒரு ஆங்கில வேதாகம வல்லுநர் பின்வரும் உதாரணங்களால் விவரிக்கிறார்: உலகிலுள்ள எல்லாக் கழிவுகளையும் ஒரே நேரத்தில் அப்புறப்படுத்தி, தூய்மையின்மீது அதிக ஆர்வம்கொண்டவரும், குற்றமற்றவருமான ஒருவரின் தலைமீது அதை வைப்பதைக் கற்பனைசெய்துகொள்ளவும். அப்பொழுது ஏசாயா கூறிய ''நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது'' என்பதின் கருத்து உங்களுக்குக் கிடைக்கும். அப்போஸ்தலனாகிய பவுலின் பின்வரும் வார்த்தைகளை உங்களால் பாராட்ட முடியும்: ''பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்'' (ஏசாயா 53:5, 6; 2 கொரி. 5:21).

அதிகம் படித்த ஒரு பெண்மணி ஆராதனையை விட்டுப் போகும்போது போதகர் டாக்டர் ஜி. காம்பெல் மோர்கனிடம் ''இன்று காலையில் நீங்கள் கூறிய உதாரணம் பயங்கரமானதும் கொடூரமானதும் என்று நான் நினைக்கிறேன்'' என்றாள். அதற்கு அவர் ''கொடூரமானதும் பயங்கரமானதுமாக நான் கொடுத்த உதாரணத்தைக் குறித்த ஒரேயொரு காரியம் இதுதான். நமது இரட்சகரைப் பலியாகக் கொடுக்கும்படியான அவசியத்தை ஏற்படுத்தியது உன்னுடைய பாவமும் என்னுடைய பாவமுமே'' என்று பதிலளித்தார்.

யோவானின் சுவிசேஷத்தின் இந்தப் பெரிய அதிகாரத்தில் இயேசு யார்? அவர், உலகத்தின் பாவங்களை நீக்க வந்த தேவஆட்டுக்குட்டி யானவராவார்.

இந்த அதிகாரத்தைப் பொருத்தவரை, விசுவாசம் என்றால் என்ன? இயேசுவின் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் அவருடன் காணப்பட்டவர்களாகப் பகிரங்கமாகத் தங்களை வெளிப்படுத்திய அரிமத்தியா ஊரானான யோசேப்பு மற்றும் நிக்கொதேமுவின் உதாரணத்தைப் பின்பற்றுவதுதான் விசுவாசமாகும்.

யோவான் எழுதிய சுவிசேஷத்தின் பத்தொன்பதாம் அதிகாரத்தின்படி, வாழ்க்கை என்றால் என்ன? சிலுவையில் அவர் தொங்கியபோது தேவனுடைய ஒரேபேறான குமாரன் நம்மெல்லாருக்காகவும் விலைக்கிரயமாகப் பெற்ற இரட்சிப்புதான் வாழ்க்கையாகும். வாழ்க்கை என்பது, தேவனோடு ஒப்புரவாகி சமாதானத்தோடு இருப்பதாகும். யோவான் கூறும் ''நித்தியஜீவன்'' என்பது, இயேசு கிறிஸ்துவில் நமது நம்பிக்கையை வைக்க நாம் தனிப்பட்ட முறையில் அர்ப்பணித்ததினால் தேவனோடு நாம் ஒப்புர வாகும்போது நாம் அனுபவிக்கும் வாழ்க்கையின் தரமாகும்.

அத்தியாயம் ஐந்து

‘‘அவர் உண்மையாகவே உயிர்த்தெழுந்தார்!’’ அடிப்படையான அடையாளம்

(20:1–31)

இந்தச் சுவிசேஷத்தின் இருபதாம் அதிகாரத்தை நாம் படிக்கும் போது, இயேசுவே கிறிஸ்து, தேவகுமாரன் என்று நம்மை நம்பச் செய்யும் அற்புதமான அடையாளங்கள் அல்லது ஆதாரங்களைக் குறித்து யோவான் விவரிப்பதை நாம் காண்கிறோம். இயேசுவின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய அவனுடைய கூற்றில் யோவான் அறிவிக்கும் அடிப்படையான அடையாளம் என்னவாயிருக்கும் என்பதை இப்பொழுது பார்க்கிறோம்.

இயேசு யாருக்காக, எதைக் குறித்து உரிமைபாராட்டுகிறார் மற்றும் இந்த உலகிற்கு ஏன் வந்தார் என்பதையெல்லாம் நிரூபிக்கும் இந்த அடையாளத்தைத் தெரிவிக்க அவருடைய சுவிசேஷத்தின் இறுதி அதிகாரங்கள் வரை யோவானால் காத்திருக்க முடியவில்லை. இந்த அடையாளத்தைப் பற்றி இரண்டாவது அதிகாரத்திலேயே நமக்குச் சொல்லுகிறார். இயேசு ஆலயத்தைத் தூய்மைப்படுத்தியபோது, மதத் தலைவர்கள் அவருடைய இந்தக் கடுமையான செயலுக்கான அடையாளத்தைக் காட்டும்படி அவரைக் கேட்கின்றனர். அதற்கு இயேசு ‘‘இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்’’ என்றார்.

இப்படி இயேசு சொன்னபோது அவர் சாலொமோன் கட்டிய ஆலயத்தைக் குறிப்பிடுகிறார் என இந்த மதத் தலைவர்கள் எண்ணியதாக நமக்குக் கூறுவதின் மூலம் மற்றச் சுவிசேஷத்தை எழுதியவர்கள் இந்த உரையாடலை ஒப்புமைப்படுத்துகின்றனர். எனினும், அவரது சரீரமாகிய ஆலயத்தை அவர் குறிப்பிடுகிறார் என்ற தங்களது விமரிசனத்தை உட்புகுத்துகின்றனர். அவர்களுக்கு அவர்

பிரதியுத்தரமாக: ‘‘இந்தப் பொல்லாத விபசார சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள்; ஆனாலும் யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறே அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப் படுவதில்லை. யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்ததுபோல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்’’ (மத். 12:39–40).

நாம் இதுவரை பார்த்தபடி, யோவானின் சுவிசேஷத்தின் முக்கிய நோக்கமாக இது இருப்பதால், இயேசு யாருக்காக, எதற்காக உரிமை பாராட்டுகிறார் மற்றும் இந்த உலகத்திற்கு ஏன் வந்தார் என்பதற்கான அநேக அடையாளங்களை இயேசு தருவதை யோவான் பதிவுசெய்திருக் கிறார். எனினும், மரணத்திலிருந்து இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்ததின் அடிப்படை அடையாளத்துடன் இந்தச் சுவிசேஷத்தின் இரண்டு மற்றும் இருபதாம் அதிகாரங்களில் அந்த அற்புதமான ஆதாரங்களைப் பற்றிய தனது அறிமுகத்தை யோவான் வேண்டுமென்றே ஆரம்பித்து முடிக்கிறார் என்று நான் நம்புகிறேன்.

இதனால்தான் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தும் காரியத்தைக் குறித்து மற்றச் சுவிசேஷங்களின் ஆசிரியர்கள் தங்களது சுவிசேஷங் களின் இறுதியில் சொல்லும்போது, யோவான் தனது சுவிசேஷத்தின் ஆரம்பத்திலேயே நமக்குச் சொல்லுகிறார் என நான் அறிவுறுத்தப் பட்டேன். இரண்டு காரணங்களுக்காக யோவான் இதைச் செய்தார் என நான் நம்புகிறேன்: முதலாவது, யோவான் இந்தச் சுவிசேஷத்தை எதற்காக எழுதினாரோ — அதாவது இயேசுதான் கிறிஸ்து அல்லது மேசியா என நாம் நம்ப வேண்டுமென்ற அடிப்படை நோக்கத்தை — இந்த அற்புதம் அதிகமாகப் பலப்படுத்துகிறது. இரண்டாவது காரணம், தனது சுவிசேஷத்தின் ஆரம்பத்தில் இந்த அடையாளத்தை வைத்து இயேசுதான் தேவன் என்ற குறிப்பை ஏற்படுத்துவதற்காகத்தான்.

இந்த இருபதாம் அதிகாரம் பூமியிலுள்ள எல்லா ஜாதியினருக்கும் பிரசங்கிக்கும்படி, தம்முடைய அப்போஸ்தலர்களுக்கும் சீஷர்களுக்கும் இயேசு கட்டளையிட்ட இந்தச் சுவிசேஷத்தின் மையப் பொருளை அறிவிக்கிறது (மாற்கு 16:15). உயிர்த்தெழுதல் சுவிசேஷத்தின் அதிக உற்சாகமளிக்கும் பகுதியாகும். சுவிசேஷம் என்பது நமது பாவங்களுக் காக இயேசுகிறிஸ்துவின் மரணமும், இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழு தலுமாகும்.

1 கொரிந்தியர் பதினைந்தாம் அதிகாரத்தில், சுவிசேஷம் என்றால் என்ன என்பதைப் பற்றிப் பவுல் எழுதியபோது, ‘‘நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்து கிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள்.

நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக் கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக் குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த் தெழுந்து'' (1 கொரி. 15:1–4) என்று கூறுகிறார்.

சுவிசேஷம் அடிப்படையில் இயேசுகிறிஸ்துவைப் பற்றி இரண்டு உண்மைகளைக் கொண்டதாகும். நமது பாவங்களுக்காக இயேசு மரித்ததும், அவர் உயிர்த்தெழுந்ததுமாகும். நமது பாவங்களால், கடந்த காலம் நிகழ்காலம் மற்றும் வருங்காலத்தில் நமக்கு வரவேண்டிய எல்லாத் தண்டனைகளையும் யாருடைய மரணம் அகற்றினதோ, அந்த தேவ ஆட்டுக்குட்டியாக இருப்பதற்கான தகுதிபடைத்தவர் அவர் என்பதை அது நிரூபிக்கிறது. இந்தச் சுவிசேஷத்தின் பத்தொன்பதாம் அதிகாரத்தில் சுவிசேஷத்தின் முதல் உண்மையையும், இருபதாம் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்த சுவிசேஷத்தின் இரண்டாவது உண்மையையும் யோவான் எழுதுகிறார்.

இருபதாம் அதிகாரம் மூன்று வெவ்வேறு சம்பவங்களை அறிவிக் கிறது. முதல் சம்பவம் அப்போஸ்தலர்கள், அதுவும் சிலுவையிலறையப் பட்ட இயேசுவுக்கு மிகவும் நெருக்கமானவர்கள் கல்லறை காலியாக இருந்தது என்ற மகிமையான அற்புதத்தைக் கண்டுகொண்டதுதான். முதல் ஈஸ்டர் ஞாயிறு என்று இப்போது நாம் நினைக்கும் அந்த அதிகாலை நேரத்தில் முதல் சம்பவம் நடக்கிறது.

மரணத்திலிருந்து இயேசு உயிரோடெழுந்த அந்த நாள், ''ஈஸ்டர்'' அல்லது ''உயிர்த்தெழுந்த ஞாயிறு'' என நாம் அழைப்பதற்கு அடிப்படை யானது மட்டுமல்லாது, இந்த யூத அப்போஸ்தலர்கள் தங்கள் ஆராதனை நாளை ஓய்வுநாளிலிருந்து (ஏழாவது நாள் அல்லது சனிக்கிழமை) வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றுவதற்குக் காரணமான அற்புதமாகும். அவர்கள் ஆராதனை நாளை மாற்றும்படி எது அவர்களைத் தூண்டியிருக்கும்? நாம் கவனமாக வாசித்தால், வாரத்தின் முதல் நாளை அவர்கள் ஒருபோதும் ''ஓய்வுநாள்'' என அழைக்கவில்லை என்பதை நாம் காணலாம். இந்த விசேஷித்த நாளைக் ''கர்த்தரின் நாள்'' என அவர்கள் குறிப்பிடுகின்றனர். அவர்கள் தங்களின் ஆராதனை நாளை மாற்றியதற்கு வாரத்தின் முதல் நாள்தான் இயேசு மரணத்திலிருந்து உயிரோடெழுந்த நாள் என்பது காரணமாகும். இரண்டாயிரம் ஆண்டுகளாக விசுவாசிகள் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராதித்து வருகின்றனர் என்ற உண்மை இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதற்கான அநேக ஆதாரங்களில் ஒன்றாகும்.

இந்த முதல் சம்பவத்தை விவரிக்கும் விவரிப்பு இயேசு சிலுவையில் அறையப்பட்ட பின்பு வந்த ஞாயிற்றுக்கிழமையின் அதிகாலைக்கு முன்பாக ஆரம்பிக்கிறது. இந்த அதிகாரத்தில் விவரிக்கப்பட்ட இரண்டாவது சம்பவம் முதல் ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமையின் மாலையில் நடைபெறுகிறது. மூன்றாவது சம்பவம் ஒரு வாரத்திற்குப் பின்பு நிகழ்கிறது. அதில் ''எது விசுவாசம்?'' என்ற கேள்விக்குரிய முக்கியமான பதிலைத் தோமா கற்றுக்கொள்கிறான், நமக்கும் போதனையளிக்கப் படுகிறது.

இந்த மூன்று சம்பவங்களின் முதலாவது சம்பவத்தை இந்த வகையில் யோவான் விவரிக்கிறார்: ''வாரத்தின் முதல் நாள் கலையில், அதிக இருட்டோடே, மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப் போட்டிருக்கக் கண்டாள். உடனே அவள் ஓடி, சீமோன் பேதுருவினிடத்திலும் இயேசுவுக்கு அன்பாயிருந்த மற்றச் சீஷனிடத்திலும் போய்: கர்த்தரைக் கல்லறை யிலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை என்றாள்'' (20:1,2).

இன்னும் இருளாக இருக்கும்போதே மகதலேனா மரியாள் கல்லறைக்கு வந்தபோது கல் அகற்றப்பட்டிருப்பதை அவள் கண்டதாக நாம் வாசிக்கிறோம். கல்லறை மூடப்பட்டிருக்கும்போது, மூடியிருக்கும் கல் அந்தப் பாதையிலிருந்து அகற்றப்பட்டிருப்பதை மரியாள் கண்டதாக யோவான் நமக்குக் கூறுகிறார்.

''காண்பது'' என்பதற்கு அநேக கிரேக்க வார்த்தைகள் உண்டு. இங்கு ''கண்டாள்'' என்பதற்கு யோவான் பயன்படுத்தும் முதல் வார்த்தை ஒரு குறிப்பிட்ட தூரத்திலிருந்து அவள் கண்டாள் என அர்த்தப்படுகிறது. இது ஒரு சாதாரண குறிப்பாகும். அவள் உடனடியாகச் சீமோன் பேதுருவிடம் ஓடுகிறாள். அவளது இந்தச் செயல் என்னைக் கவர்ந்தது. பேதுரு மூன்று முறை இயேசுவை மறுதலித்திருந்தாலும் இந்தப் பிரச்சினையைக் குறித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய முதல் நபர் பேதுருதான் என அவள் எண்ணினாள். அந்த நேரத்தில் இயக்கத்தின் தலைவனாகப் பேதுருவை அவள் கருதினாள்.

பேதுரு இயேசுவை மறுதலித்ததைக் குறித்து இயேசு மற்றும் ஒன்றிரண்டு அப்போஸ்தலர்களைத் தவிர்த்து ஒருவரும் அறிந்திருக்க வில்லை என்று இதற்கு அர்த்தமாகலாம். பேதுரு வெளியே சென்று இருளில் மனமுடைந்து அழுததற்கும், உயிர்த்தெழுதலின் செய்தியைக் கேட்டதற்கும் இடைப்பட்ட காலத்தில் பேதுரு எங்கு எவ்வாறு இருந்திருப்பான் என நமக்கும் ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா? அந்தக் காலத்தை யோவானோடு செலவழித்ததைக் காட்டும்படியான

ஆதாரங்கள் இந்த வேதவசனங்களில் உண்டு என சில அறிஞர்கள் நம்புகின்றனர். ஒருவேளை அவர்களின் யூகம் சரியென்றால், பேதுருவைத் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்லுமளவுக்கு யோவான் அவனிடம் அன்புகாட்டினான் என்று அர்த்தமாகிறது. இந்தச் சுவிசேஷத்தை எழுதிய அன்பின் அப்போஸ்தலன் இயேசுவை மட்டும் நேசிக்கவில்லை, பேதுருவையும் நேசித்தான்.

மகதலேனா மரியாள் இன்னமும் பேதுருவைச் சீடர்களின் தலைவனாகக் கருதுகிறாள். இயேசுவுக்கு நெருக்கமாக இருந்தவர்களைக் கொண்ட இந்தச் சிறிய கூட்டத்திற்கு அவன் தலைவனாக இருந்ததோடல்லாமல், சுவிசேஷத்தின் இரண்டாவது பாதியைக் கண்டுபிடித்தவனாகவும் இருந்திருக்கலாம். ''சுவிசேஷம்'' என்ற வார்த்தைக்கு ''நற்செய்தி'' என்று அர்த்தமாகும். தேவன் பேதுரு தமது சபையைக் கட்டுவான் என்று கூறியதை அவன் மறந்துபோகவில்லை என்பதை நாம் யூகிக்க முடியும் (மத். 16:13–18). அவனது மறுதலிப்பினால், அந்த வாக்குத்தத்தம் எவ்வாறு நிறைவேற முடியும் எனப் பேதுரு ஆச்சரியப்பட்டிருக்கலாம். இந்தச் சுவிசேஷத்தின் கடைசி அதிகாரத்தில் இந்தக் கேள்விக்கான பதிலை நாம் காண்போம்.

மரியாள் பேதுருவிடமும் யோவானிடமும் ஓடி ''கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை'' என்றாள். ''போய்விட்டார்கள்'' என்று யாரை அவள் குறிப்பிடுகிறாள்? அவளது கர்த்தரைச் சிலுவையிலறைந்த யூதர்களை அவள் குறிப்பிட்டிருக்கலாம். இயேசுவைச் சிலுவையிலறைந்ததின்மூலம் அவரது தண்டனையை நிறைவேற்றிய ரோமர்களை அவள் குறிப்பிட்டிருக்கலாம். ''எங்களுக்கு'' என அவள் கூறுகிறாள். ஏனென்றால், மற்றச் சுவிசேஷங்களில் கூறப்பட்டிருப்பதுபோல, அவள் கல்லறைக்குத் தனியாகச் செல்லவில்லை.

நிகழ்ச்சி இப்படித் தொடர்கிறது: ''அப்பொழுது பேதுருவும் மற்றச் சீஷனும் கல்லறையினிடத்திற்குப் போகும்படி புறப்பட்டு, இருவரும் ஒருமித்து ஓடினார்கள். பேதுருவைப் பார்க்கிலும் மற்றச் சீஷன் துரிதமாய் ஓடி, முந்திக் கல்லறையினிடத்தில் வந்து, அதற்குள்ளே குனிந்து பார்த்து, சீலைகள் கிடக்கிறதைக் கண்டான்; ஆனாலும் அவன் உள்ளே போகவில்லை. சீமோன் பேதுரு அவனுக்குப் பின்னே வந்து, கல்லறைக்குள்ளே பிரவேசித்து, சீலைகள் கிடக்கிறதையும், அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்றச் சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஓரிடத்தில் சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான். முந்திக் கல்லறையினிடத்திற்கு வந்த மற்றச் சீஷனும் அப்பொழுது உள்ளே பிரவேசித்து, கண்டு விசுவாசித்தான்'' (வச. 3–8).

மற்றப் புதிய ஏற்பாட்டு ஆசிரியர்களைவிட அதிகமாக அன்பு என்ற வார்த்தையைப் பயன்படுத்திய அன்பின் அப்போஸ்தலன், இயேசுவைச் சந்தித்தபோது, தான் இதற்குமுன் நேசிக்கப்பட்டிராத அளவு தன்னை நேசித்த ஒருவரைச் சந்தித்த உண்மையிலிருந்து அவரால் மீள முடியவில்லை. இந்த நான்காவது சுவிசேஷத்தை எழுதி அறுபது வருடங்களுக்குப் பின்பு வேதாகமத்திலுள்ள கடைசிப் புத்தகத்தை இயேசுவுக்கு அர்ப்பணித்தபோது, இயேசுவைப் பற்றி அவரு க்கிருந்த முதல் ஞாபகம் ''அவர் நம்மை நேசித்தார்'' என்பதாகும் (வெளி. 1:5). புதிய ஏற்பாட்டின் முடிவின் அருகில் காணப்படும் அவருடைய ஆர்வமூட்டும் நிருபத்தின் ஒரு பகுதி, நாம் ஏன் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும் என்பதற்கான பத்துக் காரணங்களை நமக்குத் தருகிறது (1 யோவான் 4:7–11).

அப்போஸ்தலர்களில் யோவான் மட்டுமே அதிக வயது சென்றும் வாழந்தார் எனத் திருச்சபை வரலாறு நமக்குக் கூறுகிறது. அவரது நீண்ட வாழ்க்கையின் கடைசிக் காலங்களில் அவர் மிகவும் பெலவீனமாகவும் தளர்ந்துபோனவராகவும் இருந்தார். எபேசு சபையின் கூட்டங்களுக்கு அவரைத் தூக்கிச் சென்றனர். அவரது கடைசி வருடங்களில் அவர் அங்குதான் இருந்தார். நீண்ட வெண்மையான தாடியுடன் பார்ப்பதற்குக் கௌரவமிக்கவராய் இந்த அன்பின் அப்போஸ்தலன் தனது கையை உயர்த்தி, ஆசீர்வதித்து, உச்ச ஸ்தாயியிலும் மெலிந்த குரலுடனும் ''சிறு பிள்ளைகளே, ஒருவரையொருவர் நேசியுங்கள்'' என்று சொல்லுவார்.

''காண்பது'' என்பதற்கான இந்த வார்த்தைகள் வேறுபட்ட வார்த்தைகள் என்பதை நினைவுகூரவும் (யோவான் 20:5–6). ''அவன் கண்டான்'' என்பதை நாம் படிக்கும்போது அசல் கிரேக்க வார்த்தைகளைப் பரிசீலித்தால் இயேசு அடக்கம்பண்ணப்பட்ட கல்லறையண்டை நிஜமாகவே என்ன நடந்தது என்பதைக் குறித்த சில கருத்துக்கள் நமக்குக் கிடைக்கும். பேதுரு வெறுமையாக இருந்த கல்லறைக்குள் நுழைந்தபோது, அவன் எதையோ கண்டான் என யோவான் எழுதுகிறார். இந்த முறை யோவான் பயன்படுத்தும் வார்த்தையின் அர்த்தம், பேதுரு தான் கண்டதை நெருக்கமாகப் பரிசீலித்தான் என்பதாகும். இந்த நான்கு சுவிசேஷங்களிலுமுள்ள பெரிய அற்புதத்தைப் பேதுரு நெருக்கமாகப் பரிசீலித்தான்.

இந்தப் பகுதியை நீங்கள் கூர்ந்து படித்தால், பேதுருவும் யோவானும், இயேசுவின் சரீரம் முழுவதிலும் சுற்றப்பட்டிருந்த துணிகள் இன்னும் தொடப்படாத நிலையில் ஒரு பூச்சியினால் கழற்றிவிடப்பட்ட கூட்டைப்போல இருந்ததைக் கண்டார்கள் என்பதை அறிஞர்கள் அனைவரும் ஒப்புக்கொள்வதை நீங்கள் காண்பீர்கள். இயேசு

அவற்றினுள் அப்போது இருக்கவில்லை என்பதே அற்புதமாகும். அந்தத் துணிகள் அவிழ்க்கப்பட்டிருக்கவில்லை. அந்தக் கல்லறையின் மூலையில், சுற்றப்பட்ட துணிகள் குவிந்துகிடக்கவில்லை. அவர்கள் என்ன கண்டார்கள் என்பதைக் கற்பனைக் கண்ணில் காண முயற்சி செய்யுங்கள். ஒரு சரீரத்தின் வடிவில் இன்னமும் காணப்பட்ட கல்லறைத் துணிகளை அவர்கள் கண்டனர். தலையில் சுற்றப்பட்டிருந்த துணிகள் தனியாகப் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்தன. ஆனால், கல்லறை திருடப் பட்டிருந்தது என்று அவர்கள் சொன்ன விதத்தில் அவைகள் இல்லை. அவர்கள் கல்லறையினுள் நுழைந்தபோது, இந்த உலகம் இதுவரை அறிந்திராத பெரிய அற்புதத்தைத் தாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்பதை உடனடியாக அவர்கள் அறிந்துகொண்டனர்.

யோவான் ''கண்டு விசுவாசித்தான்'' என்று நாம் வாசிக்கும்போது ''காண்பதற்கு'' இன்னொரு கிரேக்க வார்த்தையை யோவான் பயன் படுத்துகிறார். அதற்கு ''நான் இப்பொழுது அதைக் கண்டு புரிந்து கொள்கிறேன்'' என்பதே அர்த்தமாகும். இந்த வார்த்தையை நாம் பயன்படுத்தும்போது இந்த வகையில் அர்த்தப்படுத்துகிறோம்: ''நான் புரிந்துகொண்டு நான் கண்டதை விசுவாசித்தேன்.'' என்ன நிகழ்ந்தது என்பதை முழுவதும் உணர்ந்தவனாக அவன் கண்டு விசுவாசித்தான்.

பின்பு யோவான் இவ்வாறு விமரிசிக்கிறார்: ''அவர் மரித்தோரி லிருந்து எழுந்திருக்க வேண்டும் என்கிற வேத வாக்கியத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தார்கள்.'' திரும்பவும் அவர் இப்படியாகத் தொடருகிறார்: ''பின்பு அந்தச் சீஷர்கள் தங்களுடைய இடத்திற்குத் திரும்பிப் போனார்கள். மரியாள் கல்லறையினருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள்'' (யோவான் 20:9–11).

மகதலேனா மரியாளின் பின்னால் ஓடி, தாங்கள் எதைக் கண்டார் களோ அதைக் குறித்துப் பேதுருவும் யோவானும் பரவசமடைந்தனர். அவர்கள் என்ன கண்டார்களோ, அதற்கு என்ன அர்த்தமோ, அதை அவளிடம் விளக்குவதற்காக அவர்கள் நிற்கவில்லை. இந்த நற்செய்தி மரியாளைப் பொருத்தவரை எப்படியிருந்திருக்குமெனக் கற்பனை செய்து பாருங்கள். இருப்பினும், அவர்களின் உற்சாகத்தில் அவளைக் கல்லறையண்டையில் அழுதுகொண்டு நிற்பவளாக விட்டுவிட்டு, அந்த முதல் ஈஸ்டரின் நற்செய்தியைப் பரப்புவதற்கு அவர்கள் திரும்பிச் சென்றனர் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியும். இயேசுவின் எதிரிகள் சரீரமாகிய ஆலயத்தை அழித்து நாசமாக்கினார்கள் (2:19). இந்தச் சுவிசேஷம் முழுவதும், இயேசு தமது சரீரத்தைத் தாமே தமது சொந்த விருப்பத்தின்படியே ஒப்புக்கொடுத்தார் என்பதை யோவான்

நிச்சயப்படுத்துகிறார். தமது வாழ்க்கையை ஒப்புக்கொடுக்கவும் திரும்பப் பெறவும் அவருக்கு அதிகாரமிருந்தது (10:18).

மரியாள் அழுதபோது, ''... அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து, இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளுடை தரித்தவர்களாய் இரண்டு தூதர்கள், தலைமாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனுமாக, உட்கார்ந்திருக்கிறதைக் கண்டாள். அவர்கள் அவளை நோக்கி: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய் என்றார்கள். அதற்கு அவள்: என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள, அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை என்றாள். இவைகளைச் சொல்லிப் பின்னாகத் திரும்பி, இயேசு நிற்கிறதைக் கண்டாள், ஆனாலும் அவரை இயேசு என்று அறியாதிருந்தாள்'' (20:11–14).

இயேசுவை அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு முன்பு அறிந்து நேசித்தவர்கள் உயிர்த்தெழுந்தபின்பு அவர் தங்களுக்கு முன்னால் தோன்றியபோது அவரைக் கண்டுகொள்ளவில்லை என்பதைக் கவனிக்கவும். அவரது உயிர்த்தெழுந்த சரீரம் அவர்கள் முன்பு அறிந்த இயேசுவின் சரீரத்திலிருந்து மாறுபட்டிருந்தது. இயேசு இப்பொழுது மரியாளிடம், ''ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய் என்றார். அவள், அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி: ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும். நான் போய் அவை எடுத்துக் கொள்ளுவேன் என்றாள்'' (வச. 15). (''நான் அவரைத் தூக்கிப் போகிறேன்'' என்று அவள் நிஜமாகவே சொல்லுவதாக கிரேக்க வார்த்தைகள் நமக்குச் சொல்லுகின்றன).

பின்பு நாம் இவ்வாறு வாசிக்கிறோம்: ''இயேசு அவளை நோக்கி: மரியாளே என்றார். அவள் திரும்பிப் பார்த்து: ரபூனி என்றாள்; அதற்குப் போதகரே என்று அர்த்தமாம். இயேசு அவளை நோக்கி: என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப் போகவில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத் திற்கும் ஏறிப் போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்றார். மகதலேனா மரியாள் போய், தான் கர்த்தரைக் கண்டதையும், அவர் தன்னுடனே சொன்னவைகளையும் சீஷருக்கு அறிவித்தாள்'' (வச. 16–18).

இது மிக உருக்கமான கதையாகும். மற்றச் சுவிசேஷங்களில், ஏழு பிசாசுகள் விரட்டப்பட்டதாகக் கூறப்படும் ஒரு பெண்தான் மகதலேனா மரியாள் என்று நாம் வாசிக்கிறோம். வேதாகமத்தில் ஏழு என்ற எண்

பூரணத்தைக் குறிக்கும் ஒரு அடையாளமாக இருந்தது. எனவே அவள் முழுவதும் பிசாசினால் ஆட்கொள்ளப்பட்டிருந்தாள். அவளிடமிருந்து அவையெல்லாவற்றையும் இயேசு விரட்டினார் (லூக்கா 8:1–3). அவள் சிலுவையண்டையில் நின்றிருந்ததில் வியப்பொன்றுமில்லை. அவள் அங்கிருந்து ''அவர் எனக்குச் செய்தவற்றை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன்'' என்று சொல்லுவது போலிருந்தது.

உங்களுக்குப் பிசாசு பிடித்திருந்து, அதிலிருந்து இயேசு உங்களை விடுவித்தால், இயேசுவை எவ்வளவாய் நீங்கள் நேசிப்பீர்கள் என்பதைக் கற்பனைசெய்து பாருங்கள். சுவிசேஷங்களில் ஒன்றில் அந்த மரியாளைப் பற்றி ''இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது; இவள் அதிகமாய் அன்புகூர்ந்தாளே'' என இயேசு சொன்னார். ஆம், இந்த மரியாள் அதிகப் பாவம்செய்தாள், அவளது பாவங்களிலிருந்து அவளை விடுவித்தவரை அவள் அதிகமாக நேசித்தாள் (லூக்கா 7:47–50). அதனால்தான் இயேசுவின் சீடர்கள் எல்லாரும் அவரை விட்டுப் போனபோதும், அவள் சிலுவையண்டையில் நின்றிருந்தாள்.

மரியாளிடம் இயேசு ''என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப் போகவில்லை'' என்று சொல்லிவிட்டு, ஒரு வாரத்திற்குப் பின்பு தம்மைத் தொடும்படியாக அவர் தோமாவை அழைத்தது அநேகருக்கு ஆச்சரியமாக இருக்கும். அவள் அவரை இயேசு என்று புரிந்துகொண்டதும், அவள் அவரைப் பிடித்துக் கொண்டாள் என்பது தெளிவாகிறது. அவள் சந்தோஷத்தினால் நிறையப் பட்டிருந்தாள்! அதனால் ''என்னை இறுகப் பிடித்துக்கொள்ளாதே'' என்ற அர்த்தத்தில் அவர் இதைச் சொல்லுகிறார்.

அவரது மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் வருகைக்குப் பின், அவருடன் ஒரு புதியதும் அதிக நெருக்கமானதுமான உறவு இருக்கப் போகிறது என மேலறையில் அப்போஸ்தலர்களிடம் அவர் விளக்கினார். அவர்களில் அவரும், அவரில் அவர்களும் இருக்கப் போகிறார்கள். அவருடனிருந்த மூன்று வருடங்களில் அவர்கள் அனுபவித்ததைவிட அதிக நெருக்கமான வகையில் அவருடன் இருக்கப் போகின்றனர். எனினும், இந்த உண்மைகள் மகதலேனா மரியாளுக்கு விளக்கிச் சொல்லப்படவில்லை.

தாம் பிதாவினிடம் செல்லப்போவதை அவர் மரியாளிடம் ''நீ என் சகோதரரிடத்திற்குப் போய், அவர்களுக்குச் சொல்லு'' என்று கூறும்போது, இயேசு அப்போஸ்தலர்களைத் தமது சகோதரர்கள் என்று குறிப்பிடுகிறார். அவர் அப்போஸ்தலர்களிடம் ''... ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரரா யிருக்கிறீர்கள்'' எனச் சொல்லியிருக்கிறார் (மத். 23:8). இப்பொழுது

மரியாளிடம் ''நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத் திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப் போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு'' என்று கூறும்போது, அவர்களைத் தமது சகோதரர் என்று குறிப்பிடுகிறார் (வச. 17). மனிதர்களைத் தமது சகோதரர்கள் என்று அழைக்க இயேசு வெட்கப்படவில்லை (எபி. 2:11).

''அவருடைய பிதா மற்றும் அவர்களுடைய பிதா — அவருடைய தேவன் மற்றும் அவர்களுடைய தேவன்'' என்று இங்கு சொல்லப்பட்டி ருப்பதிலுள்ள வித்தியாசத்தைக் கவனியுங்கள். இதனை இரண்டு வகையாக அவர் அர்த்தப்படுத்தியிருக்கலாம். பிதாவிடம் அவருக்குள்ள உறவு ஒப்பற்றது. இந்த அப்போஸ்தலர்களுடன் அவர் ஜெபிப்பதைக் குறைவாகவே காண்கிறோம். எப்படி ஜெபிப்பது என அவர் அவர் களுக்குக் கற்றுத் தருகிறார். ஆனால் அவர் தாம் ஜெபிக்கும்போது தனியாகவே ஜெபிக்கிறார். அவர் வெறும் குமாரன் (son) அல்ல, அவரே குமாரன் (Son).

மேலறையில் அப்போஸ்தலர்களுக்கு அவர் கற்றுத்தந்தது இவ்வாறு இருந்திருக்கலாம்: ''நான் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் நான் செய்யும் ஒவ்வொரு பணிக்கும் என் பிதாவே விளக்கமாயிருக்கிறார். பிதாவுக்கு நானே வழி. இப்பொழுது, அவர் உங்கள் பிதாவும்கூட. நான் செய்வதாக, சொல்வதாக, நீங்கள் பார்க்கும் கேட்கும் எல்லாக் காரியங் களுக்கும் தேவனே விளக்கமாவார். இப்பொழுது என்னைப் போல நீங்களும் பிதாவோடு நெருக்கமாக இருக்க முடியும்.''

அதனால் மகதலேனா மரியாள் அப்போஸ்தலர்களிடம் சென்று, ''நான் கர்த்தரைக் கண்டேன்'' எனச் சத்தமிட்டாள் (20:18). எத்தனை மகிமையான செய்தி அது! அதுமட்டுமல்லாது இயேசு சொன்ன காரியங்களையும் அவள் அவர்களிடம் கூறினாள். அது அவருடைய பரத்துக்கேறுதலைக் குறித்த வெளிப்பாடாயிருக்கும்.

யோவான் சுவிசேஷத்திலுள்ள பிரதான கட்டளை

''வாரத்தின் முதல் நாளாகிய அன்றையத் தினம் சாயங்கால வேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்.

''இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதான முண்டாவதாக; பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி, அவர்கள்மேல் ஊதி: பரிசுத்த

ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்; எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ, அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும்'' என்றார் (20:19–23).

வேதாகமத்திலுள்ள இந்தப் பகுதி நம்மை மிகவும் ஈர்க்கக்கூடியது. கதவுகள் மூடப்பட்டிருந்தன. தங்களுடைய கர்த்தரைச் சிலுவையில் அறைந்த அந்த மோசமான மதத் தலைவர்கள் தங்களைத் தொடர்ந்து வரக்கூடும் என அப்போஸ்தலர்கள் இன்னும் பயந்தனர். அதனால் அவர்கள் திகில்கொண்டவர்களாய் மூடப்பட்ட கதவுகளுக்குப் பின்னால் சந்தித்துக்கொண்டனர். கதவுகள் திறக்காமலேயே இயேசு திடீரென அவர்கள் முன்பு தோன்றினார். இரண்டாவது முறை தமது சமாதானத்தின் ஆசீர்வாதத்தை அவர்களுக்கு அளித்தார். பின்பு, அவர் ஒரு பெரிய பணியை அவர்களுக்குத் தருகிறார். இது பின்வருமாறு மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம்: ''பிதா என்னை உலகத்தில் அனுப்பினதுபோல, நானும் உங்களை உலகத்தில் அனுப்புகிறேன்'' (17:18; 20:21).

அந்தப் பெரிய பணியை ஒப்படைக்கும் முன்பு, அவர்கள்மேல் ஊதி, ''பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்'' எனக் கூறினார் (வச. 22).

அந்தப் பெரிய பணியை விடுத்து, கீழ்ப்படிவதைப் பற்றிச் சொல்லும் சந்தர்ப்பத்தில் ''எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும்'' என்றார். இயேசுவின் இந்தப் போதனையை இரண்டு வகையாக எடுத்துக்கொள்ளலாம். சபை வரலாற்றில் சிலர், பாவிகளுக்குச் சுவிசேஷத்தையும், விசுவாசிகளுக்கு வேதவசனங்களையும் போதிக்கும் ஒரு ஊழியர், மன்னிக்கவும் மன்னியாதிருக்கவும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார் என்ற அர்த்தத்தில் இதை எடுத்துக்கொண்டிருக்கின்றனர். அந்த நபர் ''நான் விடுவிக்கிறேன் அல்லது நான் உன்னை மன்னிக்கிறேன்'' என்று சொல்ல முடியும் என அவர்கள் நம்புகின்றனர். ''நான் உன்னை மன்னிக்க மாட்டேன்'' என்று சொல்லவும் அதிகாரம் உண்டு என்று நினைக்கின்றனர்.

ஆனால் இந்தப் பகுதி அப்படிப் போதிக்கவில்லை. தேவனால் மட்டுமே பாவங்களை மன்னிக்க முடியும் (லூக்கா 5:17–25; கொலோ. 1:13–14). பாவிகளுக்கு நாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவோ போதிக்கவோ செய்யும்போது, அவர்கள் அதை விசுவாசித்தால், சிலுவையில் அவர்களுக்காகக் கிறிஸ்து மரித்ததினால் அவர்களது பாவங்களைத் தேவன் மன்னிக்கிறார் என்பதை உறுதிபடக் கூற

வேண்டும். அவர்கள் சுவிசேஷத்தை விசுவாசியாவிட்டால், அவர்களின் பாவங்கள் மன்னிக்கப்படவில்லை என்பதை நாம் அறிவிக்க முடியும். தேவனுடைய மன்னிப்பை ஏற்றுக்கொள்ளும்படி பாவிகளுக்கு அழைப்புக் கொடுக்கும் ஒரு போதகரைப் போல், அநேக முறைகள் நான் இதைச் செய்திருக்கிறேன். சுவிசேஷத்தை அறிவிக்கும் எவரும் இதைச் செய்ய முடியும்.

இந்த அதிகாரத்திலுள்ள மூன்றாவது பெரிய போதனை 24ஆம் வசனத்தில் ஆரம்பிக்கிறது. ''விசுவாசம் என்றால் என்ன?'' என்பதற்கான ஆழமான பதிலை இந்தப் போதனை நமக்குத் தருகிறது. அப்போஸ்தலர்களுக்கு இயேசு காட்சியளித்தபோது, தோமா அங்கில்லை என நாம் வாசிக்கிறோம். ''மற்றச் சீஷர்கள்: கர்த்தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள். அதற்கு அவன்: அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என்றான்.

''மறுபடியும் எட்டு நாளைக்குப் பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார்.

''தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான். அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்'' (20:24–29).

தோமாவிடம் இயேசு கூறிய இந்த அறிவிப்பை ''ஒன்பதாவது பாக்கிய வசனம் (beatitude) என்று நாம் அழைக்கலாம். மலைப்பிரசங்கத்தில் இயேசு கற்றுத்தந்த எட்டு அழகான, ஆசீர்வாதமான நெறிமுறைகளுடன் (மத். 5:3–11) ''காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்'' (யோவான் 20:4) என்பதையும் நாம் சேர்க்க முடியும்.

இந்தப் பகுதியினால் நாம் தோமாவை ''சந்தேகப்படும் தோமா'' என அழைக்கிறோம். இதே தோமா, அப்போஸ்தலர்கள் எல்லாரும் தங்களுக்கு ஆபத்து வரலாம் எனப் பயந்தபோது, ''அவரோடேகூட மரிக்கும்படிக்கு நாமும் போவோம் வாருங்கள்'' என்று சொல்லியிருந்தான் (யோவான் 11:16).

தோமாவிற்கு விசுவாசம் இருந்தது. ''என் ஆண்டவரே! என் தேவனே!'' என்ற தோமாவின் இந்த வார்த்தைகளை நோக்குங்கள். தோமாவின் இந்த வார்த்தைகள்தான் யோவான் இந்தச் சுவிசேஷத்தை எழுதுவதற்கான நோக்கமாகும். இயேசுவே தேவ குமாரனாகிய கிறிஸ்து என்பதை நாம் நம்ப வேண்டுமென்ற நோக்கத்திற்காகவே யோவான் இதை எழுதியிருக்கிறார். இதைத்தான் தோமா அறிக்கைசெய்கிறார். இயேசுவை இரட்சகராக மட்டும் தோமா பகிரங்கப்படுத்தவில்லை. தனது கர்த்தரும், தனது தேவனுமாக இயேசுவில் தான் கொண்ட விசுவாசத்தையும் அவர் வெளிப்படுத்துகிறார்.

''நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய்'' என்று தோமாவின் விசுவாசத்தைப் பற்றிய தமது உண்மையான மதிப்பீட்டைத் தெரிவித்த பிறகு, ''காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்'' (20:29) என்ற ஒன்பதாவது நெறிமுறையை இயேசு அறிவிக்கிறார். அப்போஸ்தலர்கள் அனைவரும் இயேசுவைக் கைவிட்டபோது, பேதுரு இயேசுவை மறுதலித்ததற்காக நாம் அவனிடம் கடுமையாக இருக்கக் கூடாது (மாற்கு 14:50). மூன்று வருடங்கள் இயேசுவைப் பின்பற்றியும் தான் கண்டதை மட்டும் விசுவாசித்த தோமாவிடம் நாம் கடுமையாக இருக்கக் கூடாது. கானாவூரில் அவர்கள் தண்ணீர் திராட்சரசமாக மாறியதைக் கண்டதினால் விசுவாசித்தார்கள். புயலைக் கர்த்தர் அமரப் பண்ணியதையும், நூற்றுக்கணக்கானவர்களைக் குணமாக்கியதையும், லாசருவை உயிரோடெழுப்பியதையும் அவர்கள் கண்டதினால் விசுவாசித்தனர். ''விசுவாசம் என்றால் என்ன?'' என்ற கேள்விக்கான பதிலைத் தோமாவுக்கு மட்டுமல்லாது மற்ற அப்போஸ்தலர்களுக்கும் இயேசு கற்றுத்தந்தார்.

எனினும், ''காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்'' என்ற இந்த ஒன்பதாவது நெறிமுறையைப் பாருங்கள். வாக்குப் பண்ணப்பட்ட இந்த ஆசீர்வாதம் எந்த மக்களுக்குப் பொருந்தும்? கண்டதினால் விசுவாசித்த மற்ற அப்போஸ்தலர்களுக்கு அல்ல. இதுவரை கண்டிராத, உயிர்த்தெழுந்து ஜீவிக்கிற கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, திருச்சபை வரலாற்றின் எல்லா நூற்றாண்டுகளிலும் இயேசுவைப் பின் தொடரப் போகும் இலட்சக்கணக்கான விசுவாசிகளுக்காகவே இந்த ஒன்பதாவது பாக்கிய நெறிமுறையை இயேசு தந்தார்.

இயேசுவின் இந்த விசுவாசப் போதனை பின்வரும் பேதுருவின் ஆர்மூட்டும் வார்த்தைகளில் விவரிக்கப்பட்டுள்ளது: ''அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்

களாய்க் களிகூர்ந்து, உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும ரட்சிப்பை அடைகிறீர்கள்'' (1 பேதுரு 1:8–9).

இதன் அர்த்தம் என்னவென்றால், இயேசு ஆசீர்வதிக்க உத்தேசித்துள்ள இந்த ஒன்பதாவது நெறிமுறை உங்களையும் என்னையும் போன்ற விசுவாசிகளின் விசுவாச அனுபவமாயிருக்கிறது. தாங்கள் இதுவரை கண்டிராதபோதும், உயிர்த்தெழுந்த இரட்சகரான அவரில் விசுவாசம் வைத்திருக்கும் அனைவரையும் இது குறிக்கிறது.

இந்தப் புத்தகத்தின் கடைசிப் பகுதியில் யோவான் எழுதுவது என்னவெனில், ''இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும், இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை நீங்கள் அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கிறது'' (20:30, 31) என்பதேயாகும்.

முடிவுரை

ஒன்றுமில்லாததில் ஒருவரை ஏற்படுத்துவது

(யோவான் 21:1–25)

யோவான் எழுதிய சுவிசேஷத்தின் முடிவுரை இப்படி ஆரம் பிக்கிறது: ‘‘இவைகளுக்குப் பின்பு இயேசு திபேரியா கடற்கரையிலே மறுபடியும் சீஷர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தினார்; வெளிப்படுத்தின விவரமாவது:சீமோன் பேதுருவும், திதிமு என்னப்பட்ட தோமாவும், கலிலேயா நாட்டிலுள்ள கானா ஊரானாகிய நாத்தான்வேலும், செபெதேயுவின் குமாரரும், அவருடைய சீஷரில் வேறு இரண்டு பேரும் கூடியிருக்கும்போது,

‘‘சீமோன் பேதுரு மற்றவர்களை நோக்கி: மீன் பிடிக்கப் போகிறேன் என்றான். அதற்கு அவர்கள்: நாங்களும் உம்முடனேகூட வருகிறோம் என்றார்கள். அவர்கள் புறப்பட்டுப் போய், உடனே படவிலேறினார்கள். அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை. விடியற்கால மானபோது, இயேசு கரையிலே நின்றார்; அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்றார். அதற்கு அவர்கள்: ஒன்றுமில்லை என்றார்கள். அப்பொழுது அவர்: நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப் போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார். அப்படியே அவர்கள் போட்டு, திரளான மீன்கள் அகப்பட்டதினால், அதை இழுக்க மாட்டாதிருந்தார்கள்.

‘‘ஆதலால் இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் பேதுருவைப் பார்த்து: அவர் கர்த்தர் என்றான். அவர் கர்த்தர் என்று சீமோன் பேதுரு கேட்டவுடனே, தான் வஸ்திரமில்லாதவனாயிருந்தபடியினால், தன் மேற்சட்டையைக் கட்டிக்கொண்டு கடலிலே குதித்தான். மற்றச்சீஷர்கள் கரைக்கு ஏறக்குறைய இருநூறு முழத் தூரத்தில் இருந்தபடியினால் படவிலிருந்துகொண்டே மீன்களுள்ள வலையை இழுத்துக்கொண்டு

வந்தார்கள். அவர்கள் கரையிலே வந்திறங்கினபோது, கரிநெருப்பு போட்டிருக்கிறதையும், அதின்மேல் மீன் வைத்திருக்கிறதையும், அப்பத்தையும் கண்டார்கள்.

‘‘இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் இப்பொழுது பிடித்த மீன்களில் சிலவற்றைக் கொண்டுவாருங்கள் என்றார். சீமோன் பேதுரு படவில் ஏறி, நூற்றைம்பத்துமூன்று பெரிய மீன்களால் நிறைந்த வலையைக் கரையில் இழுத்தான்; இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை. இயேசு அவர்களை நோக்கி: வாருங்கள், போஜனம் பண்ணுங்கள் என்றார். அவரைக் கர்த்தரென்று சீஷர்கள் அறிந்த படியினால் அவர்களில் ஒருவனும் நீர் யார் என்று கேட்கத் துணியவில்லை. அப்பொழுது இயேசு வந்து, அப்பத்தையும் மீனையும் எடுத்து, அவர்களுக்குக் கொடுத்தார்.

‘‘இயேசு மரித்தோரிலிருந்தெழுந்த பின்பு தம்முடைய சீஷருக்கு அருளின தரிசனங்களில் இது மூன்றாவது தரிசனம்’’ (21:1–14).

யோவான் சுவிசேஷத்தின் முக்கியமான நோக்கம் இருபதாம் அதிகாரத்தின் முப்பத்தியொன்றாம் வசனத்தில் முடிவதாக அநேக அறிஞர்கள் நம்புகின்றனர். இந்த முடிவுரை அதிகாரத்தில் இயேசு நியமித்த பன்னிரு அப்போஸ்தலர்களில் ஏழு பேருக்கு, விசேஷித்த விதமாகப் பேதுருவுக்கு, அவர்களை மீன்களைப் பிடிக்க அல்லாது மனுஷர்களைப் பிடிக்க அனுப்புவதாக அவர் நினைவூட்டுவதை நாம் வாசிக்கிறோம் (லூக்கா 5:10; மாற்கு 16:7; யோவான் 21:15–25).

இந்த அப்போஸ்தலர்கள் முழு இரவும் மீன்பிடிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் பலனில்லை. கரையிலிருந்தபடியே, உயிர்த்தெழுந்த இயேசு, படவுக்கு வலதுபுறமாய் வலையைப் போடும்படி சொல்கிறார். அவருடைய அறிவுரையின்படி அவர்கள் செய்தவுடனே, வலை மீன்களால் நிரம்பியது. கரையில் நின்றிருந்தவர் கர்த்தர் என அவர்கள் உடனே தெரிந்துகொண்டனர். அவர்கள் பிடித்த மீன்களின் எண்ணிக்கை நமக்குத் தரப்பட்டுள்ளது: ‘‘அவைகள் நூற்றைம்பத்து மூன்று பெரிய மீன்கள்’’ (21:11).

இந்த எண்ணின் முக்கியத்துவம் என்ன? நூற்றாண்டுகளாக, திருச்சபை பிதாக்களும், அறிஞர்களும் இந்த எண்ணின் உள்ளர்த்தத்தை நிச்சயிக்க முயன்றனர். அந்த நேரத்தில் நூற்றைம்பத்துமூன்று வெவ்வேறு இன மீன்கள் பிடிக்கப்பட்டதாகச் சிலர் கூறினர். உலகத்திலுள்ள எல்லா இனத்திலுள்ள மனிதரையும் ‘‘பிடிக்கும்’’வண்ணம் மனிதர்களைப் பிடிப்பவர்களாய் அவர்களைத் தாம் பயன்படுத்தப் போவதாக அவர் கூறியதைக் குறிக்கும்படி இந்த எண் ஒரு அடையாளமாக இருப்பதாக

அவர்கள் நம்பினார்கள் (மத். 4:19). இரட்சிப்பின் சுவிசேஷம் யூதர்களுக்கோ அல்லது விசேஷித்த வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கோ மட்டுமல்ல. கிறிஸ்து பிறந்தபோது, தேவதூதர்கள் அறிவித்ததுபோல, சுவிசேஷம் என்பது **மக்கள் அனைவருக்காகவுமே** என்பதை இயேசு நினைவூட்டுகிறார் (லூக்கா 2:10).

சிலர் அறுபது, சிலர் முப்பது, சிலர் நூறுமாகப் பயன்தருவார்கள் என்பதைக் குறித்து இயேசு சொன்ன உவமையில் உள்ளதுபோல் நூறு என்ற எண் பூரணத்தைக் குறிக்கும் எண்ணாகக் கருதப்படுவதாக இந்த ஆதித் திருச்சபை பிதாக்கள் நம்பினார்கள் (மத். 13:8). இந்த நூற்றைம்பத்துமூன்றின் விளக்கத்தின்படி அவர்களால் கற்பனைசெய்ய முடியாத அளவு ஆத்தும அறுவடையை இயேசு முன்னறிவிக்கிறார்.

நூற்றம்பத்துமூன்றிலுள்ள அந்த மூன்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவி எனவும் அவர்கள் நம்பினர். இவர்கள் மூவரும் இந்தப் பெரிய அறுவடைக்குப் பின்னால் மூலகாரணமாகவும், வல்லமையாகவும் இருப்பார்கள். இந்தப் பெரிய அறுவடையின் நோக்கம், பிதாவாகிய தேவன், குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவருக்கு மகிமையைக் கொண்டுவருவதுதான்.

அதிக அளவு மீன்பிடித்த இந்தச் சம்பவத்தில் வலை கிழியவில்லை என்ற உண்மையில் ஒரு ஆவிக்குரிய அடையாளம் உண்டு எனப் பல வருடங்களாகச் சில அறிஞர்கள் நம்பினார்கள். அப்போஸ்தலர்களுக்காகவும், இன்று மனிதர்களைப் பிடிக்கும் நமக்காகவும் கொடுக்கப்பட்ட இந்த விளக்கம் என்னவென்றால், பிடிக்கப்பட்ட மீன்களில் ஒன்றும் கிழிந்த வலை வழியாகக் கீழே விழவுமில்லை, காணாமல் போகவுமில்லை என்பதை நாம் கண்டுபிடிக்கிறோம். கிறிஸ்துவை நாம் ஏற்றுக்கொள்ளுவதற்குப் பிதா பிரதான காரணமாக இருந்து செயல்படுகிறார். நாம் சுவிசேஷத்துக்குச் செவிகொடுத்து அவரது ஆடுகளில் ஒன்றாக மாறும்போது குமாரன் மற்றும் பிதாவின் கரங்களுக்குள் பாதுகாப்பாய் இருக்கிறோம் (6:44; 10:28, 29).

பேதுருவின் உறுதிமொழி

இந்தக் கடைசி அதிகாரத்தில் இயேசுவோடு பேதுரு கொண்டிருந்த அற்புதமான உறவைப் பற்றி நாம் வாசிக்கிறோம். அநேக மொழிபெயர்புகளில் ‘‘பேதுருவே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?’’ என்று மூன்று முறை பேதுருவிடம் இயேசு கேட்கிறார். பின்வரும் இந்த ஆழமான சம்பாஷணையில் இயேசுவும் பேதுருவும் பயன்படுத்தும் கிரேக்க வார்த்தைகளின் தெளிவான அர்த்தத்தைக் கொண்டுவரும் இந்த வசனங்களின் பொழிப்புரையிலிருந்து நான் எடுத்துக் கூறுகிறேன்.

‘‘அவர்கள் போஜனம்பண்ணினபின்பு, இயேசு சீமோன் பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம், ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார்.

‘‘இரண்டாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். அவர்: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.

‘‘மூன்றாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்றார். என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு: ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான். இயேசு: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்’’ (21:15–17).

நீங்கள் இந்தப் பகுதியைப் படிக்கும்போது, மேலறையில் சீடர்களுடன் இயேசு இருந்தபோது, கர்த்தரைத் தான் மறுதலிக்க மாட்டேன் என்று பெருமையுடன் பேதுரு கூறியதைக் கேட்ட மனிதர்களில் ஆறுபேர் முன்னிலையில், ‘‘இவர்களிலும் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?’’ என்று இயேசு பேதுருவை மூன்றுதரம் கேட்டதைக் கவனியுங்கள். இரண்டாவது முறை அவர் கேட்டபோது மற்றவர்களைக் காட்டிலும் என்ற குறிப்பை அவர் சேர்க்கவில்லை.

இயேசு இந்தக் கேள்வியை ஏன் மூன்று முறை பேதுருவிடம் கேட்டார்? தேவன் மனித சரீரத்தில் இருந்தபடியினால், அவருக்குப் பதில் தெரியவில்லையா? அப்படியில்லை. முதல் முறை இயேசு இந்தக் கேள்வியைக் கேட்டபோது, வேதாகமத்தில் அநேகரால் அன்பின் அதிகாரம் என அழைக்கப்படும் அதிகாரத்தின் மத்தியில் பவுல் விவரிக்கும் முழுமையான அன்பு என்று அர்த்தப்படும் ‘‘அகாபே’’ (agape) என்ற வார்த்தையை இங்கே இயேசுவும் பயன்படுத்துவதாக யோவான் குறிப்பிடுகிறார் (1 கொரி. 13:4–7).

இயேசுவை நேசிக்கிறேன் என்று பேதுரு பதிலளிக்கும்போது அவன் அகாபே என்ற சொல்லைப் பயன்படுத்தாமல், அதற்கும் குறைவான ‘‘நட்பு’’ என அழைக்கக்கூடிய ‘‘பிலியோ’’ (phileo) என்ற கிரேக்க வார்த்தையைப் பயன்படுத்துவதாக யோவான் குறிப்பிடுகிறார். ‘‘இந்தக் கேள்விக்கான பதிலை நீர் அறிந்திருக்கிறீர். நான் ஒரு சாதாரண

நண்பன் என்பதும் உமக்குத் தெரியும்'' என்று பேதுரு இயேசுவின் கேள்விக்குப் பதிலளிக்கிறான். இயேசுவிடம் தான் கொண்ட அன்பு எனப் பேதுரு அறிக்கைசெய்வது மேலறையில் இயேசு கூறிய அகாபே அன்பு அல்ல. அந்த அன்பு தேவனிடத்திலிருந்து வருவதாகவும், முழுமையான அர்ப்பணிப்பின் விளைவாகவும் இருக்கிறது.

இந்தச் சந்திப்பில் நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான குறிப்பு என்னவென்றால், பேதுருவிடம் நாம் கண்ட மாற்றமாகும். மற்றவர்களின் அன்பைவிட அவனுடைய அன்பு உயர்ந்ததா எனப் பேதுருவிடம் இயேசு கேட்கும்போது பேதுரு மற்ற அப்போஸ்தலர்களைவிடத் தான் அதிகமாக அவரை நேசிப்பதாகப் பெருமைப்பட்டுக்கொள்ளவில்லை. ''பேதுருவே, உன் முழு இருதயத்தோடும் முழு மனதோடும் முழு ஆத்துமாவோடும் முழுப் பலத்தோடும் என்னை நீ நேசிக்கிறாயா?'' என்று கர்த்தர் கேட்பதுபோல இருக்கிறது. அதற்குப் பேதுரு ''இதற்கான பதிலை நீர் அறிந்திருக்கிறீர். ஆண்டவரே, உம்மிடத்தில் நான் கொண்ட அன்பு இயற்கைக்கு அப்பாற்பட்ட நட்பின் அளவானது என்பதை நீர் அறிவீர்'' எனப் பதிலளித்தான்.

பேதுரு அனுபவித்த ஏதோ ஒன்றை ஒரு வார்த்தையில் விவரிக்க முடியும். அந்த வார்த்தை ''உடைக்கப்பட்டது'' என்பதாகும். பேதுரு தன் ஆவியில் உடைக்கப்பட்டான். இதே காரியத்தை இன்னொரு வகையில் சொல்ல வேண்டுமானால், கலிலேயாவின் மலைப்பிரசங்கத்தில் ''ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்'' என இயேசு கற்றுத்தந்த முதல் அழகான நெறிமுறையை அவன் அனுபவித்தான் என்று சொல்லலாம். இந்த அழகான நெறிமுறையை அவன் துக்கத்தோடு இணைக்கிறான். ஏனென்றால், உடைக்கப்பட்ட அனுபவத்தை அனுபவிக்கும்போதும், அல்லது, ஆவியில் எளிமையுள்ளவர்களாயிருக்க நாம் கற்றுக்கொள்ளும்போதும், பேதுருவைப் போல நாம் துக்கப்படுகிறோம் (மத். 5:3, 4).

வேதாகமத்திலுள்ள அதிக அழகான வசனங்கள்

ஆண்டவர்மேல் தான் கொண்ட அன்பு வெறும் நட்புத்தான் என்று பேதுரு அறிக்கைசெய்யும்போது, ''என் ஆடுகளை மேய்ப்பாயாக'' என ஆண்டவர் பதிலளிப்பதைக் கவனிக்கத் தவற வேண்டாம். இந்த முழு வேதாகமத்திலும் அதிக அழகான பகுதிகளில் இதுவும் ஒன்று என நான் நினைக்கிறேன். பேதுருவிடம் இயேசு சொல்லுவதின் உண்மையான சாராம்சம்: ''என் ஆடுகளை மேய்க்கத் தவறினால் என்ன நடக்கும் என்பதை அறிந்த உன்னைப் போன்ற ஒருவன் எனக்கு வேண்டும். என் ஆடுகளின்மேல் உண்மையற்ற கோரிக்கைகளை வைக்கும் மேன்மை பெற்றவர்கள் எனக்குத் தேவையில்லை. யாருக்காக நான் மரித்தேனோ

அந்த ஆடுகளை மேய்ப்பதற்கு ஒரு உடைக்கப்பட்ட எளிமையான நபர் எனக்குத் தேவை. ஒரு கருணையுள்ள, கரிசனைப்படுகிற, என் ஆடுகளை மேய்க்கும் ஒருவர் எனக்குத் தேவை. என்னுடைய விலைமதிப்பற்ற ஆட்டுக்குட்டிகளுக்காகக் கவலைப்பட்டு அவைகளை மேய்க்கும் உன்னைப் போன்ற ஒருவர் எனக்குத் தேவை.''

இரண்டாவது முறையாக ''பேதுருவே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?'' என்று கர்த்தர் கேட்டார். இயேசு ''அகாபே'' என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதாக யோவான் மறுபடியும் குறிப்பிடுகிறார். இரண்டாவது முறை தான் ஆண்டவரை நேசிப்பதைப் பேதுரு கூறும்போது, அவன் ''பிலியோ'' என்ற வார்த்தையையே பயன்படுத்துவதாக யோவான் மறுபடியும் குறிப்பிடுகிறார். பேதுருவின் இரண்டாவது அறிக்கைக்கு மறுமொழியாக, ''என் ஆடுகளை மேய்ப்பாயாக'' என்ற அர்த்தத்திலுள்ள கிரேக்க வார்த்தைகளைப் பயன்படுத்தி இயேசு பதிலளிக்கிறார். இதற்கு அர்த்தம் என்னவென்றால் ''அப்படியென்றால், என் ஆடுகளைக் கவனித்துக்கொள். என் ஆடுகளின் தேவைகளைக் கவனிக்க உன்னைப் போன்ற ஒருவர் எனக்குத் தேவை'' என்பதாகும் (21:16).

கடற்கரையில் இயேசுவுக்கும் பேதுருவுக்குமிடையில் நடந்த வல்லமையான சம்பாஷணையில் ''பேதுருவே, நீ என்னை நேசிக்கிறாயா?'' எனக் கர்த்தர் மூன்றாம் முறையாகக் கேட்டபோது, அது உச்சக்கட்டத்தை எட்டியது. இந்த மூன்றாம் முறையில், கர்த்தர் ''பிலியோ'' என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதாக யோவான் குறிப்பிடுகிறார். திருச்சபையின் எதிர்காலத் தலைவனிடம் ''பேதுருவே, நீ என் நண்பனா?'' என இயேசு கேட்கிறார் என்று இதற்கு அர்த்தமாகும்.

இந்தக் கிரேக்க வார்த்தைகளை நான் புரிந்துகொண்டபோது, மூன்றாம் முறையாக இந்தக் கேள்வியைக் கேட்டபோது பேதுரு ஏன் துக்கப்பட்டான் என்பதைப் புரிந்துகொண்டேன். இயேசுவின் இந்த மூன்றாவது கேள்விக்கான பேதுருவின் கீழ்க்கண்ட முடிவான பதிலின் மூலம் பிரதிபலித்த உடைக்கப்பட்ட நிலையை நாம் பாராட்டலாம்: ''ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான்'' (வச. 17).

நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, இயேசுவுக்கும் மூன்று முறை தன்னுடைய கர்த்தரை மறுதலித்த அப்போஸ்தலனுக்குமிடையில் நிகழ்ந்த சம்பாஷணையின் அதிக அழகான பகுதி என்னவென்றால், பேதுரு தனது உடைக்கப்பட்ட நிலையை அறிக்கைசெய்ததும், கர்த்தர் இறுதியாக ''பேதுருவே, என் சிறிய ஆடுகளை மேய்ப்பாயாக'' என்று கட்டளை

கொடுத்ததுமாகும். இது நிச்சயமாக அழகானது என்று நான் நினைக்கிறேன்.

மூன்று முறை பேதுருவிடம் உறுதிப்படுத்தும்படியாக இயேசு பேசிய இந்த வார்த்தைகள், உயிர்த்தெழுந்த கிறிஸ்து பூரணத்துவத்தை உடைய மக்களையோ, அவர்கள் தமது மந்தையின்மீது முடியாத காரியத்தைத் திணிப்பதையோ விரும்பவில்லை என்பதைத் தெளிவு படுத்துகிறது. பூமியில் இயேசு இருந்தபோது, அவரிடமிருந்து கோப உணர்ச்சியை எழுப்பியவர்கள் பரிசேயர்கள். அதற்குக் காரணம் அவர்கள் ஜனங்களால் செய்ய முடியாத காரியங்களை அவர்களிட மிருந்து எதிர்பார்த்ததேயாகும் (மத். 23:13).

நமது வெற்றிகளும், தோல்விகளும், நமது ஆவிக்குரிய குணத்தை மேம்படுத்த இயேசு பயன்படுத்தும் கருவிகளாகும் என்பதை இயேசு நாம் நம்பும்படி செய்கிறார். நாம் இயேசுவைப் பின்பற்றும்போது, நமக்கு ஏற்படும் அனைத்தும் நாம் கற்றுக்கொள்வதற்கான அவரது கலாசாலைப் பாடத்தின் பகுதியாக இருக்கக்கூடும். அந்தக் கலாசாலை ஒருபோதும் முடிவு பெறாது.

பேதுரு என்ற இந்த மனிதன் மூலமாக பெந்தெகொஸ்தே நாளின் போது உயிர்த்தெழுந்த கிறிஸ்து ஏன் பெரிய வல்லமையை வெளிப் படுத்தினார்? கடற்கரையில் அந்தக் காலை வேளையில் இயேசுவுக்கும் பேதுருவுக்குமிடையில் நடந்த சந்திப்பின் வல்லமையை நாம் புரிந்து கொள்ளும்போது இந்தக் கேள்விக்கான பதிலை நாம் காண்போம்.

தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தும்படி தெரிந்துகொள்ளப் படுகிறவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய மூன்று பாடங்களைப் பேதுருவுக்கு ஆண்டவர் போதிக்கிறார். முதல் பாடம்: ''நீ ஒன்றுமில்லை'' (you are nobody). இரண்டாவது பாடம்: ''நீ யாரோ ஒருவர்'' (you are somebody). மூன்றாவது பாடம்: ''நான் ஒன்றுமில்லை என்று கற்றுக்கொண்ட ஒருவரை என்னால் என்ன செய்ய முடியும் என்பதை இப்பொழுது உங்களுக்குக் காட்டுகிறேன்'' என்பதாகும்.

மோசே, பேதுருவைப் போன்றவர்கள் தமக்கு ஆசீர்வாதமளிக்கும் நான்கு இரகசியங்களை அறிந்திருந்தனர். அதாவது, நான் யார் அல்லது என்ன என்பது முக்கியமில்லை . ஆனால் தேவன் யார், என்ன என்பது தான் முக்கியம். என்னாலே என்ன செய்ய முடியும், அல்லது என்ன செய்ய முடியாது என்பது உண்மையில் முக்கியமில்லை. ஆனால், தேவனால் என்ன செய்ய முடியும், அவர் நான் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறார் என்பதுதான் முக்கியம். ஆகவே,

முக்கியமான காரியம் என்னவென்றால், எனக்கு என்ன தேவை என்பதல்ல, ஆனால் தேவனுக்கு என்ன தேவை என்பதுதான். இந்த ஆவிக்குரிய இரகசியங்களை நான் கற்றபின் கிறிஸ்து என்னைப் பயன் படுத்தினபோது, என்னால் திரும்பிப் பார்த்து இப்படியாகச் சொல்ல முடிகிறது: ''என் வாழ்க்கையின் மதிப்பை நான் பரிசீலிக்கும்போது, நான் செய்த காரியங்களினால் அல்லாமல் என் மூலமாக அவர் செய்த காரியங்களுக்கு முடிவில்லாத பலன்கள் இருக்கும் என்பதை நான் உணர்ந்தேன். இந்த ஆவிக்குரிய உண்மைகளை நான் அனுபவித்த போதுதான் ''கனி நிலைத்திருக்கும்படி'' என இயேசு சொன்னதை என் வாழ்க்கை விளைவிக்கும் (யோவான் 15:16).

தான் ஒன்றுமில்லையெனப் பேதுரு கற்றுக்கொண்டதினால் பெந்தெகொஸ்தே நாளில் கிறிஸ்து பேதுருவை ஊழியம்செய்யத் தெரிந்தெடுத்தார் என நான் நம்புகிறேன். கடற்கரையில் அந்தக் காலை நேரத்தில் பேதுரு தான் ஒன்றுமில்லாதவன் என்பதைக் கற்றுக்கொண்ட படியினால், அவனைத் தேவனால் பயன்படுத்த முடியும் என்பதை இயேசு நம்ப வைத்தார். பெந்தெகொஸ்தே நாளில் தான் ஒன்றுமில்லை என்பதைக் கற்றுக்கொண்ட ஒருவர்மூலம் கிறிஸ்து என்ன செய்யக் கூடும் என்பதைத் திருச்சபையும் உலகமும் கண்டுபிடித்தது (அப். 2:32–33).

உங்கள் வாழ்க்கையில் தேவ சித்தம் (21:18–23)

அந்தச் சமயத்தில் ஒரு சீடனின் வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தைக் குறித்த ஒரு முக்கியமான பாடத்தை இயேசு கற்றுத் தந்தார். பேதுருவிடம் கர்த்தர் சொன்னதாக யோவான் இப்படி எழுதுகிறார்: ''நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைகட்டிக் கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர் வயதுள்ளவனாகும்போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான்'' (வச. 18).

இயேசு அவனுடைய வயதான காலத்தைக் குறிப்பிட்டிருக்கலாம். உண்மை என்னவென்றால், வயதான காலத்தில் சில நேரங்களில் முழுமையான கவனிப்பு மக்களுக்குத் தேவைப்படுகிறது. ஆனால், அந்த வகையில் நாம் எண்ணக்கூடாது என்பதினால் யோவான் தொடர்ந்து இவ்வாறு எழுதுகிறார்: ''இன்ன விதமான மரணத்தினாலே அவன் தேவனை மகிமைப்படுத்தப் போகிறானென்பதைக் குறிக்கும்படியாக இப்படிச் சொன்னார்'' (வச. 19).

''உன் கைகளை நீட்டுவாய்'' என்று அவர் சொல்லும்போது சிலுவை மரணத்தைப் பற்றித்தான் இயேசு தெளிவாகப் பேசுகிறார்.

சிலுவை மரணத்தை இது தெளிவாக அர்த்தப்படுத்துகிறது. நாம் பின்பு இவ்வாறு வாசிக்கிறோம்: ''பேதுரு திரும்பிப் பார்த்து, இயேசுவுக்கு அன்பாயிருந்தவனும், இராப்போஜனம்பண்ணுகையில் அவர் மார்பிலே சாய்ந்து: ஆண்டவரே உம்மைக் காட்டிக்கொடுக்கிறவன் யார் என்று கேட்டவனுமாகிய சீஷன் பின்னே வருகிறதைக் கண்டான். அவனைக் கண்டு, பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, இவன் காரியம் என்ன என்றான்'' (வச. 20–21).

இயேசுவுக்காகத் தான் மரிக்கச் சித்தமாயிருப்பதாக அடிக்கடி பேதுரு பெருமைப்பட்டுக்கொள்வான். இந்த முடிவுரை அதிகாரத்தில் பேதுரு எப்படி மரிக்கப்போகிறான் என்பதைச் சொல்லுவதற்கு உயிர்த்தெழுந்த இயேசு முடிவுசெய்துவிட்டதை நாம் வாசிக்கிறோம். அதாவது பேதுரு கர்த்தருக்காகத் தலைகீழாகச் சிலுவையிலறையப்படும் சிலாக்கியத்தைப் பெறப் போகிறான்.

பேதுரு இதைக் கேட்டதும் தன்னுடன் மீன்பிடிக்கும் தொழில் பங்குதாரராக இருந்த யோவானை நோக்கித் தன் விரலை நீட்டி இயேசு விடம் பின்வருமாறு கேட்டபோது அவனுடைய மனித இயல்பு வெளிப்பட்டது: ''அந்தக் கொடூரமான மரணத்தைச் சகிக்க எனக்குக் கிருபையையும் சமாதானத்தையும் நீர் கொடுப்பீர் என்பது எனக்குத் தெரியும். ஆனால், இவனுடைய காரியம் என்ன? அவனுடைய வாழ்க்கை மற்றும் மரணத்தைக் குறித்த உமது சித்தம் என்ன?'' உண்மை யாகவே, பேதுரு இந்தக் கேள்வியைக் கேட்டிருக்க வேண்டும். ஏனெனில் பேதுரு யோவானின்மீது அன்புபாராட்டினான். பேதுருவின் மறுதலிப்பு மற்றும் இயேசுவின் இந்த உறுதிமொழிக்கு இடைப்பட்ட கஷ்டமான காலத்தின்போது யோவான் பேதுருவிடம் அன்புகாட்டினான்.

யோவானுடைய வாழ்க்கை மற்றும் மரணத்தைக் குறித்த இயேசுவின் சித்தத்தை அறிவது பேதுருவின் வேலையில்லை என்று அவனிடம் இயேசுவானவர் கூறினார்: ''அதற்கு இயேசு: நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்கென்ன, நீ என்னைப் பின்பற்றி வா, என்றார்'' (வச. 23). வேறு வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால், ஆண்டவர் பேதுருவிடம் ''யோவானைக் குறித்த எனது திட்டம் யோவானுக்குரியதாகும். உன்னைக் குறித்த எனது திட்டம் உனது வாழ்க்கைக்குரிய எனது திட்டமாகும். அவனைக் குறித்த எனது திட்டத்திற்காக நீ கவலைப்படாதே. உன் கவலையும், முக்கியத் துவமும், உன்னைக் குறித்த என் திட்டம் என்ன என்பதைக் கண்டு பிடிப்பதிலேயே இருக்க வேண்டும். நீ என்னைப் பின்பற்றுகிறாயா என்பதே உன்னுடைய வேலையாக இருக்க வேண்டும்.''

பின்பு, ''ஆகையால் அந்தச் சீஷன் மரிப்பதில்லையென்கிற பேச்சு சகோதரருக்குள்ளே பரம்பிற்று. ஆனாலும், அவன் மரிப்பதில்லை யென்று இயேசு சொல்லாமல், நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்னவென்று சொன்னார்'' என நாம் வாசிக் கிறோம் (வச. 23).

புதிய பிறப்பினால், புதிய சிருஷ்டியாக நம்மில் ஒருவரைத் தேவன் உருவாக்கும்போது, அதற்குப் பயன்படுத்தும் அச்சை (mold) ஒவ்வொரு முறையும் தூக்கியெறிந்து விடுகிறார். இரட்சிப்பை நாம் அனுபவிக்கும்போது, நாம் அவரது கரத்தின் கிரியையாக இருக்கிறோம் (2 கொரி. 5:17–18; எபே. 2:10). தேவனுடைய ராஜ்யத்தில் பூமியிலுள்ள மற்ற மனிதர்கள் அனைவரிலுமிருந்து மாறுபட்டவர் களாகவும் ஒப்பற்றவர்களாகவும் இருக்கும்படியாக நாம் அனைவரும் வடிவமைக்கப்பட்டிருக்கிறோம் (சங். 139:18). இந்த ஒப்பற்ற தனித் தன்மையை நமது இரட்சிப்பின்மூலம் நாம் திரும்பப் பெறுகிறோம் (1 தீமோ. 2:23–26; பிலே. 19: 1 தீமோ. 4:16).

நாமனைவரும் மற்றவர்களின் வாழ்க்கையில் கர்த்தர் என்ன செய்கிறார் என்பதைக் குறித்துக் கண்டுபிடிக்க நமது நேரத்தைச் செலவழிக்கிறோம். ஆனால் ''என்னைப் பற்றிய பொறுப்பு எனக்குத் தான் இருக்கிறது. என்னைப்பற்றித் தான் நான் கிறிஸ்துவுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டும். அதனால், மற்ற விசுவாசிகளுக்கான தேவனுடை.ய திட்டத்தைக் குறித்துக் கவலைப்படக்கூடாது.''

சுருக்கம்

மூன்று வருடங்களாக இயேசுதனது நேரத்தையும், வாழ்க்கை யையும் செலவழித்து அவர்களிடம் ஒப்படைத்த பணியினை அவர்கள் ஒதுக்கிவிட்டு பழைய தொழிலுக்குச் சென்றுவிட்டனர் என்ற பயங்கரமான உண்மையை இந்த மீன்பிடிக்கும் சம்பவம் பிரதிபலிக் கிறது என்று சில அறிஞர்கள் நம்புகின்றனர். உயிர்த்தெழுந்தபின்பு இயேசு அப்போஸ்தலர்களுக்குக் காட்சி தந்து, மீன்பிடிப்பதற்காகத் தாம் அவர்களை அனுப்பவில்லை என்பதை அவர்களுக்குத் தெளிவாக நினைவுபடுத்துகிறார். மனிதர்களைப் பிடிக்கும் பணிக்கே அவர்களை அவர் அனுப்பியிருக்கிறார் (லூக்கா 5:10; மத். 4:19).

இந்த முடிவுரையில் இயேசுவினால் கற்றுத்தரப்பட்ட இரண்டாவது சத்தியம் என்னவென்றால், பெந்தெகொஸ்தே நாளில் அறுவடை செய்யப்படப் போகிறவர்களைப் பராமரிக்கிறதிலும் போஷிக்கிறதிலும் சம்பந்தப்படப் போகிற மற்ற அப்போஸ்தலர்களுக்கும் பேதுருவுக்குமான அவரது சவாலாக அமைந்திருக்கிறது. பவுல் இப்படியாக எழுதுகிறார்:

‘‘கேபாவுக்கும்... தரிசனமானார்’’ (1 கொரி. 15:5). இந்த வார்த்தைகளைப் பவுல் எழுதும்போது, பேதுருவும் இயேசுவும் சந்தித்ததை மனதில் கொண்டு ஒருவேளை எழுதியிருக்கலாம். பவுலின் இந்தக் கூற்று, கடற்கரையில் பேதுருவுக்கும் இயேசுவுக்கும் நடந்த சம்பாஷணையை ஒரு நேர்முகத் தேர்வு போன்று தோற்றமளிக்கச் செய்கிறது. பேதுருவுடன் இயேசு நடத்திய சம்பாஷணை அந்தரங்கமான ஒன்றாகத் தோன்றிய போதும் அதன் சாராம்சத்தைப் பேதுரு மற்ற அப்போஸ்தலர்களுடன் பகிர்ந்துகொண்டிருப்பான்.

இயேசுவினால் போதிக்கப்பட்டு, இந்த முடிவுரையில் பதிவுசெய்யப்பட்ட இரண்டாவது முக்கியமான சத்தியம் என்னவென்றால், அவரது உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கேறுதலுக்குப் பல வாரங்களுக்குப் பின்பு மறுபடியும் பிறந்தவர்களாக இருப்பவர்களைப் பராமரிக்கவும் போஷிக்கவும் செய்யும்படியாக அவர் பேதுருவுக்கும் மற்ற ஆறு அப்போஸ்தலர்களுக்கும் முன்பாக வைத்த சவாலாக அது இருக்கிறது. மேலறையில் இயேசுவின் போதனையில் வலியுறுத்திச் சொல்லப்பட்ட விஷயம், ‘‘நீங்கள் என்னை நேசித்தால், என் கட்டளைகளைக் கைக்கொள்ளுங்கள்’’ என்பதாகும். அவரது புதிய கட்டளை என்னவென்றால், மூன்று வருடங்கள் அவர் அவர்களை நேசித்ததுபோல அவர்களும் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டும் என்பதாகும்.

அவர்களுக்கான மூன்றாவது பிரதானமான இயேசுவின் போதனையைப் பார்ப்போம். இதை நீங்களும் நானும்கூடச் செயல்படுத்த வேண்டும். அப்போஸ்தலர்கள் தங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய தனிப்பட்ட சித்தத்தைக் கண்டுபிடிப்பதோடுகூட, அவரும் நாமும் அவருடைய பிரதான கட்டளைக்குக் கீழ்ப்படியும்போது. திருச்சபைக்கான அவருடைய ஒட்டுமொத்த சித்தத்தையும் கண்டுபிடிக்க வேண்டும்.

எனக்குப் பிடித்தமான சுவிசேஷத்தின் கடைசி வார்த்தைகள் (21:24–25)

யோவானின் அற்புதமான சுவிசேஷத்திற்கான அழகான முடிவுரைக்கு நாம் இப்போது வந்திருக்கிறோம். இந்தச் சுவிசேஷம் முழுவதிலும் யோவான் மிகுந்த தாழ்மையுடன் தன்னைக் குறித்துச் சொல்லும்போது, இயேசுவுக்கு அன்பான சீடன் என்றும், மேலறையில் இயேசுவின் மார்பில் சாய்ந்துகொண்டு கேள்விகேட்ட இன்னொரு சீடன் என்றும் சொல்லுகிறார். அவர் தன்னை ஒருபோதும் பெயர்சொல்லிக் குறிப்பிடவில்லை. எனினும், அவருடைய சுவிசேஷத்தின் முடிவில்

அவர் இப்படியாக எழுதுகிறார்: ‘‘அந்தச் சீஷனே இவைகளைக் குறித்துச் சாட்சிகொடுத்து இவைகளை எழுதினவன்; அவனுடைய சாட்சி மெய்யென்று அறிந்திருக்கிறோம்.’’

பின்வரும் ஆச்சரியமான வார்த்தைகளுடன் யோவான் தனது சுவிசேஷத்தை முடிக்கிறார்: ‘‘இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்’’ (வச. 25). ஐக்கிய நாடுகள் சபையில் போதகராக இருக்கும் என் ஆலோசகர் உலகின் பெரிய நூலகம் ஒன்றுக்குச் சென்று ‘‘இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையின் அடிப்படையில் எத்தனை புத்தகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன?’’ என்று கேட்டார். சரியான எண்ணைத் தருவது அவர்களுக்குச் சிரமமாக இருந்தது. ஏனென்றால், எண்ணுவதற்கு அவைகள் சாத்தியமில்லாத அளவுக்கு அதிகமாக இருக்கின்றன என்று அவர்கள் கூறினார்கள்.

கி. பி. 80 இல் வாழ்ந்த ஒரு ரபி தனது நீண்ட கால வாழ்க்கையில் கற்றுக்கொண்டதின் முடிவில் இவ்வாறு எழுதினார்: ‘‘வானம் முழுவதும் (தோல்) காகிதமானால், எல்லா மரங்களும் எழுதும் பேனாவானால், கடலெல்லாம் மையானாலும் என் ஆசிரியர்களிடமிருந்து நான் கற்றுக்கொண்ட ஞானத்தை எழுதப் போதுமான மை இருக்காது. இருப்பினும், ஒரு ஈ மை நிறைந்த சமுத்திரத்தில் மூழ்கி அதிலிருந்து அதால் எடுக்க முடிந்ததுபோல் ஞானிகளிடமிருந்து ஞானத்தை முடிந்த அளவு கற்றுக்கொள்ளும் சந்தோஷம் எனக்குக் கிடைத்தது.’’

மை நிறைந்த சமுத்திரத்தில் ஒரு ஈ மூழ்கி மறுபடியுமாகப் பறக்கும்போது எவ்வளவு மையை அதனால் எடுத்துச் செல்ல முடியும் என்பதை நினைத்துப் பாருங்கள். வயதான அந்த ரபி நமக்கு ஒரு உதாரணத்தைத் தருகிறார். அதன்மூலம், அறியப்படக்கூடியதின் அடிப்படையில் நாம் எவ்வளவு குறைவாக அறிந்திருக்கிறோம் என்பதை அவர் நமக்குச் சுட்டிக்காட்டுகிறார். என்னுடைய ஆலோசகர்களில் இன்னொருவர் ஊழியத்துக்கான எனது படிப்பு உணர்வில்லாத அறியாமையிலிருந்து உணர்வுள்ள அறியாமைக்கு மட்டுமே கடந்துசெல்லுகிறது என்று கூறியிருக்கிறார். நாம் எவ்வளவு அதிகமாக அறிகிறோமோ, அவ்வளவாக நாம் அறியாத காரியம் அதிகமாக இருக்கிறது என்று அறிந்துகொள்கிறோம்.

இந்த உணர்வோடு யோவான் தனது சுவிசேஷத்தை முடிக்கிறார். ‘‘இயேசுவைப் பற்றிய இந்த அனைத்துக் காரியங்களையும் நான் உங்களுக்குச் சொல்லிவிட்டேன். ஆனாலும் சொல்லுவதற்கு இன்னும் அநேகக் காரியங்கள் உண்டு. இந்தக் காரியங்களில் சிலவற்றை மட்டும் தெரிந்தெடுத்து, என்னுடைய இந்தச் சாட்சி மெய்யென்று

அறிந்துகொண்டு, இயேசுவே தேவனுடைய குமாரன் என்று நீங்கள் விசுவாசித்தால் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வீர்கள் என்பதையும் நான் அறிவிக்கிறேன்.''

இந்தச் சுவிசேஷத்திற்கான இன்னொரு சரியான இறுதி வாசகம் என்னவென்றால், புதிய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகத்துக்கு அருகில் காணப்படும், இந்த அன்பான சீஷன் எழுதிய தூண்டுதல் பெற்ற நிருபத்தின் கடைசி அதிகாரத்திலுள்ளதாகும்: ''தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார். அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்'' (1 யோவான் 5:11, 12).

ஒரு பணக்கார மனிதன் மரித்தபோது, அவர் அதிகமான சொத்தைப் பெற்றிருந்தபடியால், அவருடைய உயில் வாசிக்கப்படும்போது குடும்பத்தினரும், உறவினரும், நண்பர்களும் , தொழில் உதவியாளர் களும் திரளாகக் கூடியிருந்தார்கள். கடைசி உயில் வாசிக்கப்படுவதற்கு முன்பாக அவருடைய மகனின் படம் ஏலம் விடப்படவேண்டுமென்று அந்தப் பணக்காரார் தெரிவித்திருந்தார். அந்த மகன் தன் தகப்பனாருக்கு அதிகத் தொல்லைகொடுத்துவந்தவன். அவனை விரும்புகிறவர்கள் அதிகமாக இல்லை.

ஏலம் விடுபவர் ஏலத்தைத் துவங்கினார். நீண்ட நேரமாகிய போதிலும் ஒருவரும் ஏலம் கேட்கவில்லை. இறுதியில் அந்தப் பையன் சிறுபிள்ளையாக இருந்தபோது, அவனைக் கவனித்துக்கொண்ட வயதான ஆயா அவளிடம் இருந்த ஐந்து டாலருக்கு அந்தப் படத்தை ஏலத்துக்குக் கேட்டாள். வேறு எவரும் ஏலம் கேட்காதபடியால் அவளிடம் அந்தப் படம் ஒப்படைக்கப்பட்டது. பிறகு உயிலைப் படிக்க ஆரம்பித்தனர். அதன் துவக்கத்திலேயே ''எனக்குச் சொந்தமான எல்லாச் சொத்துகளும் என்னுடைய மகனின் படத்தை வாங்கும் நபருக்கே சேரும்'' என்று எழுதப்பட்டிருந்தது.

இந்தக் கதையில் சொல்லப்பட்டவாறுதான் யோவான் தனது சுவிசேஷத்தையும், அந்தச் சுவிசேஷத்தின் பலனாக அவர் கருதும் அந்தச் சிறிய நிருபத்தையும் முடித்துள்ளார்: ''குமாரனை உடையவன் எல்லா வற்றையும் உடையவன், குமாரன் இல்லாதவன் ஒன்றுமில்லாதவன்.''

தனிப்பட்ட முறையில் வாழ்க்கையில் செயல்படுத்துதல்

''இயேசு யார்?'' என்ற கேள்வியைக் கேட்டுப் பதிலளித்த இந்த அற்புதமான சுவிசேஷத்தின் இருபத்தியொரு அதிகாரங்களை நாம்

இப்பொழுது கடந்துவந்திருக்கிறோம். இயேசுவே கிறிஸ்து, மேசியா, தேவனின் ஒரேபேறான குமாரன் என்ற மகிமையான உண்மையை நிரூபிக்கும் ''அடையாளங்கள்'' என அவர் அழைக்கும் இயேசுகிறிஸ்து வின் சித்திரங்கள் கொண்ட இயற்கைக்கு அப்பாற்பட்ட கலைக்கூடத்தை யோவான் நமக்குத் தருகிறார்.

மறுபடியும் மறுபடியும், ''விசுவாசம் என்றால் என்ன?'' என்ற கேள்வியை நாம் கேட்டும் பதிலளித்துமிருக்கிறோம். இந்தச் சுவிசேஷத் திலிருந்து விசுவாசம் வெறும் அறிவுபூர்வமானதல்ல என்று நாம் கற்றுக்கொண்டோம். விசுவாசம் என்பது நியாயமான கூற்றுகளைச் சேர்ப்பதோ, நியாயமான முடிவுக்கு வருவதோ அல்ல. அப்படி அவைகள் மாத்திரம் விசுவாசத்திற்குப் போதும் என்றால், நல்மனதுடன் கூடிய யாரானாலும், எல்லாரும், நம்பிக்கை கொள்வார்கள். பயன்பெற்ற மக்களனைவரும் அறிவைச் சார்ந்து விசுவாசிகளாவார்கள். பயன் பெறாதவர்கள் அனைவரும் விசுவாசிக்கமாட்டார்கள். சரியானதைத் தெரிந்தெடுக்க விசுவாசம் நமது சித்தத்தோடும் நமது சுதந்திரத்தோடும் தொடர்புடையது.

விசுவாசம் என்பது இரட்சிப்புக்கும் உயிர்த்தெழுந்து ஜீவிக்கிற கிறிஸ்துவுடன் உறவுகொள்ளும்படியும் நம்மை நடத்தும் பரிசுத்த ஆவியானவருக்கு நாம் செயல்படும் விதத்தை அடிப்படையாகக் கொண்டதாகயிருக்கும். அதனால், இந்த அற்புதமான சுவிசேஷத்தைப் படிக்கும்போது, கிறிஸ்துவைக் காண்பவர்களாகவும், உயிர்த்தெழுந்து ஜீவிக்கிற கிறிஸ்து உங்களுடன் உறவுகொள்ளவும், அவருக்குப் பதிலளிக்கவும் வேண்டுமென விரும்புவதை உணர்ந்துகொள்ளும்படி யாகப் படிக்கவும். பரிசுத்த ஆவியானவர் நமது ஆசிரியர் என நாம் கற்றுக்கொண்டதினால் இந்தச் சுவிசேஷத்தை நீங்கள் வாசிக்கும்போது, தேவனாகிய பரிசுத்த ஆவியானவரிடம் ஆவிக்குரிய சத்தியத்தை உங்களுக்கு வெளிப்படுத்தும்படிக் கேட்கவும்.

''எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்?'' என்ற கேள்வியோடு, கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து ஏசாயா தனது பிரதான தீர்க்கதரிசனத்தை ஆரம்பிக்கிறார். ''கர்த்தருடைய புயம் (வல்லமை) யாருக்கு வெளிப்பட்டது?'' என்று எழுதும்போது, அவரது கேள்விக்கு அவர் பதிலளிக்கிறார். விசுவாசிக்கிறவர்களுக்குச் சத்தியம் வெளிப்படுத்தப்பட்டது (ஏசாயா 53).

யோவானின் சுவிசேஷத்தை என்னுடன் சேர்ந்து நீங்கள் படித்த போது இந்தக் காரியங்கள் எல்லாம் உண்மையென்று நீங்கள் புரிந்து கொள்ளும்படியாகப் பரிசுத்த ஆவியானவர் செய்கிறார். இயேசு யார் என்று யோவான் நமக்குச் சொல்லியிருக்கிறார். விசுவாசம் என்ன

என்றும் அவர் நமக்குச் சொல்லியிருக்கிறார். வாழ்க்கை என்ன என்று அவர் சொல்லியிருக்கிறார். யோவான் திரும்பத் திரும்ப இந்த மூன்று கேள்விகளை எழுப்பியபோது, இந்தக் கேள்விகளுக்கான பதில்களை நீங்கள் கண்டுபிடித்தீர்களா? ஏனென்றால் பரிசுத்த ஆவியானவர் உங்களுக்காக இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்.

இருபதாம் அதிகாரத்தில் யோவான் அளிக்கும் கடைசியும் அடிப்படையானதுமான அடையாளத்தைக் குறித்து உங்களுக்கு நான் சவால் விடுகிறேன். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நீங்கள் நம்புகிறீர்களா? இயேசுவின் உயிர்த்தெழுதலின் அர்த்தம் அவர் இருக்கிறார் என்பதாகும். இருந்தார் என்பதல்ல, இருக்கிறார். அது மட்டு மல்லாது அவரில் நம்பிக்கை வைத்து, தங்களின் வாழ்க்கையில் அவரை ஏற்றுக்கொள்ளுபவர்களின் வாழ்க்கையில் அவர் இன்னமும் கிரியை செய்கிறார் (யோவான் 1:12, 13; வெளி. 3:19–20). இந்த அற்புதமான சுவிசேஷத்தில் நீங்கள் சந்திக்கும் கிறிஸ்துவுடன் உறவுகொள்வது சாத்தியமாகும். யோவானின் இருபத்தொரு அதிகாரங்கள் முழுவதையும் நீங்கள் படிக்கும்போது, கிறிஸ்துவின் பரிசுத்த ஆவியானவர் இந்த ஆவிக்குரிய அற்புதம் தனிப்பட்ட முறையில் உங்களுக்குச் சாத்தியமானது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளுமாறு செய்கிறார்.

இந்தச் சுவிசேஷத்தை நான் ஐம்பத்துமூன்று வருடங்களாகப் படித்தும் போதித்தும் இருந்தாலும், இந்தச் சுவிசேஷத்தின் மூலம் உங்களை வழிநடத்துவது ஆழமாக என்னைப் பாதித்துவிட்டது. கிறிஸ்துவின் சித்திரங்களைக் கொண்ட இந்த ஆர்வமூட்டும் கலைக் கூடத்தின் வழியாக நான் சென்றபோதும், ''இயேசு யார்?'' ''விசுவாசம் என்றால் என்ன?'' ''வாழ்க்கை என்றால் என்ன?'' என்ற அந்தக் கேள்விகளுக்கு யோவானின் அழகான பதில்களை நான் பரிசீலிக்கும் போதும் அது என்னை ஆச்சரியத்தில் மூழ்க வைப்பதைக் காண்கிறேன்:

''அவர் இருந்தார் என்ற நிச்சயமே அவர்களுக்கு இல்லாதிருந்த போதிலும் அவர் இருக்கிறார் என நான் நம்புகிறேன். அவர் செய்தார் என்ற நிச்சயமே அவர்களுக்கு இல்லாதிருந்தபோதிலும் அவர் இன்றும் செய்கிறார் என்று எனக்குத் தெரியும். இந்த நான்காவது சுவிசேஷத்தில் இயேசுகிறிஸ்து என்பவர், தாம் இருக்கிறேன் என்று சொல்கிற விதமாகவே இருக்கிறார். அதுமட்டுமல்ல, தாம் சொல்வதனைத்தையும் அவரால் செய்ய முடியும். இயேசுகிறிஸ்து நாம் யார் என்று சொல்லுகிற விதமாகவே நீங்களும் நானும் எல்லாமுமாக இருக்கிறோம். நாம் செய்ய முடியும் என்று இயேசுகிறிஸ்து சொல்லுகிற விதமாகவே எல்லாவற்

றையும் நம்மால் செய்ய முடியும். ஏனென்றால், அவர் இருக்கிறார். அது மட்டுமல்ல, அவரை நாம் விசுவாசித்துப் பின்பற்றும்போது அவர் உங்களுடனும் என்னுடனும் இருக்கிறார்.

நான் ஏற்கெனவே விளக்கியதுபோல, இந்தச் சுவிசேஷத்தின் நூற்று முப்பது வசனங்களின் விரிவுரை வானொலியில் ஒலிபரப்பப்பட்டதின் விளைவாக உருவாகிய ஆறு சிறு நூல்களில் இது ஆறாவது கடைசி சிறு நூலாகும்.

வேதாகமத்தில் மற்ற எந்தப் புத்தகத்தையும்விட இந்தச் சுவிசேஷத்தை இந்த வகையில் கற்றுத் தரும்போது, இயேசுகிறிஸ்துவில் இரட்சிப்பின் விசுவாசத்திற்குள் அதிகமான மக்கள் வருவதை நான் தனிப்பட்ட முறையில் கண்டிருக்கிறேன். இப்படிக் கற்பதில் விசுவாசிகள் அதிகமான பக்தியூட்டும் ஆசீர்வாதத்தைப் பெறுகிறார்கள். ஆனால், சுவிசேஷரீதியான பின்னணியிலும் இந்தக் கல்விக்கு நான் பரிந்துரைக்கிறேன். இது அவிசுவாசிகளுக்கான எனக்குப் பிடித்தமான வேதாகமக் கல்வியாகும். இதை நான் ''சுவிசேஷரீதியான வேதாகமக் கல்வி'' என்று அழைக்கிறேன்.

இறுதி அறைகூவல்

மறுபடியும் பிறக்கும்படி நீங்கள் விரும்புகிறீர்களா? இந்தச் சுவிசேஷத்தில் யோவான் உங்களுக்குச் சொல்லும் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ள நீங்கள் விரும்புகிறீர்களா? இந்த உலகில் மிகப்பெரிய தீர்மானத்தை எடுக்கவும், இயேசுகிறிஸ்துவின் பிரதான அறிவிப்பை விசுவாசிக்கவும் நீங்கள் ஆயத்தமாக இருக்கிறீர்களா? உங்கள் வாழ்க்கையை இயேசுவுக்காக நிபந்தனையில்லாமல் அர்ப்பணிக்க நீங்கள் விரும்புகிறீர்களா? இந்த உலகின் பிரதான வல்லமையை இப்போது பெற்றுக்கொள்ளும்படியாகவும், இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றும் பாதையில் செல்லத் துவங்கவும் உங்களை நீங்களே ஒப்புக் கொடுக்க முடிவுசெய்துவிட்டீர்களா? இயேசுவோடு உங்கள் ஆவிக்குரிய விசுவாசப் பயணத்தை ஆரம்பிக்க நீங்கள் விரும்பினால், இருதயத்தில் உண்மையோடு, என்னோடு சேர்ந்து தேவனிடம் இந்த ஜெபத்தை ஜெபியுங்கள்:

''அன்பான பரலோக பிதாவே, நான் பாவியென்று அறிக்கை செய்கிறேன். உமது குமாரன் இயேசுகிறிஸ்துவை நான் இரட்சகராக விசுவாசிக்கிறேன். என்னுடைய ஒவ்வொரு பாவமும் மன்னிக்கப்படும் படியாகச் சிலுவையில் அவருடைய மரணத்தில் என் முழு நம்பிக்கை யையும் வைக்கிறேன். என்னுடைய எல்லாப் பாவங்களையும் விட்டு

இப்போது திரும்புகிறேன். உம்மிடமிருந்து பிரிந்திருந்த நான் மறுபடியுமாக ஒப்புரவாக விரும்புகிறேன்.

‘‘மரித்தோரிலிருந்து அவர் உயிர்த்தெழுதலில் வைத்த விசுவாசத்தினால், அவர் என் இருதயத்திலும் வாழ்க்கையிலும் பிரவேசித்து, என்னோடு உறவுகொள்ளும்படி நான் வேண்டுகிறேன். இயேசுகிறிஸ்து என் ஆண்டவரும் இரட்சகருமாயிருக்கிறார் என்ற என் விசுவாசத்தை நான் அறிக்கைசெய்வதோடுகூட என் வாழ்க்கையை எந்தவித நிபந்தனையுமில்லாமல் அவருடைய ஆளுகைக்கும் வழிநடத்துதலுக்கும் அர்ப்பணிக்கிறேன். என்னுடைய வாழ்க்கைக்கான உம்முடைய பிரதான சித்தத்தின் திட்டத்தோடு சரியான ஒழுங்குக்குள் என் வாழ்க்கையைக் கொண்டுவாரும். உமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும்போது அவரது வல்லமையிலும் அதிகாரத்திலும் சார்ந்து, அவரை உயர்த்தும்படியும், உமது மகிமைக்காக வாழவும் எனக்கு உதவிசெய்யும். இந்தப் பிரதானமான மற்றும் நித்தியமான இரட்சிப்பை எனக்காக வைத்திருப்பதற்காக உமக்கு நன்றி கூறுகிறேன். ஆமென்.’’

(யோவான் 3:3–8; 1:12–13; 1 பேதுரு 1:22–3:3; பிலிப்பியர் 1:6; 2:13; எபேசியர் 2:8–10).

இந்த ஜெபத்தை நீங்கள் ஜெபித்ததும், எங்களுக்கு எழுதித் தெரிவித்தால், உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியில் உங்களை ஊக்கப்படுத்த பயன்தரும் நூல்களை உங்களுக்கு அனுப்பி வைப்போம்.